புதிய சமுதாயம்

KDN 10657

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

17



PUTHIYA SAMUDHAYAM

50

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

மாதமிருமுறை மலரும் குடும்ப இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2008 கார்த்திகை 10

கம்பம் 1 ∴ (25-11-1977) ∴ குடும்பம் 17

நேரடி ஆட்சி

அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்த்ததுபோல் கிளந்தான் மாநிலத்தில் அவசரகாலம் பிரகடனம் செய்யப்பட்டு அங்கு மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.

தேசத்தின் பாதுகாப்பை முன்னிட்டும் கிளந்தான் மாநிலம் தாய்லாந்தின் எல்லை ஓரமாக இருப்பதால் அங்கு பயங்கரவாதிகள் ஊடுருவல் செய்து இந்த அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்திக்கொள்ள முனையக்கூடும் என்னும் அச்சத்தாலும் மத்திய அரசாங்கம் நேரடி ஆட்சியை நிறுவும் அவசியம் ஏற்பட்டிருப்பதாகப் பிரதமர் டத்தோ ஹுசேன் ஓன் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையில் விளக்கமாகக் கூறியிருக்கிறார்.

மத்திய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து அகில மலாயா இஸ்லாமியக் கட்சியின் தலைவரான டத்தோ ஹாஜி முகமது அஸ்ரியும் அவருடைய சகாக்கள் நால்வரும் மத்திய அரசாங்கத்தில் தாங்கள் வகித்துவந்த பதவிகளை விட்டு விலகி இருக்கின்றனர். என்றாலும் தேசிய முன்னணியில் இஸ்லாமியக் கட்சி தொடர்ந்து அங்கம் வகித்து வரும் என்றும் கட்சியின் பொதுக்கூட்டம் இப்பிரச்சினைமீது ஒரு முடிவெடுக்கும்வரை அதில் ஏதும் மாற்றம் இராது என்றும் டத்தோ அஸ்ரி அறிவித்திருக்கிறார்.

கிளந்தானில் மத்திய அரசாங்கம் அமைத்திருக்கும் நேரடி ஆட்சி, தற்காலிகமான ஒரு பரிகாரமே என்பதையும் அங்கு நிலைமை மாமூல் ஆனவுடன் மறுபடியும் ஜனநாயக ஆட்சிக்கு வழிகோலப்படுமென்றும் பிரதமர் உறுதியளித்திருப்பதால் இஸ்லாமியக் கட்சித் தலைவர்கள் தேசத்தின் பொதுநலனைக் கருத்தில் கொண்டு பதற்றமின்றி நிதானமாகச் செயல்படுவர் என்று நம்புகிறோம். தேசிய முன்னணியை விட்டு இஸ்லாமியக் கட்சி வெளியேறுவதால் யாருக்கும் நன்மை ஏற்படப்போவதில்லை. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிற பொதுத்தேர்தலில் மலாய் மக்களின் வாக்குகள் சிதறுவதற்கே அது வழி விடும். அது தேசிய முன்னணியின் பெரும்பான்மை வெற்றியை அதிகம் பாதித்துவிடாது என்றாலும், நாடு தற்சமயம் அனுபவித்துக்கொண்டிருக்கும் அரசியல், பொருளியல் நிலைத்தன்மைக்கு அதனால் சற்றுப் பாதிப்பு ஏற்படுமென்பதை மறுப்பதற்கில்லை. ஆகவே இஸ்லாமியக் கட்சித் தலைவர்களும், அம்னோ தலைவர்களும் தேசிய முன்னணியின் கட்டுக்கோப்பைப் பாதுகாக்கும் முயற்சியில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்பதே நமது விண்ணப்பமாகும்.

மற்றொரு கூட்டுறவுக் கழகம்

ம. இ. கா. வின் தேசியத் துணைத்தலைவரும், சுங்கை சிப்புட் நாடாளுமன்ற உறுப்பினருமான மாண்புமிகு சாமிவேலுவின் முயற்சியினால் தொழிலாளர் மேம்பாட்டுக் கூட்டுறவுக் கழகம் ஒன்று அண்மையில் சுங்கை சிப்புட்டில் துணைப்பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் மகாதிர் அவர்களினால் தொடக்கிவைக்கப்பட்டுள்ளது. பத்து ஆண்டு காலத்தில் 20,000 இந்தியக் குடும்பங்களுக்குச் சொந்த வீடுகளை கட்டித் தருவது இக் கூட்டுறவுக் கழகத்தின் முக்கியப் பணியாக இருக்கும் என்று திரு. சாமிவேலு அறிவித்திருக்கிறார்.

ஏற்கனவே இந்திய சமூகத்திற்கு உதவுகிற நோக்கத்தோடு தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம், நேசா கூட்டுறவுச் சங்கம், தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், மணிமன்றங்களின் மாஜு ஜெயா கூட்டுறவுச் சங்கம் ஆகியவை தேசிய அளவில் செயல்பட்டு வரும்போது அதற்குமேலும் மற்றொரு கூட்டுறவுக் கழகம் அமைவது அவசியமா என்னும் கேள்வி எழுவது இயல்பேயாகும். அதுவும் ம இ கா. வுக்கென்று நேசா கூட்டுறவு தனியே இயங்கி வரும்போது ம. இ. கா. வில் முக்கியப் பதவிகளை வகித்துவருகின்ற தலைவர்களைக் கொண்டு மற்றொரு கூட்டுறவுக் கழகம் தோற்றுவிக்கப்படுவது முறையா என்னும் கேள்வியும் எழுவதில் வியப்பில்லை. அத்துடன் தொழிலாளர் மேம்பாட்டுக் கூட்டுறவுக் கழகத்திற்கும் ம. இ. கா. விற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்று ம. இ. கா. தேசியத் தலைவர் அமைச்சர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அறிவித்ததையும் நினைவு கூரவேண்டும்.

எங்கள் அலுவலகம்:
131, ஜாலான் துவாங்கு
அப்துல் ரஹ்மான், [2-ஆவது மாடி]
கோலாலம்பூர் 01-08.
அஞ்சல் பெட்டி எண்: 2066,
தொலைபேசி: 80839.

களுக்கிடையே தோன்றியிருக்கிற தொழிலாளர் மேம்பாட்டுக் கூட்டுறவுக்கழகம், மக்கள் மனதில் எழுந்துள்ள இந்த ஐயங்களையெல்லாம் போக்குகின்ற விதத்தில் செம்மையாகவும் கவனமாகவும் செயல்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

இந்திய சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு மேலும் பல கூட்டுறவுக் கழகங்கள் தேவை என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அதே சமயத்தில் தோன்றுகிற கூட்டுறவுக் கழகங்கள் ஒன்றுக்கு ஒன்று ஆரோக்கியமான முறையில் போட்டிபோட்டுச் சமூகத்தை மேலோங்கச் செய்வதற்கு முனைப்பாகப்பாடுபட வேண்டும் என்பதே நமது விருப்பமாகும்.

ஆனால் இந்தப் போட்டா போட்டி சமூகத்திலோ, ம.இ.கா. விலோ பிளவுகளை உண்டாக்கித் தற்சமயம் அரசியல் அரங்கில் இருந்துவருகிற ம.இ.கா. வின் கட்டுக்கோப்பைக் குலைத்துவிட அனுமதிக்காதவாறு பார்த்துக்கொள்வது புதிய கூட்டுறவுக் கழகத்தைத் தோற்றுவித்திருக்கும் திரு. சாமிவேலுவின் தலையாய பொறுப்பு என்பதைச் சுட்டிக் காட்டக் கருதுகிறோம்.

இணையற்ற தியாகம்

இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அண்மையில் விமான விபத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக மயிரிழையில் உயிர் தப்பியது அந்நாட்டு மக்களின் நற்பேறு என்றுதான் கருதவேண்டும். இந்த விபத்தில் விமான மோட்டி உட்பட விமானச் சிப்பந்திகள் ஐவருமே உயிரிழந்துவிட்டனர். ஆனால் பிரதமர் மொரார்ஜியும் அவருடைய

கள் இருபதுக்கு மேற்பட்டவர்களும் இந்தக் கோரவிபத்தில் அதிசயமான முறையில் உயிர் தப்பிப் பிழைத்துவிட்டனர். இவ்வாறு தாமும் மற்ற பிரயாணிகளும் உயிர்தப்பியதற்கு விமானச்சிப்பந்திகளின் இணையற்ற தியாகமே காரணமென்று இந்தியப் பிரதமர் மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்.

இத்தகைய விபத்துக்களின் போது விமானங்கள் "பெல்லி லேண்டிங்" எனப்படும் மத்தியப் பகுதியைத் தரையில் இறக்குவதே சாதாரணமாகக் கையாளப்படுகிற முறையாகும். அவ்வாறு செய்திருந்தால் விமானத்தின் நடுப்பகுதியிலிருந்த இந்தியப் பிரதமரும் மற்ற பிரயாணிகளும் உயிர் இழக்கும் அபாயம் நேர்ந்திருக்கும். தங்களின் உயிரைக் கொடுத்துத் தங்கள் பிரதமரையும் மற்ற பிரயாணிகளையும் எப்படியும் காத்துவிடவேண்டுமென்ற தியாக உணர்வோடு அந்த விமானச் சிப்பந்திகள் ஐவரும் "நோஸ் லேண்டிங்" எனப்படும் முறையைக் கையாண்டு தங்கள் உயிர்களைத் தாங்களே பலியிட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சொந்த உயிர் என்பது உலகில் பிறந்த எவருக்குமே விலை மதிப்பு இல்லாதது. அப்படி இருந்தும் தங்களின் உயிர்களைப் போக்கி நாட்டுப் பிரதமரின் உயிரைக் காப்பாற்றி இருக்கும் இந்தத் தியாக உள்ளங்களை எத்தனை முறை போற்றினாலும் தகும். தியாகத்திற்கு இணையற்ற எடுத்துக்காட்டாக இவர்கள் எப்பொழுதும் மனிதகுலத்தில் ஒளிவீசித்திகழ்வது திண்ணம்.

தமிழ்வாணன் மறைந்தார்

'துணிவே துணை' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு இலட்சக்கணக்கான தமது வாசகர்களிடையே துணிவின் மேன்மையை வேரோடச் செய்துவந்த 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணன் அவர்களின் திடீர் மறைவு தமிழ்ப் பத்திரிகை உலகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தொடக்கத்தில் குழந்தைகளின் இதழாகத் தொடங்கிய "கல்கண்டு", காலப்போக்கில் பெரியவர்களும் விரும்பி இடைவிடாமல் படிக்கத்தக்க முதிர்ச்சியை அடைந்தது.

அரசியல் தலைவர்களுக்கும், திரையுலக நட்சத்திரங்களுக்கும் இருந்துவரும் செல்வாக்கை விடப் பத்திரிகையாளர் என்னும் முறையில் தமிழ்வாணன் மக்களிடையே கூடுதலான செல்வாக்கைப் பெற்றுவந்தார். அவருடைய கறுப்புக் கண்ணாடியும், தொப்பியும் நிலையான அடையாளங்களாக வாசகர்களிடையே பதிந்துவிட்டன. சகலகலா வல்லுனர் என்று அவர் தம்மைத்தாமே விளம்பரப்படுத்திக்கொள்கிற அளவுக்கு அவருக்குத் துணிவு இருந்தது. அது மட்டுமன்றி அந்த அளவுக்கு அவரிடம் எழுத்தாற்றலும், சரக்கும் இருந்தன என்பதற்கு அவர் எழுதி வெளியிட்டிருக்கும் எண்ணற்ற பலதுறை நூல்களே தக்க சான்றாகும்.


எழுத்தாளர் என்னும் முறையிலும், ஓர் ஏட்டின் ஆசிரியர் என்னும் முறையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் அவர் யாரும் பார்த்துப் பரிதாபப்படவேண்டிய நிலையில் தம்மை வைத்துக்கொள்ளாமல் வெற்றியை நோக்கி ஒவ்வொரு நாளும் பீடுநடை போட்டு வந்தார். அவ்வகையில் வாழ்க்கையை வளமாக அமைத்துக்கொள்வதற்கு எழுத்தாளர்களுக்கு ஒரு முன்னோடியாகவும் அவர் நடந்து வந்தார். தமிழ்வாணன் எழுத்துக்களும் லட்சக்கணக்கான இளைஞரின் நெஞ்சங்களில் அவர் ஏற்றி வைத்திருக்கும் "துணிவே துணை" எனும் தீபமும் என்றும் ஒளிவீசும் என்னும் நம்பிக்கையோடு அவருடைய ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அட்டைப் படம்

சுதந்திரத் தந்தை துங்கு அவர்களிடம் மெர்தேகா குழந்தைகளில் ஒருவரான திரு. தாமரைச் செல்வம் பரிசு பெறுகிறார்.

வண்ணப்படம்: மாயன்

டாக்டர் பி.பி. அண்ணாவுடன் ஒரு சந்திப்பு



அமர்ந்திருப்பவர்கள்:- இடமிருந்து டாக்டர் பி.பி. நாராயணன், திருமதி நாராயணன், பேர்த்தி பிரீதி சந்திரன், மகள் விநோதினி சந்திரன், மருமகன் திரு. சந்திரன்நாயர் (வழக்கறிஞர்).

நிற்பவர்கள் இடமிருந்து: புதல்வர்கள் பிரேம் குமார், சுரேஷ், சிவதாஸ், புதல்வி சுஜாதா.

''எம். ஜி. ஆர். முதலமைச்சராக வரணும்னு நான் விரும்பறேன். ஏன்னா, அவரு முதலமைச்சரா வந்துட்டா படத்திலே நடிக்க மாட்டாரு. எம். ஜி. ஆர். படத்திலே நடிக்காட்டா, நமக்குள்ள சினிமா மோகம் ரொம்பக் குறைஞ்சிடும். சினிமா மோகம் குறைஞ்சிருச்சினா நமக்குப் பணம் மிஞ்சும். பணம் மிஞ்சுனா நம்மோட எதிர்காலம் நல்லா அமையுமில்லையா?"

ஒரு சந்தர்ப்பத்தில் தோட்டப் பாட்டாளிகளிடையே பேச நேர்ந்தபோது மேற்கண்டவாறு கூறி, நமக்குள்ள சினிமா மோகத்தையும், அதைக் குறைத்தால் நமது வாழ்வு எப்படி வளமடையும் என்பதையும் மிகவும் நாசுக்காகவும் நகைச்சுவையாகவும் எடுத்துரைத்தவர் வேறு யாருமல்ல, தோட்டத் தொழிலாளர்களால் பி.பி. அண்ணா எனப் பாசத்தோடு அழைக்கப்படும் டாக்டர் பி. பி. நாராயணன் அவர்கள்தான்.

அனைத்துலக சுயேச்சை தொழிற் சங்கங்கள் சம்மேளனத்தின் தலைவர், மலேசியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவர், தனிப்பட்ட ரீதியில் மலேசியாவின் -ஏன், உலகளவிலும்கூட—மிகப் பெரிய தொழிற்சங்கமான தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர்- இத்தனைப் பதவிகளையும் வகித்து உலகளவில் தமக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மலேசிய நாட்டுக்கும் தமது ஆற்றலாலும், அனுபவத்தாலும் பெருமை தேடித் தந்துகொண்டிருப்பவர் டாக்டர் பி. பி. என்.

பிரபலமான தொழிற்சங்கவாதி என்னும் முறையில் அவரைப் பேட்டி காணச் சென்றிருந்தபோது அவர் அப்போதுதான் நமது மூலத்தொழில் அமைச்சர் டத்தோ மூசா ஹீத்தாம் அவர்களைச் சந்தித்துவிட்டுத் தமது அலுவலகத்திற்குத் திரும்பியிருந்தார்.

"ரப்பரின் நூறாண்டு நிறைவை முன்னிட்டு அதன் நினைவாக தங்கம், வெள்ளி நாணயங்கள் வெளியிடும்படி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன். அது சம்பந்தமாகப் பேச அமைச்சர் அழைத்திருந்தார்," என்று தாம் மூலத் தொழில் அமைச்சரைச் சந்தித்த காரணத்தை டாக்டர் பி. பி. என். விளக்கினார். அத்தகைய நாணயங்களை வெளியிடுவதற்குக் கொள்கையளவில் அமைச்சர் ஒப்புக்கொண்டதாகவும் அவர் சொன்னார்.

பூர்வாங்க-சம்பிரதாய உரையாடல்களுக்குப் பிறகு பேட்டி துவங்கியது.

கே: தோட்டத் தொழிலாளர் சங்கம் எப்போது துவக்கப்பட்டது?

ப: 1946-ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் தேதி நெகிரி செம்பிலான் இந்தியர் சங்கம் என்று துவக்கப்பட்டது. அதற்கு முந்தியே 27 சங்கங்கள் நாட்டில் ஆங்காங்கே சிறிய அளவில் இயங்கின. அவை பிறகு 11 சங்கங்களாகின. அதன் பின்னர் ஐந்து சங்கங்களாக அவை இணைந்தன. பிறகு ஐந்து மூன்றாகி, மூன்று ஒன்றாகியது. அப்படி ஒன்றாகிய சங்கம்தான் இந்தத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம். 27 சங்கங்களின் கூட்டுத்தான் தற்போதைய சங்கம்.

கே: இப்படிப்பட்ட சங்கம் ஒன்றைத் துவக்க அப்போது முக்கிய சம்பவங்கள் ஏதும் பின்னணியாக அமைந்தனவா?

ப: ஆமாம், சயாம் மரண ரயில்வே என்பார்களே, அதிலிருந்து ஆயிரக்கணக்கில் வேலையின்றித் திரும்பினார்கள். அவ்வாறு திரும்பியவர்களில் ஒருவரான கங்காணி அருணாசலம் என்பவர்தான் நெகிரி செம்பிலான் இந்தியர் சங்கத்தை அமைக்க எங்களுக்குத் தூண்டுகோலாய் இருந்தவர்.

கே: தாங்கள் துவக்ககாலத்திலிருந்து இதுவரை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் எந்தெந்தப் பொறுப்புக்களில் இருந்து வந்துள்ளீர்கள்?

ப: ஆரம்பத்திலிருந்தே நான் செயலாளராகத்தான் இருந்து வருகிறேன்.

சந்தித்தவர்
பாதாசன்

கே: தொழிலாளர்களின் சம்பள உயர்வு, தொழில் பாதுகாப்பு ஆகியவற்றைத் தவிர, அவர்களின் சமூக, பொருளாதார உயர்வு போன்ற மற்ற பிரச்னைகளைக் கவனிப்பதும் ஒரு தொழிற்சங்கத்தின் பொறுப்பு என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

ப: தாராளமாக ஒப்புக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. எங்கள் தொழிற்சங்கம் அந்த அடிப்படையில்தான் இயங்கி வருகிறது என்பதையும் இங்குக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசாங்கத்தையே முற்றாக எதற்கெடுத்தாலும் நம்பி இருக்கக்கூடாது. ஒவ்வொருவரும் சொந்தக் காலில் நிற்க முயல வேண்டும். சொந்தக்காலில் நிற்பதற்கு வேண்டுமானால் அரசாங்கத்தின் துணையை எதிர்பார்க்கலாம். எங்களது தொழிற்சங்கம் தனது தொழிலாளர்களுக்கு இதைத்தான் சுட்டிக்காட்டி வருகிறது.

கே: தங்கள் தொழிற்சங்கத்தின் சாதனைகள் யாவை?

ப: கூட்டுத் தொழிலில் சங்கம் பங்குதாரராக ஆவதன் மூலம் அந்தத் தொழிலின்வழி தோட்டத் தொழிலாளர்களுக்கு முக்கியமாக அவர்களின் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புப் பிரகாசமாக இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டுதான் நாங்கள் பல கூட்டுத்தொழில்களில் முதலீடு செய்திருக்கிறோம். அவற்றுள் மிகப் பெரியது "செண்பகா லட்சுமி நெசவாலை". இதில் நெகிரி செம்பிலான் மாநில அரசாங்கமும் பங்குதாரராக உள்ளது. இது மட்டுமல்லாமல் அந்த மாநில அரசோடு இணைந்து ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளியைக் கோலப்பிலாவில் அமைத்திருக்கிறோம். அதில் பயிற்சி பெற்று வெளிவரும் ஒருவர் குறைந்தபட்சம் மாதத்திற்கு $350 சம்பாதிக்க முடியும். அதில் 200 பேர் தற்போது பயிற்சி பெறுகிறார்கள்.

பாரிஸ் மிட்டாய்த்தொழிலிலும் எங்களுக்குப் பங்கு இருக்கிறது. அத்தொழிலைப் புதுமுறையில் அமைத்துப் பாரிஸ் மிட்டாய் விற்பனையையும் பெருக்க முயற்சி எடுத்து வருகிறோம். யுனைடெட் ஓரியண்டல் இன்சூரன்ஸ், பேங் பூரோ போன்றவற்றிலும் சங்கம் பங்குகள் வாங்கியுள்ளது.

கே: தோட்டங்கள் ஏதும்...?

ப: ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட சா நிங் தோட்டம், டோவன்பி தோட்டம், கோலசிலாங்கூருக்கு அருகிலுள்ள லாப்பான ஹறூத்தான் கோட்டம் முதலானவை சங்கத்திற்குச் சொந்தமானவை.

மாபெரும் திட்டமாக நெகிரி செம்பிலான் மாநிலத்தில் கரும்புத் தோட்டக் குடியேற்றம் அமைக்கும் திட்டத்தைத் துவக்கியிருக்கிறோம். அதற்குத் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் இடம் 3,000 ஏக்கராகும். மனுதாரர்கள் அதிகமாக இருப்பதால் அதை 9,000 ஏக்கராக விரிவுபடுத்த அரசாங்கத்திடம் உதவி கோரியுள்ளோம்.

இந்தத் திட்டத்தின்கீழ் மனுதாரர் ஒருவர் ஐந்து வருடத்திற்குள் $7,500 செலுத்தவேண்டும். அவருக்கு 10 ஏக்கர் வழங்கப்படும். அந்தக் கரும்புத் தோட்டத்தின் மூலம் தனிநபர் வருமானம் மாதம் ஒன்றுக்கு சுமார் $800 ஆக இருக்கும்.

கே: ஐந்து வருடத்திற்குள் மனுதாரர்கள் $7,500 செலுத்திவிடுவார்களா?

ப: ஐந்து வருடத்திற்குள் அவர்கள் நிச்சயம் செலுத்தி விடுவார்கள். இப்பொழுதே பலர் முழுத் தொகையையும் செலுத்தியிருக்கிறார்கள். இதை வைத்துப் பார்க்கும்போது அவர்கள் அனைவரும் செலுத்திவிடுவார்கள் என்பதில் நான் ஐயமே கொள்ளவில்லை.

கே: தொழிலாளர்களின் வீட்டு வசதிகளுக்குச் சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

ப: டோவன்பி தோட்டத்தில் அங்குள்ள தொழிலாளர்களுக்கு 104 வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் 52 வீடுகள் பூர்த்தியடைந்து விட்டன. மீதமுள்ள 52 வீடுகள் முடிவுறும் தறுவாயில் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றின் விலை $11,500 ஆகும்.

அந்த வீட்டில் குடியிருப்பவர்கள் வீட்டின் சூழ்நிலைக்கேற்றவாறு தங்கள் நடை, உடை, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை அடியோடு மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

கே: பி.பி. என். மாணவர் விடுதியைப் போல நாட்டின் முக்கிய நகரங்களில் மாணவர்களுக்காக விடுதிகள் கட்டும் திட்டம் உண்டா?

ப: உண்டு. கிளந்தானில் 90 மாணவர்கள் தங்கும் வசதியுள்ள விடுதி ஒன்றைக் கட்டியுள்ளோம். இப்படியே தொடர்ந்து படிப்படியாகச் செயல்படுத்துவோம். இதைத் தவிர கிளந்தானிலேயே அனாதைக் குழந்தைகள் இல்லம் ஒன்றை மூன்று ஏக்கர் பரப்பில் அமைத்திருக்கிறோம்.

கே: மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குகிறீர்களே, ஆண்டுக்கு அதன் தொகை எவ்வளவு?

ப: இவ்வளவுதான் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. எனினும் லட்சக்கணக்கில் தொகை இருக்கும். உபகாரச் சம்பளங்களைத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு அவர்களின் திறமை அடிப்படையில் வழங்குகிறோம்.

வெளிநாடுகளில் பயிலும் மாணவர்களின் விஷயத்தில் நமது

"கல்கண்டு" ஆசிரியர் தமிழ்வாணன் மறைந்த பிறகு வெளிவந்த கல்கண்டு இதழில் இடம்பெற்ற கேள்வி–பதிலில் சில:–



கே: உங்களைப் பாபுராவ் படேலுடன் ஒப்பிடுகிறீர்களே!

ப: தவறு. கேள்விக்குப் பதில் சொல்லுவதில் என்னைப்போல அவரும் சிறந்தவர் என்பதைத் தவிர எங்களுக்குள் வேறு ஒற்றுமை இல்லை. அவர் தன் கடைசி காலத்தில் மருந்து, டானிக், லேகியம் என்று இறங்கிவிட்டார். நான் என் கடைசி காலத்திலும் புத்தகங்கள் தாம் எழுதிக்கொண்டிருப்பேன்!

கே: நீங்கள் புகழை விரும்புகிறீர்களா?

ப: இல்லை. "தமிழ்வாணனைப் போல் வாழ்க்கைக்கு மிக, மிக, மிக மிகத் தேவையான, அத்யாவசியமான புத்தகங்களை இதுவரை எந்தத் தமிழ் எழுத்தாளனும் எழுதவில்லை" என்ற பெயரையே விரும்புகிறேன். அந்த ஒரே ஒரு இலட்சியத்தை நோக்கியே மூச்சுவாங்க நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்!

கே: உங்கள் புத்தகங்கள் எல்லாவற்றையும் நான் படித்திருக்கிறேன். சின்னச் சின்ன வாக்கியங்கள். இதனால் எந்த சப்ஜெக்டைப் பற்றி நீங்கள் எழுதினாலும் அது உடனே நன்றாகப் புரிகிறது. உங்கள் மாதிரிச் சின்னச் சின்ன வாக்கியங்களாக நான் எழுதிப் பார்க்கிறேன். முடியவில்லையே!

ப: தமிழ்வாணன் நடை, தனி நடை. அதை எவராலும் காப்பியடிக்க முடியாது. அதே மாதிரி எழுதவேண்டும் என்றால் 35 வருடங்கள் எழுதிப் பழகிய பிறகுதான் முடியும். நான் 35 வருடங்களாக எழுதிக்கொண்டிருக்கிறேன். எந்த சப்ஜெக்டையும் புரியும்படி எளிமையாகச் சின்னச் சின்ன வாக்கியங்களில் எழுதவேண்டும் என்பதே என் லட்சியம்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்கே இனிமேல் உதவ நினைக்கின்றோம். ஏனெனில் அவர்களின் வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் வேண்டுமல்லவா! எழுத்தாளர் சங்கம் போன்ற பொது அமைப்புக்களுக்கும் நிதி உதவி வழங்குகிறோம்.

ஆரம்ப — உயர்நிலைக் கல்விக்கான உபகாரச் சம்பளங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பல்கலைக் கழக உபகாரச் சம்பளங்கள் கடனாக வழங்கப்படுகின்றன.

கே: அடையாளக்கார்டு, குடியுரிமை போன்ற பிரச்சனைகளில் சங்கம் தொழிலாளர்களுக்கு உதவுகிறதா?

ப: ஒவ்வொரு மாநிலக் கிளை அலுவலகத்திலும் அடையாளக்கார்டு, பிறப்புப் பத்திரம், குடியுரிமை, இமிகிரேஷன் போன்ற வகைகளில் உறுப்பினர்களுக்கு உதவி செய்வதற்கென்றே விசேஷ பிரிவு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. சட்ட ஆலோசனைகளை வழங்கும் பிரிவும் அங்கு உண்டு. ஆகவே தொழிலாளர்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை அந்தப் பிரிவின் உதவியோடு தீர்த்துக்கொள்ள இயலும்.

கே: சிவப்பு அடையாளக்கார்டு பிரச்சனை தோட்டப்புறங்களில் இப்போது அதிகம் உள்ளதா?

ப: ஆங்காங்கே ஒன்றிரண்டு பேர் இருக்கலாம். தோட்டப்புறங்களைப் பொறுத்தவரையில் இது பெரிய பிரச்சனையாக தற்போது இல்லை.

கே: ஆடு, மாடு, கோழிப் பண்ணைகள் வைக்க எண்ணும் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் நோக்கம் சங்கத்திற்கு உண்டா?

ப: சாதாரணமாக தோட்டங்களில் பெரும்பாலோரிடம் ஆடு, மாடு, கோழி வளர்க்கும் பழக்கம் உண்டு. இதற்கு உதவுவதைவிட தேனீ வளர்ப்பு போன்ற புதுமையான திட்டங்களுக்கு உதவும் நோக்கம் சங்கத்திற்கு உண்டு.

கே: தொழிலாளர்களின் சேமிப்புப் பழக்கம் எப்படி இருக்கிறது?

ப: முன்பைவிட இப்போது அதிகரித்திருப்பதாகவே நான் கருதுகிறேன். சேமிப்புப் பழக்கத்தைத் தூண்டும் வகையில் சேமிப்புத் திட்டத்தைத் துவக்கி இருக்கிறோம். அதற்குத் தொழிலாளர்களிடையே நல்ல வரவேற்பும் ஆதரவும் இருக்கின்றன.

கே: விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமைகளில் பால்வெட்டுத் தொழிலாளர்களை வேலைக்குச் செல்லுமாறு கூறிவிட்டு ஒரு பேர் மட்டும் சில தோட்டங்களில் கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறதே?

ப: எங்களுக்குத் தெரிந்து அப்படி ஏதும் நடப்பதாகத் தெரியவில்லை, அப்படியே நடந்தாலும் அது பற்றிச் சங்கத்திற்குத் தொழிலாளர்கள் தெரியப்படுத்தினால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

கே: தோட்டத் தொழிலாளர்களின் வருமானம் எப்படி?

ப: இப்போது திருப்திகரமாகவே உள்ளது. வருமானவரி செலுத்தக் கூடிய தோட்டத் தொழிலாளர்களும் தற்சமயம் இருக்கிறார்கள்.

பால்வெட்டுத் தொழிலாளர் ஒருவருக்கு மாதமொன்றுக்குக் குறைந்த பட்சம் முந்நூறு வெள்ளியும், செம்பனைத் தோட்டத் தொழிலாளருக்குக் குறைந்தபட்சம் ஐந்நூறு வெள்ளியும் கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தொழிலாளர்கள் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்தால் எப்போதும் வளமான வாழ்க்கையைப் பெறலாம்.

கே: தோட்டத் தொழிற் சங்கம் சில சமயங்களில் சில பிரச்சனைகளில் "கம்"மென்று இருப்பதாகக் கூறுகிறார்களே?

ப: தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் யானையைப் போன்றது. யானை "கம்"மென்று இருந்தாலும் மற்றவர்களின் கண்ணுக்குத் தெரியாமல் போய்விடாது. அதன் உருவமென்ன சிறிதா?

அதுவுமல்லாமல் "நான் இருக்கிறேன். நான் இருக்கிறேன்" என்று எடுத்ததற்கெல்லாம் எழுந்து நின்றால் யானைக்குள்ள மதிப்பு குறைந்து விடுமல்லவா? அதுபோல் தான் எங்கள் தொழிற் சங்கக் கதையும்.

மருதுவைக் கேளுங்கள்

ஏ. சண்முகம், காராக், பகாங்

கே: அண்ணே, ஊமையாக இருக்கும் நண்பர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: காது வலிக்காது. தொந்தரவு இல்லாத நல்ல நண்பர்கள்!

கே. எஸ். மணியம், ஒலிரூட் தோட்டம், செலாமா

கே: அவ்வப்போது ஆடவரை மாற்றும் பெண்களை எதற்கு ஒப்பிடுவது?



ப: அவர்கள் பெண்களல்ல; இரத்தம் குடிக்கும் பேய்கள்!

கே: கவர்ச்சிக்கும் காதலுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?

ப: நிறைய உண்டு. உடைக்கவர்ச்சி, அழகுக் கவர்ச்சி, கல்விக்கவர்ச்சி, செல்வக்கவர்ச்சி- இப்படி ஏதாகிலும் ஒரு கவர்ச்சியின் அடிப்படையில் தான் காதல் தொடங்குகிறது.

சா. ராஜேஸ்வரன், நோர்த் ஹம்மோக் தோட்டம், சிலாங்கூர்

கே: ஏழைக்கும் காலம் வரும் என்று சொல்கிறார்களே, இதுவரைக்கும் நான் "ஏழைக்கும் காலம் வரும்" என்ற படத்தைத்தான் பார்த்திருக்கிறேன்!

ப: உலக நாடுகளின் வரலாற்றை ஒருமுறை கண்ணோட்டமிடுவீர்களானால் உங்களுக்கு இத்தகைய விரக்தி ஏற்படாது.

கே: கவலைகளை ஒருவன் தாங்க முடியாமல், தன் தந்தையின் இல்லத்தை விட்டு நண்பனின் இல்லத்தில் வாழ்கிறான் என்றால் அவனுடைய எதிர்காலம் எப்படி இருக்கும்?

ப: இது தோல்வி மனப்பான்மை. கவலைகளுக்கு மத்தியில் கலங்கரை விளக்கத்தைக் காணத் தவம் புரிய வேண்டும். ஒதுங்குபவர்களை உலகமும் ஒதுக்கி விடும்.

கே. நடராஜன், வாணி, அலகார் தோட்டம், பேராக்

கே: குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நம்மவர்கள் முறையாக அனுசரிக்காததற்குக் குடியும் ஒரு காரணம் என்கிறேன்; உங்கள் கருத்து?

ப: குடிப்பவர்களிடம் எந்தக் கட்டுப்பாட்டையும் எந்தத் திட்டத்தையும் எதிர்பார்க்க முடியாது என்பது உண்மையே.

கே: தனியாக இருக்கும் நண்பனைக் கிண்டல் செய்யும் சில பெண்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: பாவம், அப்பாவியான அவரை விட்டுவிடுங்கள்.

மு. வி. தாசன், பந்திங்

கே: ஓர் அரசியல்வாதியின் புதல்வன் அல்லது புதல்வி மேடை ஏறிப் பாடினால் அது அவருக்குப் புகழைத் தேடித் தருமா, அல்லது இழிவைத் தேடித்தருமா?

ப: அவரின் புதல்வரோ புதல்வியோ பாடுகின்ற தரத்தைப் பொறுத்தது. அவர் பெறுகின்ற புகழும் இழிவும்.

கே. எம். ஜோன் மோகன், சிகாமட், ஜோகூர்

கே: அண்ணே, எங்கள் குடும்பத்தில், எங்கள் பெற்றோர்களுக்கு நாங்கள் பதினொரு பிள்ளைகள். எங்கள் பெற்றோர், குடும்பத்தில் அக்கறையின்றி வாழ்கின்றார்கள். ஆகலால் அவர்களின் பிள்ளைகளான நாங்கள் பதினொரு பேரும், பதினோர் இடத்தில் வாழ்கின்றோம். எங்களில் ஆண்கள் ஒன்பதுபேர். பெண்கள் இருவர். பெண்கள் இருவருக்கும் திருமணம் முடிந்துவிட்டது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கேற்ப எவ்வழியைக் கடைப் பிடித்தால், நாங்கள் ஒன்பது பேரும் ஒன்றுகூட இயலும்?

ப: குழந்தைகள், பெரியவர்களாகி மணமுடித்து விட்டால் சிறிதுகாலம் பெற்றோர்களுடன் இருந்து விட்டுப் பிறகு பிரிந்து வாழ்வதே சிறப்பாகும். ஆனால் உங்களில் எத்தனை பேருக்கு மணமாகி விட்டது என்பது தங்கள் கேள்வியிலிருந்து துலக்கமாகத் தெரியவில்லை. உங்கள் தமக்கைமார்கள் இருவரும் புகுந்த வீடுகளில் வாழவேண்டுமே ஒழிய உங்களோடு சேர்ந்து வாழ இயலாது. ஆனால் ஆண் பிள்ளைகளில் மணம் முடிக்காத பிள்ளைகள் அனைவரும் பெற்றோர்களுடன் சேர்ந்து வாழ்வதே பெருமை. இவ்வகையில் உங்கள் பெற்றோர்கள் பாராமுகமாக இருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. உங்கள் குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமான உறவினர்களின் துணையை நாடி இந்த நிலையைச் சீராக்க முயலுங்கள்.

எஸ். ராஜா, ரினி தோட்டம், ஸ்கூடாய்

கே: மலேசிய வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அடிக்கடி மேற்கு மலேசிய நேரம், கிழக்கு மலேசிய நேரம் என்று இரண்டு நேரமும் அறிவிக்கப்படுகின்றன. ஒரு தடவை மட்டும் இரண்டு நேரத்தையும் அறிவித்துவிட்டு, மற்ற தடவைகளில் நாம் வசிக்கும் மேற்கு மலேசியாவின் நேரத்தை மட்டும் கூறினால் போதாதா?

ப: மலேசிய வானொலியின் நிகழ்ச்சிகளை ஒரே சமயத்தில் தீபகற்ப மலேசியாவைச் சேர்ந்த நேயர்களும் சபா சரவா மாநிலங்களைச் சேர்ந்த நேயர்களும் செவிமடுக்கிறார்கள். அதனால்தான் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இரண்டு நேரங்களையும் அறிவிக்க வேண்டியிருக்கிறது.

கே: கொட்டக் கொட்டக் குனிந்து கொடுப்பவர்கள் இல்லாவிடில் கொட்டுபவர்களே இருக்கமாட்டார்கள், அப்படித்தானே?



ப: நீங்கள் சொல்வது உண்மைதான்!

மதுரை கண்ணு மகேஸ், தைப்பிங்

கே: 'மலேசியமொழித் தேர்வில் வெற்றிபெற...' என்னும் தலைப்பில் எழுதிவந்த வெ. ஆறுமுகத்தைப் பற்றி...?

ப: தமிழாசிரியரான வெ. ஆறுமுகம், தற்சமயம் மலாயாப் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் பயின்று வருகிறார். ஏற்கனவே 'சுவை' என்னும் பத்திரிகையை நடத்தியிருக்கும் இவர், 'நகைச்சுவைப் பித்தன்' எனும் பெயரில் நன்கு அறிமுகமானவர். புதிய சமுதாயத்தில் 'நையாண்டிமேளம்' என்னும் பகுதியையும் இவர் எழுதிவருகிறார்.

ஏ. எஸ். ரவிப்பெருமாள், குக்கூப் தோட்டம், ஜொகூர்

கே: 'வழி காட்டுகிறார் வள்ளுவர்' பகுதியில், மது குடிக்கும் தீய பழக்கத்தைக் குறித்து எழுதியிருந்தீர்கள். உங்களுக்குக் குடிப்பழக்கம் இருக்காது என்று நான் வாதாடுகிறேன். ஆனால் என் நண்பரோ, அந்தப் பழக்கம் உங்களுக்கும் நிச்சயம் இருக்கும் என்று அடித்துக் கூறுகிறாரே...!

ப: உங்கள் நண்பர்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன், நான் குடிகாரனல்ல.

மு. லெட்சுமணன், ஜெரம், சிலாங்கூர்

கே: எப்படிப்பட்ட சமுதாயத்தைப் 'புதிய சமுதாயம்' எனத் தாங்கள் நினைக்கிறீர்கள்?

ப: 'புதிய சமுதாயம்' முதல் இதழில் வெளியான தலையங்கத்தில் இடம் பெற்றிருக்கும் பாரதியின் வரிகளை மீண்டுமொரு முறை படித்துப் பாருங்கள். அத்தகைய உரமிக்க, திறம்பட்ட சமுதாயத்தையே நாம் காணவிரும்புகிறோம்.

இ. மாரிமுத்து, சுங்கை திங்கி, தஞ்சோங் மாலிம்

கே: இன்று, நமது சமூகத்தில் சாதியின் பெயரால் சில இயக்கங்கள் தோன்றியுள்ளன. இவை எந்த அளவிற்கு, நமது சமூக ஒற்றுமைக்கு, வளர்ச்சிக்கு உதவ முடியும்?

ப: எந்த வகையிலும் சாதி இயக்கங்களால் சமூகத்திற்குப்பயன் விளையாது. சமூக ஒற்றுமைக்குச் சாதி, மதம் கடந்த 'தமிழர் திருநாள்' உணர்வு நம்மிடையே வலுப்படவேண்டும்.

கே: 50 அல்லது 60 பேர் ஒன்று திரண்டு ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு, குறிப்பிட்ட ஒருவரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு ஊர்வலமாகச் செல்ல விரும்பினால் அவர்களைத் தடுக்கும் உரிமை சட்டத்திற்கு உண்டா?

ப: இத்தகைய ஊர்வலங்களுக்கு முன்கூட்டியே போலிசாரின் அனுமதியைப் பெறவேண்டும். அப்படி அனுமதி பெறாத ஊர்வலங்களைத் தடுக்கும் அதிகாரம் சட்டத்திற்கு உண்டு.

கே. சகுந்தலா, டோர்கிங்டன் தோட்டம், சபாக் பெர்ணம்

கே: எனக்கு மலேசிய அமைச்சர்களின் பெயர்களையும் அவர்கள் பொறுப்பு வகிக்கும் துறைகளையும் அறிந்து கொள்ள ஆசை. அவர்களது பெயர்களை இலாகா வாரியாக தெரியப்படுத்தவும். துணை அமைச்சர்களையும் கூறவும்.

ப: அமைச்சர்கள், துணையமைச்சர்கள் பட்டியலை வெளியிடுவதானால் ஒரு பக்கத்திற்கு மேல் வரும். தங்களுக்குப் பக்கத்திலுள்ள தகவல் இலாகாவில் கேட்டால் இந்தப் பட்டியலைத் தாங்கள் பெற முடியும்.

வேலு ராஜகோபால், சுங்கை ரம்பை தோட்டம், பத்தாங் பெர்ஜுந்தை

கே: எல்லாப் பெண்களுக்கும் மானமுள்ள தொழில் ஏதாவது செய்து பணம் தேடத் தெரிந்திருக்கவேண்டும். அதற்கு அவர்களுக்குக் கல்வியும் தொழிலுந்தான் ஏற்ற துணை. இதைப்பற்றி ஆசிரியர் கூறும் கருத்து என்ன?

ப: இத்தகைய சுதந்திர உணர்வு இன்றைய பெண்களிடம் பெருகி வருகிறது. எல்லா வேலைகளையும் பெண்கள் ஆக்கிரமித்துக்கொள்கிறார்கள். 'எங்களுக்கும் சிறிது ஒதுக்குங்கள்' என்று ஆண்கள் பரிதாபத்தோடு முறையிட வேண்டிய கட்டாயங்கூட ஒரு சில துறைகளில் ஏற்பட்டு வருகிறது. ஆண்களுக்குச் சுமையாக பெண்கள் இருந்த காலம் படிப்படியாக மாறி வருவதைத் தாங்களும் உணர்வீர்கள் என்று நம்புகிறேன்.

பெ. தவமணி, கோலக்கிள்ளான்,

கே: அண்ணு! "புதிய சமுதாயம்" என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதி அனுப்பிவைத்தால் பிரசுரிப்பீர்களா?

ப: அனுப்புங்கள்; கருத்துள்ள கவிதையாக இருந்தால் நிச்சயம் இடம்பெறும்.

கே: இப்பொழுது மலேசியாவில் வெளிவரும் புதிய சமுதாயம், உதயம், இ. மு. நி. மற்றும் பல இதழ்களில் முன்னணி வகிக்கும் இதழ் எது?



ப: "புதிய சமுதாயம்" ஏழுமாதம் நிரம்பிய குழந்தை. அதனுடன் இருபத்தாறு வயதுக் கட்டிளங்காளையான இந்தியன் மூவி நியூஸையும், ஆறுவயதுப் பாலகனான உதயத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பது முறையாகாது.

ஏ. எஸ். சிவநேசன், பாமோல், குளுவாங்

கே: பொறாமைக்குணம் உள்ளவர்களை எப்படித்திருத்துவது?

ப: மற்றவர்களின் மேம்பாட்டைப் பார்த்து வயிற்றெரிச்சல் படாது ஆனந்தம் அடைபவர்களிடம் இத்தகைய பொறாமைக் குணம் படைத்தவர்களை அழைத்துச் சென்று நட்புகொள்ளச் செய்தால் இந்தப் பொறாமைக் குணம் மாறக் கூடும்.

கே: அண்ணு, இப்போது உங்களுக்கு என்ன வயது இருக்கும்?

ப: தலை, வெள்ளிப் பனிமலையாகிவிட்டது என்றாலும் வயது கொஞ்சம்தான். சென்ற மாதத்தில்தான் ஐம்பத்து மூன்று நிறைந்தது.

ஆர். குணாளன், சுங்கை டிவிசன், சுங்கைப் பட்டாணி

கே: பெண்கள் கல்யாண வயதைக் கடந்தும், கல்யாணம் ஆகாமல் இருப்பதற்குக் காரணம் சூழ்நிலையா, நாகரிகமா?

ப: பெரும்பாலும் குடும்பச் சூழ்நிலைதான் காரணம் வெளிப்படையாகச் சொல்லவேண்டுமானால் மாப்பிள்ளை தேடுவது பெண்களைப் பெற்றவர்களுக்கு இந்தக் காலத்தில் மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பதுபோல் அத்துணை கடினமாக இருக்கிறது.

ஆர். கே. செல்வேந்திரன், செல்வக்குமார், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: சமுதாயத்தில் ஒருவர் தாழ்மையில் இருந்தால் ஏன் அவரை மதிப்பதில்லை?

ப: கண்ணுக்குத் தெரியும்படி சற்று உயரத்தில் இருந்தால்தான் இந்தப்பொல்லாத உலகம் நிமிர்ந்து பார்க்கும்; இதுதான் இயல்பு.

கே: ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டு விட்டால் ஏன் பழைய வாழ்க்கையை நினைத்துப் பார்ப்பதில்லை?

ப: முன்னோக்கிச் செல்வதற்கும் பார்ப்பதற்குமே நேரம் போதாத இந்தக் காலத்தில், பின்னோக்கிப் பார்க்கின்ற மனிதர்களை ஏன் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?

எம். சாமிக்கண்ணு, டென்னிஸ் டவுன் தோட்டம்,
பாரிட் புந்தார்

கே: குத்துச் சண்டையில் தொடர்ந்து முகமது அலியே வெற்றிபெறும் மர்மம் என்ன?

ப: போட்டியை நடத்துபவர்கள் அந்தச் சண்டைகளில் வெற்றியாளர்களை முன்கூட்டியே தீர்மானித்து விடுவதாகவே தோன்றுகிறது.

கே: தங்களின் புதிய சமுதாயத்தில் நகைச்சுவை ஓவியம் வரைபவர் யார்?

ப: எங்கள் ஓவியரின் பெயர் வேலவன்.

ஏ. எல். அசோகன், ஆயர் தாவார் தோட்டம், ஆயர்தாவார்

கே: அண்ணு, அறிவில்லாதவனுடன் இணைந்து பழகும் நட்பைவிட அறிவாளியின் பகை சிறப்பானதா?

ப: அப்படித்தான் அனுபவமிக்க பெரியோர்கள் சொல்கிறார்கள்.

கே: குடித்துக் களிப்பவனும் தன்னையொரு வள்ளுவனாக எண்ணுவது பேதைமையா?

ப: நூற்றுக்கு நூறு பேதைமை.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: பெருமைக்கு உரைகல் எது?

ப: செயற்கரிய செய்வது.

பி. கே. செல்வதுரை, காப்பார்,

கே: தமிழ் இலக்கியங்களை முறையாகப் பயிலவேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?

ப: தக்க ஆசிரியரின் உதவியோடு படிக்கவேண்டும். இல்லாவிட்டால் ஆலோசனையையாவது அந்த ஆசிரியரிடமிருந்து பெறவேண்டும்.

கே: எழுத்தாளர் ப. சந்திரகாந்தம் இப்போது என்ன செய்கிறார்? அவருடைய நாடகங்களைக் கேட்டு வெகு நாட்களாகிவிட்டதே?

ப: சென்னைக்கும் கோலாலம்பூருக்கும் இடையே மாறி மாறிப் பறந்துகொண்டிருக்கிறார். இப்பொழுதெல்லாம் இந்த அலைச்சலுக்கு இடையே நாடகம் எழுத அவருக்கு நேரம் ஏது?

எஸ். லாரன்ஸ், நைகல் கார்டனர் தோட்டம்,
பத்தாங் பெர்சுந்தை

கே: என் நண்பர் ஒரு பெண்ணை உயிருக்குயிராய்க் காதலித்தார். அந்தப் பெண்ணும் அவரைக் காதலித்தாள். ஆனல் இந்த விஷயம் பெண்ணின் பெற்றோர்களுக்குத் தெரிந்து அந்தப் பெண்ணை விசாரிக்கும்பொழுது அந்தப் பெண் "அவரைக் காதலிக்கவே இல்லை" என்று சாதித்து விட்டாள். ஆனல் இப்பொழுது என் நண்பரிடம் வந்து மன்னிப்புக் கேட்கிறாள். இந்தப் பெண்ணைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பாவம், பெற்றோருக்குப் பயந்த பெண் போலும்!

ராம்குமார், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: ஒரு பெண் தன் வாழ்க்கையில் இழக்கக்கூடாதது எது?

ப: மாங்கல்யம்!

எஸ். செல்வம், சுங்கை போக்காக், பாகான் சிராய்

கே: மனிதன் சிற்றேனும் கவலையின்றி வாழ முடியுமா?

ப: முடியவே முடியாது. அப்படி வாழ்ந்தாலும் சுவைக்காது; உப்பின்றி உணவு சாப்பிடுவதுபோல் இருக்கும்.

'ஆர்வி சரோ' ஜெயா, சுங்கை

கே: நம்பிக்கை இல்லாத வழிபாடு...?

ப: பாசாங்கு!

பி. ராமசாமி, கிண்டா டின், கோப்பெங்

கே: நீங்கள் வெளியிடும் புதிய சமுதாயத்தின் மேல் அட்டைகளில் பெரும்பாலும் பெண்கள் படத்தையே அச்சிடுகின்றீர்கள். நம் நாட்டில் எத்தனையோ கவர்ச்சியான இடங்கள் இருக்கின்றன, ஏன் அதை அச்சிட மறுக்கிறீர்கள்? காரணம் என்ன?



ப: 'புதிய சமுதாயம்' அட்டையில் தலைவர்கள், குழந்தைகள், இயக்குநர் பாலசந்தர் ஆகியோரின் உருவங்களைத் தாங்கிய இதழ்களைத் தாங்கள் பார்க்கவில்லை போலும். பெண்கள் மட்டுமே உங்கள் கண்ணுக்குத் தெரிவதற்கு நாங்கள் பொறுப்பாளர்களல்ல தாங்கள் குறிப்பிடுகின்ற கவர்ச்சியான இடங்களும் தக்க சமயத்தில் அட்டையில் இடம் பெறும்.

பொ. சுப்பிரமணியம், த. கிருஷ்ணன், செலாமா தோட்டம்,

கே: ஒருவருக்கு மன நோய் வருவதற்குக் காரணம் என்ன?

ப: தீர்க்க முடியாத வாழ்க்கைச் சிக்கல்களே பெரும்பாலும் மனநோயை வரவழைக்கின்றன.

எம். சுமதி, கோப்பெங்

கே: என் சிநேகிதி, மணமான ஒருவரை இரண்டு வருடங்களுக்கு முன்பு விரும்பினாள். இப்போது அவளுக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. இரண்டு வருடத்துக்கு முன்பு காதலித்தவர், இப்போது "நான் திருமணம் செய்து கொள்கிறேன்" என்கிறாராம். அவருக்கு இரண்டு குழந்தைகளும் உள்ளன. இக்கட்டான இந்நிலையிலிருந்து தப்பிக்க ஒரு வழி சொல்லுங்கள்!

ப: உங்கள் சினேகிதி செய்த முதல் தப்பு, திருமணமான ஆசாமியைக் காதலித்தது. இப்பொழுது நல்ல முறையில் திருமணம் நிச்சயித்திருக்கும் பொழுது, மறுபடியும் அவர் மனம் ஏன் ஊசலாட வேண்டும்? இரண்டு பிள்ளைக்குத் தகப்பனாகிவிட்ட ஆசாமியை ஏறெடுத்தும் பார்க்காமல் உங்கள் சினேகிதி தூர நிற்பதே உத்தமம்!

ஏ. முத்து, பேர்ணம் தோட்டம், பேரா

கே: ஆண்டில் மூத்தவரே! வர வர நம் இதழ் காலம் கடந்து கிடைக்கிறதே, காரணம் என்ன?

ப: காரணங்களை விளக்கி என்ன பயன்? உங்களுக்குத் தீபாவளி இதழ் உரிய காலத்தில் கிடைத்திருக்கிறதென்று நம்புகிறேன். இனிவரும் இதழ்களை எல்லாம் தாமதமின்றிக் கொண்டுவர எல்லா முயற்சியும் செய்கிறோம்.

பி. ஏ. ராமு, பாஜம், நெகிரி செம்பிலான்

கே: அண்ணு, நான் ஒரு மரஆலையில் வேலை செய்கின்றேன். என் முதலாளி, அரசாங்க விடுமுறை நாள் சம்பளத்தை 6 நாட்களுக்குத்தான் தருகின்றார். மற்ற பெருநாட்சம்பளம் - ஹரிராயா, தீபாவளி போன்ற நாட்களுக்கு -கொடுக்க மறுக்கின்றார். முதலாளிகளுக்கு இப்படி ஒரு சட்டம் இருக்கிறதா?

ப: பொதுவிடுமுறை ஏழு நாட்களுக்கு வழங்க வேண்டுமென்பது தொழிலாளர் சட்டம்.

ஏ. கே. எஸ். ராஜா, சொகமானா தோட்டம், பேராக்

கே: ஆண் எத்தனை வயதில் திருமணம் செய்து கொள்வது நல்லது?

ப: 25 வயதிற்குமேல் திருமணம் செய்துகொள்வது பொருத்தம்.

இன்றுபோல் என்றும் வாழ்க



(ராதா சலூஜாவுடன் எம். ஜி. ஆர் தோன்றும் கனவுக்காட்சி)

பட்டிக்காட்டுச் சூழலில் வளர்ந்த முருகன் எனும் வாலிபன் பட்டணத்திற்குப்போய், அங்கே செல்வச் செழிப்பும், அழகும் நிறைந்த மேனகா எனும் இளம் பெண்ணை, பல சோதனைகளுக்கிடையே மணம் புரிந்து கொள்கிறான். இதற்கிடையே என்னென்னவோ நடக்கின்றன! அவற்றை, சுப்பு புரடக்‌ஷன்சார் "இன்றுபோல் என்றும் வாழ்க" என்று தலைப்பிட்டு வண்ணத்தில் உருவாக்கி வெளியிட்டுள்ளார்கள்.

என்னதான் நாகரிகம் வளர்ந்திருந்தாலும், தமிழ்ப் பண்பையும், பண்பாட்டையும் பெண்கள் மறந்து விடக்கூடாது என்பதையும் இப்படக்கதை விளக்குகிறது.

"மக்கள் திலகம்" எம். ஜி. ஆர். இப்படத்தில் முருகன் எனும் கதா பாத்திரத்தில் வந்து, அவருக்கே உரிய பாணியில் எல்லா வேலைகளையும் செய்திருக்கிறார். (இது தேர்தல் சமயத்தில் அவசர அவசரமாக எடுக்கப்பட்ட படம் என்பது நன்றாகத் தெரிகிறது)

மேனகாவாக இந்தி நடிகை ராதா சலூஜா காட்சிக்குக் காட்சி விதவிதமான ஆடை அணிகளுடன் கவர்ச்சியாக வருகிறார். "நம்ம கல்யாணத்துக்கு எதிக்கிறாங்க", "என் இதயத்தை "ஒடைக்கிறாங்களே" என்று ஓரிரு காட்சிகளில் தமிழை உடைக்கிறார் சலூஜா. (உடையலங்காரத்தில் காட்டும் கவனத்தை அவர் உச்சரிப்பிலும் காட்டினால் நல்லது)

நம்பியார் வருகிறார். வில்லனாகவா? இல்லை, பாசமுள்ள பெரியவராக! அவர் செய்யும் அட்டகாசங்களை இதில் விஜயகுமார் செய்திருக்கிறார். வி. கோபாலகிருஷ்ணன் ஆரம்பத்தில் ராதா சலூஜாவின் காதலனாக வருகிறார் அவருடைய அசட்டுப் பித்துக்குளிப் பாத்திரம் கதையை பலவீனமாக்கவே உதவுகின்றது.

எம். எஸ். விசுவநாதனின் இசையமைப்பில் ஒலிக்கும் பாடல்களில் ஜேசுதாஸ் குரலில் வரும் "அன்புக்கு நான் அடிமை, தமிழ்ப் பண்புக்கு நான் அடிமை" என்ற பாடல் மிக இனிமையாக இருக்கிறது. இனி அடிக்கடி நேயர் விருப்ப நிகழ்ச்சியில் இப்பாடலைக் கேட்கலாம்!


"எனக்கு வர்ற ஆத்திரத்திற்கு என் மூக்கை நானே நச்சு நச்சுன்னு குத்திக்கணும்போல இருக்கு" என்று அடிக்கடி தேங்காய் சீனிவாசன் கூறுவதும், எம். ஜி ஆரை ஓட்டலுக்கு அவர் கூட்டிக்கொண்டு போவதும் நல்ல வேடிக்கை!

ஐஸ் ஆலைக்குள் எம். ஜி. ஆர். நடத்தும் போராட்டம் புதுமையாகவும் விறுவிறுப்பாகவும் இருக்கிறது. அதனை வழவழவென்று நீட்டாமல் இருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

ராதா சலூஜாவுடன் எம். ஜி. ஆர். தோன்றும் கனவுக்காட்சியைப் பிரமாண்டமான காட்சி ஜோடனைகளுடன் படமாக்கி இருக்கிறார்கள். கண்ணைக் கவரும் காட்சி!

கே. சங்கரின் டைரக்‌ஷனில் உருவாகியுள்ள நல்லதொரு பொழுது போக்குப் படமான இது மலேசியாவில் ராமா பிலிம்ஸ் வெளியீடாகும்!

ராமதாஸ் மனோகரன்



"அத்தான்மடி மெத்தையடி ஆடி விளையாடம்மா-ஆடும்வரை ஆடிவிட்டு அல்லிவிழி மூடம்மா"

—"பத்ரகாளி" படத்தில் சிவகுமாரின் மடியில் தலை வைத்துப்படுத்திருப்பவர் விமான விபத்தில் மறைந்த நடிகை ராணிசந்திரா.

மூன்றும் சிவா!

இதுவரையில் பிரபல நாவலாசிரியர் மகரிஷியின் இரண்டு நாவல்கள் ("பத்ரகாளி", "புவனா ஒரு கேள்விக்குறி") திரைப்படங்களாகத் தயாரிக்கப்பட்டு வெற்றியடைந்திருக்கின்றன. மூன்றாவதாக "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" திரைப்படமாகிறது. இந்த மூன்று படங்களிலும் சிவகுமார்தான் கதாநாயகன்! மகரிஷியின் நாவல்களைத் திரைப்படமாக்க வேண்டுமென்றால் அதில் கதாநாயகனாக நடிக்க, சிவகுமார்தான் பொருத்தமானவர் என்று தயாரிப்பாளர்கள் உறுதிப்படுத்திவிட்டார்கள் போலும்!

சி.பி!

ஜெய்சங்கரும், ஸ்ரீபிரியாவும் ஒரு படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அந்தப் படப்பிடிப்பு அரங்கமே கலகலப்பாக இருக்கும். ஸ்ரீபிரியாவை சி. பி. என்றுதான் ஜெய் அழைப்பார்!

சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு

நமது நாடு சுதந்திரம் பெற்ற 1957-ஆம் ஆண்டு ஆகஸ்டு 31-ஆம் நாளில் பிறந்த மலேசிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த குழந்தைகளுக்குப் பரிசளிக்கப் போவதாக அறிவித்து அன்றைய தினத்தில் பிறந்தவர்கள் தத்தம் பிறப்புப் பத்திரத்தையும் புகைப் படத்தையும் அனுப்பும்படி "புதிய சமுதாயம்" அறிவித்திருந்தது.

குறிப்பிட்ட தினத்தன்று பிறந்த மலேசிய இந்தியக் குழந்தைகள் எத்தனைப் பேரோ தெரியவில்லை. புதிய சமுதாயத்தின் அறிவிப்பைப் பாராத— கேள்விப்படாதவர்கள் எத்தனை பேரோ? பார்த்தும், கேட்டும் "நமக்கெதற்குப் பரிசும் விளம்பரமும்" என்று கருதி வாளாவிருந்தவர்கள் எத்தனை பேரோ? தெரியாது.


புதிய சமுதாயத்தின் விளம்பரத்தைப் பார்த்துவிட்டுத் தங்களைப் பற்றிய விவரங்களை அனுப்பி இருந்தவர்கள் 21 பேர்.

சுதந்திரம் பெற்ற அன்று நமது இந்திய சமூகத்தைப் பிரதிநிதித்த ம. இ. கா. தேசியத் தலைவர் மாண்புமிகு துன் வீ தி. சம்பந்தன் அவர்களைக் கொண்டு மெர்தேகா குழந்தைகளுக்குப் பரிசளிப்பது பொருத்தம் என்று கருதி தேசிய ஒருமைப்பாட்டு வாரியத் தலைவர் துன் சம்பந்தன் அவர்களை அணுகினார் ஆசிரியர் முருகு.

"நான் தீபாவளிக்காக நவம்பர் 13-ஆம் தேதியன்று எனது இல்லத்தில் தீபாவளி விருந்து உபசரிப்பு நடத்துகிறேன் அன்றைய தினம் பரிசு வழங்கினால் நல்லதல்லவா?" என்று கூறினார் நமது கூட்டுறவுத் தந்தை துன் சம்பந்தன் அவர்கள்.


அன்று காலையில் மணி 11.30க்கு அழைத்திருந்தபடி மொத்தம் 21 மெர்தேகா குழந்தைகளில் அன்று 16 பேர் வந்திருந்தனர்.

கோலாலம்பூரைச் சேர்ந்த குமாரி சுதந்திரதேவி, பெட்டாலிங் ஜெயாவைச் சேர்ந்த குமாரி மெர்தேகா அல்லது கமலா, சிலிம்ரிவரைச் சேர்ந்த (பேரா) குமாரி ஆர். குமாரி, சுங்கை மகாங் தோட்டத்தைச் சேர்ந்த (நெகிரி செம்பிலான்) குமாரி கே. நாகம்மாள், அம்பர்தினாங் தோட்டத்தைச் சேர்ந்த (காஜாங்) குமாரி தனலட்சுமி, சிகாமட்டைச் (ஜோகூர்) சேர்ந்த குமாரி க. திருபுவனதேவி, பத்துமலையைச் (கோலாலம்பூர்) சேர்ந்த திரு. பாலன், பேரா, சிம்மோர், கிளாபாங் தோட்டத்தைச் சேர்ந்த திரு. தாமரைச்செல்வம், கோலாலம்பூரைச் சேர்ந்த திரு. அ. ராஜமாணிக்கம், திரு. எம். துரைராஜா, திரு. ஆர். அன்பரசு, கிள்ளானைச் சேர்ந்த திரு. ரைமண்ட் நாண்டஸ், பிறையைச் சேர்ந்த திரு. ப. ராஜா, பெட்டாலிங் ஜெயாவைச் சேர்ந்த திரு. மெர்தேகா சதாசிவம் ஆகிய 14 பேர் நேரில் வந்திருந்தனர்.



துங்குவுடன் மெர்தேகா குழந்தைகள்.

திருமதி வெல்லிங்டன், தனது மகன் விக்டர் சார்பில் சுதந்திரத் தந்தை துங்குவிடம் பரிசு பெறுகிறார்.





புதிய சமுதாயம் மெர்தேகா சிறப்பிதழை உன்னிப்பாகப் பார்க்கிறார் துங்கு.

செலாபா தோட்டத்தைச் சேர்ந்த திரு. விக்டரின் சார்பில் அவருடைய அன்னையார் திருமதி சாமுவேல் வில்லிங்டன் வந்திருந்தார். பினாங்கைச் சேர்ந்த ரஹிமா பீயின் சார்பில் மலேசிய வானொலியில் பணியாற்றும் அவரது மாமா திரு. அசன்கனி வந்திருந்தார்.

பரிசளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வாய்ப்பில்லை என அறிவித்தவர்கள்: திரு. கே. சேகரன் (சுங்கைப் பட்டாணி), குமாரி தமயந்தி (கூலிம்), திரு. என். நாகராஜன் (ரவாங்), திரு. குமார் (ஈப்போ), திரு. ஏ. மரியதாஸ் (கோலாலம்பூர்).

எல்லோரும் போன சமயத்தில் துன் சம்பந்தன் அவர்களது இல்லத்தில் ஏகப்பட்ட கூட்டம். தகவல் துறை அமைச்சர் டத்தோ ஹாஜி அமார் தாயிப், வெளிநாட்டுத் தூதர்கள். ம. இ. கா.வின் முக்கிய பிரமுகர்கள், உறுப்பினர்கள், ம.சீ.ச. பிரமுகர்கள், அம்னோ பிரமுகர்கள், இப்படிப் பல தரப்பட்டவர்கள் அங்குப் பெருந்திரளாக தீபாவளி விருந்தை சுவைத்துக் கொண்டிருந்தனர்.

"பரிசளிப்பு நிகழ்ச்சியை இப்போது நடத்தி விடலாமா?" என ஆசிரியர் ஒரு கட்டத்தில் கூட்டுறவுத் தந்தையிடம் கேட்டபோது "கொஞ்சம் பொறுங்கள், பிறகு நடத்தலாம்" என்று அவர் கூறினார். அவர் கூறிய 'பிறகு' எப்போது என்பது சற்று நேரத்தில் தெரிந்தது. ஆமாம். சுதந்திரத் தந்தை துங்கு அங்கு வந்தவுடன் "அதுதான் பரிசளிக்க வேண்டிய நேரம்" என்று துன் சம்பந்தன் ஆசிரியரிடம் கூறினார்.

"நான் பரிசு வழங்குதைவிட சுதந்திரத் தந்தை துங்கு அவர்கள் மெர்தேகா குழந்தைகளுக்குப் பரிசளிப்பதுதான் பொருத்தம்?" என்று துன் சம்பந்தன் கூறியதைக் கேட்டதும் கூட்டுறவுத் தந்தையின் எண்ணம் ஆசிரியருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

காலை 11.30க்கு வரும்படி கூறியதும், அதற்குப் பிறகு சிறிது நேரத்தில் துங்கு அங்கு வந்ததும், அதனைத் தொடர்ந்து துன் சம்பந்தன் கூறியதும் துன் சம்பந்தன் அவர்கள் திட்டமிட்டே இந்தப் பரிசளிப்பை நடத்த அன்றைய தினத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் எனக் கருதச் செய்தது.

துன் அவர்களின் விருப்பப்படியே சுதந்திரத் தந்தை துங்கு அவர்களின் கரங்களால் சுதந்திரத் தினத்தன்று பிறந்த மெர்தேகா குழந்தைகள் பரிசுகள் பெற்றனர்.


மெர்தேகா குழந்தைகளுக்குப் பரிசளிப்பது மட்டும் புதிய சமுதாயத்தின் நோக்கமல்ல. தங்களின் இரண்டு நாள் விருந்தினர்களாக அவர்களை இங்கே தங்க வைத்து கோலாலம்பூர் மாநகரின் முக்கிய இடங்களை அவர்களுக்குச் சுற்றிக் காண்பிக்கவேண்டும் என்பதும் புதிய சமுதாயத்தின் நோக்கமாக இருந்தது. அதற்காக ஞாயிற்றுக் கிழமையும் திங்கட்கிழமையுமாக 13,14-ஆம் தேதிகளில் இரண்டு நாட்களுக்குச் சுற்றுலாத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

மதிய உணவை முடித்துக் கொண்டு எல்லாரும் நகர்ச் சுற்றுலா புறப்பட்டார்கள். பூமலையில் கம்பீரமாக எழுந்து நிற்கும் நாடாளுமன்றக் கட்டடம், நாட்டைக் காத்த வீரர்களின் நினைவுச் சின்னமான தேசிய நினைவுச் சின்னம், தென்கிழக்காசியாவிலேயே பெரிய பள்ளிவாசலான தேசியப் பள்ளிவாசல், 50,000 பேர் ஒரே சமயத்தில் அமர்ந்து கண்டுகளிக்கும் மெர்தேகா அரங்கம் முதலிய குறிப்பிடத்தக்க இடங்களைச் சுற்றிப் பார்த்தனர்.

இத்தகைய இடங்களைச் சுற்றிப் பார்ப்பதோடு முக்கிய பொது அமைப்புக்களையும் அதன் தலைவர்களையும், மெர்தேகா குழந்தைகள் அறிந்து கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த வகையில் மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவையின் தலைவர் திரு. க. கிருஷ்ணசாமி அவர்களின் இல்லத்தில் மாலையில் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

பரிசு வழங்கிய துங்குவுக்குப் பரிசு வழங்கும் செல்வி தாமரை.



பேரவையின் பொதுச் செயலாளர் திரு. கிருட் மாறன், துணைப் பொதுச் செயலாளர் திரு. மன்னர் மன்னன் இருவரும் மெர்தேகா குழந்தைகளை வரவேற்றனர். முக்கிய அலுவல் காரணமாக வெளியூர் சென்றிருந்த திரு. கிருஷ்ணசாமி -யை மெர்தேகா குழந்தைகள் காணாத குறையை அவரது துணைவியார் திருமதி இந்திராணி கிருஷ்ணசாமியின் கனிவான வரவேற்பும் அன்பான உபசரிப்பும் தீர்த்துவிட்டன.

மெர்தேகா குழந்தைகள் அனைவரும் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட பிறகு திரு. கிருட் மாறன், மணிமன்றப் பேரவையைப் பற்றி விளக்கினார். "புதிய சமுதாயம்" கண்டெடுத்த மெர்தேகா குழந்தைகளை வரவேற்பதில் பேரவை பெரிதும் மகிழ்ச்சி கொள்கிறது என்றும் அவர் சொன்னார்.

அதன் பிறகு ஆசிரியர் முருகு பேசுகையில் "நாட்டின் குறிப்பிடத்தக்க இயக்கங்களில் ஒன்றான மணிமன்றப் பேரவையை— அதிலும் இளைஞர் இயக்கத்தை— இளைஞர்களான மெர்தேகா குழந்தைகள் தெரிந்துகொள்வது நல்லது" என்று குறிப்பிட்டார்.

பேரவையின் தேநீர் விருந்துக்குப் பிறகு நேரே பத்துமலை முருகனை அனைவரும் தரிசிக்கச் சென்றனர். வந்திருப்பவர்கள் மெர்தேகா குழந்தைகள் என்பதைத் தெரிந்து கொண்ட கலைக்கூட நிர்வாகி இலவசமாகக் கலைக்கூடத்திற்குள் அவர்களை அனுமதித்தார்.

பத்துமலைக் கலைக்கூடத்தைச் சுற்றிப் பார்த்த பின்னர் பத்துமலை முருகனைத் தரிசிக்க மலை ஏறினர். அங்கு மெர்தேகா குழந்தைகளில் பலர் பழ-தேங்காய் அர்ச்சனை செய்து கொண்டனர்.

இரவு 7-30க்கு ம. இ. கா. தலைமையகத்தில் மெர்தேகா குழந்தைகளுக்கு விருந்து.

தொழிலாளர் ஆள்பல துணை அமைச்சர் மாண்புமிகு கு. பத்மநாபன் எல்லோரையும் எதிர்கொண்டு வரவேற்றார். ம. இ. கா. தேசியத் தலைவரும், தொடர்புத்துறை அமைச்சருமான டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்களின் அரசியல் செயலாளர் திரு. பொன்னம்பலமும் உடனிருந்தார்.

அறிமுக நிகழ்ச்சிக்குப் பிறகு துணையமைச்சர் "பத்மா" ம. இ. கா. வரலாற்றைச் சுருக்கமாக மெர்தேகா குழந்தைகளிடம் விளக்கினார்.

"சுதந்திர தினத்தன்று எப்படி மக்கள் மகிழ்ச்சியுடன் இருந்தார்களோ, அதேபோல அன்று பிறந்த நீங்கள் என்றும் மகிழ்ச்சியுடன் இருக்க ம. இ. கா. வாழ்த்துகிறது" என்று மெர்தேகா குழந்தைகளை வாழ்த்தினார் துணையமைச்சர் "பத்மா."

சுதந்திர வரலாற்றை மறக்க முடியாதபடி நினைவுச் சின்னங்களாக ஒளிவீசுபவர்கள் மெர்தேகா குழந்தைகள் என்றும் அவர் சொன்னார்.

"மெர்தேகா குழந்தைகளுக்குப் "புதிய சமுதாயம்" வழங்கிய பரிசு மட்டுமின்றி, தலைநகரிலுள்ள மற்ற நிறுவனங்களும் அன்பர்களும் பரிசு வழங்கிச் சிறப்பித்தனர்.

சலீம் கம்பெனி, அஜந்தா டெக்ஸ்டைல்ஸ், ஸ்ரீ அம்பாள் கம்பெனி, தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை நிர்வாகி திரு. கே. ஆர். சோமசுந்தரம் ஆகியோர் வழங்கிய பரிசுகளையும் துங்கூ[illegible]யிருந்து மெர்தேகா குழந்தைகள் பெற்றனர். பரிசு வழங்கிய நல்ல உள்ளங்களுக்குப் "புதிய சமுதாயம்" தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.



மணிமன்றப் பேரவையின் தேசியத் தலைவர்
திரு. க. கிருஷ்ணசாமி அவர்களின் இல்லத்தில்...

ஆசிரியர் திரு. முருகு பேசுகையில் "இந்நாட்டுக்குச் சுதந்திரம் கேட்ட முதல் அரசியல் கட்சி ம.இ.கா. என்னும் முறையில் ம. இ. கா.வால் மெர்தேகா குழந்தைகள் கௌரவிக்கப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்" என்று குறிப்பிட்டார்.

விருந்தின் கடைசி நிகழ்ச்சியாக துணையமைச்சர் "பத்மா" ம. இ. காவின் நீலப் புத்தகத்தை எல்லோருக்கும் கையெழுத்திட்டுப் பரிசாக வழங்கினார்.



கனிவுடன் வரவேற்ற
திருமதி கிருஷ்ணசாமி.

ம. இ. கா. தலைமையகத்தின் சுவையான விருந்தோடு முதல் நாள் பயணம் நிறைவுற்றது.

மெர்தேகா குழந்தைகளின் இரண்டாம் நாள் சுற்றுலா ஆசிரியரின் குமாரரும் மலேசிய வானொலி செய்தித்துறை (தமிழ்) அதிகாரியுமான திரு. செல்வம் அவர்கள் வீட்டிலிருந்து தொடங்கியது.

சுடச்சுட இட்லிகளையும், சுவையான சாம்பாரையும் மற்றும் கேசரி முதலியவற்றையும் காலைப் பலகாரமாக அவர்கள் வீட்டில் மெர்தேகா குழந்தைகளுக்கென தயாரித்திருந்தார்கள்.

உணவை முடித்துக் கொண்டு அனைவரும் தமிழ்மலர் அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

"மலரைத் தேடிச்சென்ற வண்டுகளுக்கு அவர்கள் எதிர்பாராத வரவேற்பு கிடைத்தது. தமிழ் மலரின் தலைமை நிர்வாகி திரு. சண்முகசுந்தரமே, அவர்களை ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்று தெளிவாக விளக்கினார். ஆசிரியர் குழுவினரை அறிமுகப்படுத்தினார். ஒவ்வொரு நாளும் வெளிவரும் தமிழ்மலர் எவ்விதம் உருவாகிறது என்பதை விளக்கினார். இறுதியாக தமிழ்மலர் உருவாவதற்கு நடுநாயகமாக நின்று பணியாற்றும் பிரம்மாண்டமான "ஆப்செட்" இயந்திரத்தையும் காண்பித்தார்.

அடுத்த இலக்கு சுங்கை பூசியிலுள்ள உத்துசான் மலேசியா அலுவலகம்.



பத்துமலை கலைக்கூடத்தின் முன்பு...

காலை மணி பதினொன்றுக்கெல்லாம் உத்துசான் மலேசியா அலுவலகத்தைப் பஸ் அடைந்தது. அங்கே அலுவலகத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் அனைத்தையும் விளக்கிக் கூறினார். தலா மூப்பது லட்சம் மதிப்புள்ள இரண்டு மாபெரும் அச்சடிக்கும் இயந்திரங்களையும் கண்ணோட்டமிட்டார்கள். பத்திரிகைத் துறையில் ஏற்பட்டுள்ள பெரும் மாறுதல்களையும், நவீன முன்னேற்றங்களையும் கண்டு அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பினை அவர்களது கண்களே வெளிப்படுத்தின.

மெர்தேகா குழந்தைகளில் சிலரை உத்துசான் மலேசியாவின் புகைப்படக் கலைஞர் படமெடுத்தார். மெர்தேகா குழந்தைகளில் ஆண்களில் இருவரையும் பெண்



மெர்தேகா குழந்தைகள். புதிய சமுதாயம் ஏற்பாடு செய்திருந்த பஸ்ஸில்.



ம. இ. கா. தலைமையகத்தில் துணையமைச்சர் "பத்மா" பேசும்போது...

களில் இருவரையும் உத்துசான் மலேசிய நிருபர் பேட்டி கண்டார்.

உத்துசான் மலேசியா அலுவலகத்திலிருந்து புறப்பட்டு பஸ் தோட்ட மாளிகையை நோக்கிச் சென்றது.

தோட்டப் பட்டாளிகளின் நலத்தையும், முன்னேற்றத்தையும் காப்பதற்கென்றே கம்பீரமாய் எழுந்து நிற்கும் தோட்ட மாளிகை மட்டும் அவர்களை வரவேற்கவில்லை; சங்கத்தின் தேசியத் தலைவர் திரு. மரியசூசை, துணைப் பொதுச் செயலாளர் திரு. ஜி. பெருமாள், நிதிச் செயலாளர் திரு. ரத்தினம் ஆகியோருடன் மாநிலத்



"தமிழ் மலர்" அலுவலகத்தில் அதன் நிர்வாகி மற்றும் ஆசிரியர் குழுவினருடன்.

தலைவர்களும் சங்கமணி ஆசிரியர் திரு. சங்கு சண்முகமும் அவர்களை உள்ளன்போடு வரவேற்றனர்.

இந்த இடத்தில் ஒன்றை நினைவு கூர வேண்டும். தோட்ட மாளிகையும் சுதந்திர தினத்தில் திறப்பு விழா செய்யப்பட்டது. ஆகவே அதற்கும் 21 வயது ஆகிவிட்டது. மெர்தேகா குழந்தைகளுக்கும் 21 வயதாகிறது.


முதலில் தலைவர் திரு. மரியசூசை சங்கமணி அச்சகத்திற்கு அழைத்துச் சென்றார். தமிழ், ஆங்கிலம், மலாய், தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளிவரும் "சங்கமணி" பத்திரிகை அங்குதான் அச்சடிக்கப்படுகின்றது என்பதையும் கூறினார். பின்னர் ஒவ்வொரு நிர்வாகப் பகுதியையும் சுற்றிக் காண்பித்தார். "வேலு மண்டபம்" எனப்படும் சந்திப்புக்கூடம் ஒன்றையும் மெர்தேகா குழந்தைகள் கண்டனர்.

ஒருமுறை ஒரு கடையைக் கொள்ளையர்கள் கொள்ளையிட முயன்றபோது அதனைத் தடுத்து அதனால் துப்பாக்கிச் சூடுபட்டு இறந்த வீரர் வேலுவின் நினைவாக அம்மண்டபத்திற்கு அவரது பெயர் இடப்பட்டது என்பதையும் திரு. மரியசூசை விளக்கினார்.

இறுதியாக மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "ரிட்லி" மண்டபத்திற்கு சென்றனர். சிங்கப்பூரின் பொட்டானிகல் தோட்டத்திலிருந்து முதன்முதலில் மலேசியாவிற்கு ரப்பர் விதைகளைக் கொண்டு வந்த வெள்ளையரான ரிட்லி என்



தோட்ட மாளிகையில் தே. தோ. தொ. ச. தலைவர் திரு. மரியசூசை வரவேற்புரை ஆற்றுகிறார். மற்றவர்கள் மாநிலக் கிளைகளின் செயலாளர்களும் தலைமையக அதிகாரிகளும்.



"சங்கமணி" அச்சகத்தில்...

தவர்களை ஏற்றிக்கொண்டு பஸ் மலாயாப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றது. நேரமின்மையால் பஸ்ஸில் இருந்தபடியே பல்கலைக்கழகத்தின் பிரம்மாண்டமான கட்டிடங்களைப் பார்த்தபிறகு அனைவரும் "நியூ ஸ்டிரெய்ட்ஸ் டைம்ஸ்" அலுவலகத்திற்குச் சென்றனர்.

மலேசியப் பத்திரிகைகளில் அதி நவீன அமைப்பைக் கொண்ட அந்த அலுவலகத்திலும் சிறப்பான வரவேற்பைப் பெற்றனர்கள் மெர்தேகா தினத்தன்று பிறந்தவர்கள். அங்கு வேலைசெய்யும் அதிகாரிகள் ஆர்வத்துடன் ஒவ்வொரு பகுதியையும் அதன் இயல்பையும் விளக்கினர்கள். நியூ ஸ்டிரெய்ட்ஸ் டைம்ஸ் (1977) ஆண்டு மலரும், தாகத்துக்குக் குளிர்பானமும் வழங்கினர்கள்.

மெர்தேகா குழந்தைகளில் ஒருவரான திரு. அன்பரசு மாலை விருந்தை கர்னி சாலையிலுள்ள தமது இல்லத்தில் ஏற்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க அனைவரும் அவரது வீட்டுக்குச் சென்றனர்கள். சாதாரண, சிறிய விருந்தென்று முதலில் கூறிய அவர் கேக், பிஸ்கட் போன்ற பலவகைப் பலகாரங்கள் சகிதமாய்ப் பலமான விருந்தாகவே அளித்துவிட்டார்.

அடுத்து, அவரது குடும்பத்தாரிடம் விடைபெற்றுவிட்டு, முன்பே ஏற்பாடு செய்திருந்தபடி மாலை மணி ஐந்துக்கு மலேசியத் திராவிடர் கழகத் தலைமையகம் வழங்கிய விருந்துக்குச் சென்றனர். விருந்து ஜாலான் செராஸில், கச்சாங் சாலையிலுள்ள மலேசியத்

பவரின் நினைவாக அந்த மாபெரும் அழகிய மண்டபத்திற்கு அவர் பெயர் வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அனைவரும் அந்த மண்டபத்தினுள் சென்றார்கள். முதலில் அறிமுகப்படலம் நடந்தது. திரு. மரியசூசை, சங்கத்தின் அதிகாரிகளையும் முக்கிய நிர்வாகத்தினரையும் அறிமுகப்படுத்தினார். சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் பி. பி. நாராயணன் அவர்கள் முக்கிய அலுவல் காரணமாக வெளியே சென்றிருப்பதாகக் கூறிய அவரது உரைக்குப் பின்னர் மெர்தேகா குழந்தைகளும் "புதிய சமுதாயம்" குடும்பத்தினரும் அறிமுகப்படுத்தப்பட்டனர். சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் திரு. தி. பெருமாள் அவர்களும் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களும் உரையாற்றினர்.



தோட்ட மாளிகையில் திரு. முருகு பேசுகிறார்.

மதிய விருந்து தொடர்ந்தது. யாரும் எதிர்பாராத வகையில் அருமையான மரக்கறி உணவுவகைகள் பரிமாறப்பட்டன. "தீபாவளி சமயத்தில் இறைச்சி வகைகள் சாப்பிட்டிருப்பீர்கள். ஆகவே சற்று மாறுதலாக இருக்கட்டுமே என்று மரக்கறி உணவுவகைகள் தயார் செய்தோம்" என்று திரு. மரியசூசை கூறினர். அதுமட்டுமா? வடை, பாயசமும் உணவில் இடம்பெற்றிருந்தது.

உண்ட களைப்பில் வந்து சாய்ந்



நியூ ஸ்டிரெய்ட்ஸ் டைம்ஸ் பத்திரிகை அலுவலகத்தில் திரு. பாலகுரு மெர்தேகா குழந்தைகளுக்கு விளக்கமளிக்கிறார்.



மெர்தேகா குழந்தைகளில் ஒருவரான கோலாலமபூரைச் சேர்ந்த திரு. அன்பரசு. (இடக்கோடி) தனது வீட்டில் அளித்த சிற்றுண்டியின்போது...



தே.தோ.தொ.ச. தோட்ட மாளிகையில் துணைப் பொதுச் செயலாளர் திரு. ஜி. பெருமாள் பேசும் போது...



ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் தேவஸ்தானத் தலைவர் திரு. செ. சொக்கலிங்கத்துடன்

திராவிடர் கழகக் கோலாலம்பூர் கிளை இல்லத்தில் நடந்தது. அங்கே கழகத்தவர்களால் சிலர் மெர்தேகா குழந்தைகளை காணும் ஆவலில் காத்திருந்தனர்.

சற்று நேரத்தில் கழகத்தின் தேசியத் தலைவர் திருச்சுடர் கே. ஆர். ராமசாமியும் வந்து சேர்ந்தார். அவர் திராவிட கழகத்தைப் பற்றிய சிறு விளக்கவுரையை நிகழ்த்தினார். அவ்வமயம் அனைவருக்கும் திராவிடர் கழகத்தின் முப்பதாம் ஆண்டு மலரும், ஒரு டைரியும், கழகச் சின்னமும் வழங்கப்பட்டன. ஆசிரியர் முருகுவின் உரைக்குப் பின்னர் கழகத்தின் தேசியப் பொதுச் செயலாளர் ரெ. சு. முத்தையா நன்றி உரையினை ஆற்றினார். அது முடிந்ததும் தேநீரை அனைவரும் சுவைத்தனர். இரண்டு நாட்களாக மலேசியத் தலைநகரை வலம்வந்த மெர்தேகா குழந்தைகள், இறுதி நிகழ்ச்சியாக மலேசியாவின் புராதன ஆலயங்களுள் ஒன்றான ஸ்ரீமகா மாரியம்மன் ஆலயத்திற்குச் சென்றனர்.

அம்பாள் தரிசனத்திற்குப் பின்னர் மாரியம்மன் கோயில் தேவஸ்தானத் தலைவர் திரு. செ. சொக்கலிங்கம் முன்னிலையில் தேநீர், பொங்கல் பிரசாதம் கூடிய சிறு விருந்தொன்று நடைபெற்றது.

தலைவர் திரு. சொக்கலிங்கம், தமது உரைக்குப் பின்னர் மாரியம்மன் தேவஸ்தானம் வெளியிட்ட திருமுறைப் பாமாலை, குடமுழுக்கு விழா மலர் ஆகிய நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்.

இருநாட்களின் சுற்றுலா அம்பாள் தரிசனத்தோடு பூர்த்தியானது.

அந்த இரு நாட்களிலும் வகைவகையான இனிப்புப் பண்டங்களை உண்ட மெர்தேகா குழந்தைகளின் வாய்கள்தாம் இனித்ததே தவிர, அவர்களின் மனங்களில் ஏதோ கசப்பு எல்லோரும் பிரியும்போது ஏற்பட்டது.

மெர்தேகா தினத்தன்று- ஒரே நாளில்- பிறந்தவர்கள் எங்கெங்கோ வாழ்பவர்கள் ஒரு குடும்பமாய் இரு நாட்களாகப் பழகிய பிறகு பிரிய நேருமென்றால் அவர்களுக்கு அந்தப் பிரிவு கசக்காமல் இனிக்கவா செய்யும். ஆனாலும் ஒரு மன நிறைவு எல்லோரும் இனி உடன் பிறவாச் சகோதரர்கள் என்ற நிறைவு.



ம. தி. க. தலைமையகம் வழங்கிய விருந்தில் ம. தி. க. தேசியத் தலைவர் திரு. கே. ஆர். ஆர். மெர்தேகா குழந்தைகளை வரவேற்கிறார்.



ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் அம்பாள் தரிசனம்.

15 நாள் பலன்

நவம்பர் 26 முதல் டிசம்பர் 10 வரை

(15 நாள் பலன், பிறந்த தேதியைக் கொண்டு கணிக்கப்படுகிறது. ஆகவே, அவரவர் பிறந்த தேதிக்குள் அடங்கிய ராசியில் கண்டுள்ள பலனைத் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம். எடுத்துக்காட்டாக, ஜனவரி 20-ஆம் தேதி முதல் பிப்ரவரி 18-ஆம் தேதிக்குள் பிறந்தவர்களுக்குக் கும்பம் (ஜன. 20-பிப். 18) என்பதன் கீழுள்ள பலன் பொருந்தும்)

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

வியாபாரிகளுக்கு நன்மை விளையும். அதற்காக தேவைக்கு அதிகமான பொருட்களை வாங்குவதில் பணத்தைச் செலவிட்டால் அவர்களுக்கு நல்லதல்ல. பொருளாதாரத்தில் பிறருடைய ஆலோசனையின்படி நடவாமல் சொந்த யோசனையின்படி செயல்படுதல் நல்லது. உத்தியோகஸ்தர்களுக்குச் செய்தொழிலில் அவிழ்க்க முடிந்த சிக்கல் ஏற்படும்.

நல்ல நாட்கள்: 27, 3, 6
எச்சரிக்கை நாட்கள்: 29, 2

மீனம் (பிப் 19 - மார்ச்சு 20)

மேலதிகாரிகள் உங்களுக்குச் சாதகமாக நடந்துகொள்வார்கள். ஆனால் குடும்பத்தில் அப்படியல்ல. சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் உணர்ச்சிவசப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள். திடீர் அதிர்ஷ்டம் வரலாம். பிறர் உங்களை ஏமாற்ற முயல்வார்கள். எச்சரிக்கை தேவை.

நல்ல நாட்கள்: 28, 4, 9
எச்சரிக்கை நாட்கள்: 29, 5

மேஷம் (மார்ச்சு 21 - எப். 20)

உங்களுக்கு உதவி செய்யும் நண்பர்களிடம் நீங்கள் நல்லபடி நடந்துகொள்ளுங்கள். கையிலும் பையிலும் அதிகமாகப் பணம் வைத்திராதீர்கள். செலவு செய்யக் கையும் மனமும் விரும்பிக்கொண்டே இருக்கும். உடல் ஆரோக்கியத்திலும் வாகனப் போக்குவரத்திலும்கவனம் தேவை. சக ஊழியர்களின் விரோதத்தைத் தேடிக்கொள்ள வேண்டாம்

நல்ல நாட்கள்: 2, 5, 6
எச்சரிக்கை நாட்கள்: 28, 4

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

உங்களின் சொந்த விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளப் பிறரின் உதவியை நாடவேண்டாம். அது இன்னும் சிக்கலை உண்டாக்கும். குடும்பத்தில் உள்ளவர்களோடு வாக்குவாதம் ஏற்படும். பேச்சில் சாதுரியம் தேவை. கடிதப் போக்குவரத்தினால் நன்மை உண்டு. தூரத்து உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் உதவி கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 26, 30, 7
எச்சரிக்கை நாட்கள்: 28, 4

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

எல்லாவித வாகனப் போக்குவரத்திலும் கவனம் தேவை. இயந்திரம் சம்பந்தப்பட்டவற்றோடு தொடர்புடையவர்கள் மிகவும் கவனமுடன் அவற்றைக் கையாள வேண்டும். பணக்கவலை அவ்வளவாக இராது. சூதாட்டம், குதிரைப் பந்தயம் போன்றவற்றில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு கனவில்கூட லாபம் கிடைக்காது.

நல்ல நாட்கள்: 27, 30, 1
எச்சரிக்கை நாட்கள்: 29, 6, 9

கடகம் (ஜூன்21-ஜூலை 20)

குடும்பத்தில் தகராறு ஏற்படுவது பற்றிக் கவலையடைய வேண்டாம் சில நாட்களுக்குப் பிறகு சரியாகிவிடும். புதிய நண்பர்களினால் நன்மை உண்டு. அதிர்ஷ்டம் வரும். பயன்படுத்திக் கொள்ளுங்கள். கடினமாக உழைக்கவேண்டியிருக்கும். அதற்கேற்றபடி பலன் கிடைக்கும் என்பதால் நன்றாக உழையுங்கள்.

நல்ல நாட்கள்: 30, 5, 7
எச்சரிக்கை நாட்கள்: 29, 6

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)

தொட்டதெல்லாம் செலவு தான். பெரியோர்களின் ஆதரவு குறையும். வாகனப் போக்குவரத்தைக் கூடுமானவரை தவிருங்கள். இலக்கியவாதிகளுக்கும் கலைஞர்களுக்கும் நல்ல நேரம். உடலாரோக்கியம் நல்லபடி இருக்கும்

நல்ல நாட்கள் 6, 9
எச்சரிக்கை நாட்கள்: 27, 30

கன்னி (ஆக 22 - செப் 22)

ஒரு காலத்தில் உதவி செய்தவர்களின் நட்பை இப்போது உதறிக் கொண்டுவிடாதீர்கள். அவர்களின் உதவி இப்போது தேவைப்படும். தற்சமயம் உங்களுடன் நெருக்கமாக இருப்பவர்கள் உள்ளூற உங்களை வெறுக்கும் சூழ்நிலை ஏற்படும்- சகிப்புத்தன்மையும் பொறுமையும் உங்களுக்கு இப்போது அவசியம் தேவைப்படுகின்றன.

நல்ல நாட்கள்: 27, 5
எச்சரிக்கை நாட்கள்: 29, 6, 8

துலாம் (செப் 23-அக். 22)

"சூயிங்கம்" மிட்டாய் மாதிரி நீண்டு கொண்டிருந்த பிரச்னைகள் தீர்வுக்குவரும். நண்பர்கள், பெரியோர்கள் ஆலோசனைகளும் உதவியும் தேவைக்கு அதிகமாகவே கிடைக்கும். கூடுமானவரை வாகனப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பகைவர்கள் நண்பர்களாகும் சாத்தியம் உண்டு.

நல்ல நாட்கள்: 28, 8
எச்சரிக்கை நாட்கள் 30, 9

விருச்சிகம் (அக் 23-நவ. 22)

பொதுசேவையில் அதிகம் ஈடுபாடு காண்பிப்பீர்கள். அதனால் சமூகத்தில் உங்களுக்கு நல்ல பேர் கிடைக்கும்; நண்பர்களின் எண்ணிக்கை பெருகும். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். பணம் மிச்சம் ஏற்படாது போனாலும் செலவுக்குக் கையைக் கடிக்காது. எதிலும் கையெழுத்திடுவதில் கவனம்தேவை.

நல்ல நாட்கள்: 27, 4
எச்சரிக்கை நாட்கள்: 29, 8

தனுசு (நவ 23 - டிச. 20)

பணம் திரட்டும் முயற்சிகள் பலனளிக்கும். உங்களிடமுள்ள திறமைகளை முழுமையாகப் பயன்படுத்த வாய்ப்புக் கிட்டும். முயன்றால் வெற்றி உங்களுக்கே. வாழ்க்கையில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம்.

நல்ல நாட்கள்: 26, 30, 1
எச்சரிக்கை நாட்கள்: 4, 8

மகரம் (டிச 21- ஜன 19)

உள்ளொன்று வைத்துப் புறமென்று பேசும் நண்பர்களால் நல்லவையா ஏற்படும்? அவர்களை இனங்கண்டு எச்சரிக்கையாக இருங்கள். பணம் தேவைக்கேற்றவாறு கிடைக்கும். கடினமாக உழைக்க வேண்டியிருப்பதால் உடலாரோக்கியம் பாதிக்கலாம். குடும்பத்தில் உள்ளவர்களால் நன்மை கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 27, 30
எச்சரிக்கை நாட்கள்: 1, 8

–தஞ்சை நகுலன்

தமிழறிவுப் போட்டி 9

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.

2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஓரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.


8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.

9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.

10. இறுதிநாள் 10-12-1977.

11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
P.O. Box 2066
Kuala Lumpur



பெயர் ____________________

அடையாள அட்டை எண் ____________________

முகவரி ____________________

____
கையொப்பம்.

முடிவு நாள் 10-12-77

மேலிருந்து கீழ்:

1. இதற்கும் செலவாளிகளுக்கும் அதிக தூரம்.
2. இதைப் பயன்படுத்தும் பெண்கள் குறைந்து வருகின்றார்கள்.
4. வானத்தில் தோன்றுவது.
6. இதைக் கேட்டால் பாம்பு மயங்கும்.
9. மனிதர்களின் வேலையைப் பெருமளவுந்தக் குறைக்க உதவும் சக்தி.

இடமிருந்து வலம்:

1. கடைசிக் காலத்தில் பயன் தரும் பணம்.
5. திருமணத்தன்று மணமக்கள் அணிந்து கொள்வது.
7. பறவை.
8. கண்ணனிடம் உள்ளது.
9. இது உள்ளவர்கள் எளிதில் முன்னேற முடியாது.
10. இவனை வெல்ல மனிதனால் முடியாது.
11. இதன் வலிமையே பெரிதென்பார்கள் சிலர்.

பரிசு $190

போட்டி 8 முடிவு



தமிழறிவுப் போட்டி 8-க்கு 5,895 கூப்பன்கள் வந்தன. காலங் கடந்து வந்த 305 கூப்பன்கள் நிராகரிக்கப்பட்டன.

5,895 கூப்பன்களில் ஒன்றுகூட சரியான விடையைக் கொண்டிருக்கவில்லை. தமிழறிவுப் போட்டி துவங்கியதிலிருந்து ஒருவர் கூடச் சரியான விடையை எழுதாமல் போனது இதுவே முதல் தடவையாகும்.

போட்டி விதிகளின்படி ஒரு பிழையைக் கொண்டிருக்கும் கூப்பன்களுக்கு $10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய $90 அடுத்த போட்டிக்குரிய பரிசு [தமிழறிவுப் போட்டி-9] நூறு வெள்ளியோடு சேர்க்கப்படும்.

ஆகவே, மறந்து விடாதீர்கள், வாசகர்களே. தமிழறிவுப் போட்டி 9-இன் பரிசுத்தொகை $190.

போட்டி-8-இல் $ 10ஐப் பகிர்ந்து கொள்ளும் மூவர் வருமாறு.

1. வி. கிருஷ்ணன். டோர்கிங்டன் தோட்டம், சபாக் பெர்ணம், சிலாங்கூர்.

2. ப. கணேசன். 42-எல், கிரீன் லேன், பினாங்கு.

3. ஆர். முனியசாமி. 59. ஜாலான் 13. பண்டமாரான் ஜெயா, போர்ட்கிள்ளான்.

கனவுகள் பலகோடி



'மாங்கனி'

27. 'நீ சொல்லாவிடில் யார் சொல்லுவார்...'

வனிதாவின் அன்னை இந்துமதி லல்லியைச் சில விநாடிகள் பரிவோடு நோக்கினாள். தான் வனிதாவோடு தங்கிக்கொள்ளப் போவதாகக் கூறியதைக் கேட்டபோது லல்லியின் முகம் மாறிப்போய்விட்டதைக் கவனித்த இந்துமதிக்கு என்னவோ போலிருந்தது. லல்லியே அதைப்பற்றிப்பேசட்டும் என்பது போல் அவளைப் பார்த்தாள்

அவள் விரும்பியதைப்போல லல்லிதான் மௌனத்தைக் கலைத்தாள்.

"திடீரென்று இந்த ஏற்பாடு செய்வதற்கு ஏதும் காரணம் இருக்கிறதா மாமி!" —சுரத்தில்லாமல் இப்படி வினவினாள்.

இந்துமதி ஒரு பெருமூச்சுவிட்டாள்

"காலையில் அவர் இதைப்பற்றிக் கூறியபோது நானும் இப்படித்தான் குழப்பமடைந்தேன். ஆனால் இப்போது அது அவசியம்தான் என்று தோன்றுகிறது."

லல்லி புரியாதவள்போலக் கேள்விக்குறியோடு நோக்கினாள்.

"அப்படியானால் இது மாமாவின் ஏற்பாடுதானா...? நிச்சயம் ஏதோ பெரிய காரணமாகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் திடீரென்று அவர் இப்படிச் செய்ய முனைந்திருக்கமாட்டார்..."

லல்லி தனக்கே சமாதானம் செய்து கொள்வதைப்போலப் பேசினாள். இப்போது இந்துமதியின் தயக்கமும் உடைப்பெடுத்துக் கொண்டது.

"ஆமா லல்லி! நீ சொல்வது போல என்னவோ நடந்திருக்கிறது...! நேற்று மாலையில் யாரோ டெலிபோன் செய்தார்கள்! வனிதாவின் அப்பாவுக்கு ஒரே கோபம்! போனிலேயே கடுமையாகப் பேசினார்! இரவெல்லாம் சரியாக உறங்கவுமில்லை! காலையில் திடீரென்று இப்படி முடிவு செய்துவிட்டுப் புறப்பட்டு விட்டார்..."

லல்லிக்கு இப்போது விஷயம் விளங்கிவிட்டது. இது நவீனின் வேலைதான்! கோபிமீது ஏற்பட்ட ஆத்திரத்திற்குப் பழி தீர்த்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டான். அவனது திட்டமும் சரியானபடி வேலை செய்யத் தொடங்கிவிட்டது. பாவம்! இது எங்கே போய் எப்படி முடியப்போகிறதோ....?

அனுதாபத்தால் அவள் உள்ளம் கரைந்தது. ஆத்திரத்தால் மேலும் இறுகியது. அவளால் எதுவும் பேசமுடியவில்லை. லல்லி பேசாமல் இருப்பதைக்கண்டு இந்துமதி தொடர்ந்தாள்.

"ஆரம்பத்திலேயே நான் வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவர் கேட்கவில்லை! இப்போது இப்படித் துடிப்பதால் என்ன பயன்...! இளவயசுப் பெண்களைத் தனியாக விட்டுவைப்பதை மிகச்சாதாரண விஷயமாக இவர்கள் நினைக்கிறார்கள்..."

"இப்போது வருந்தும்படியாக எதுவும் நடந்துவிடவில்லையே...? ஏன் இப்படிக் கவலைப்படுகிறீர்கள்?"

இந்துமதி லல்லியை நிமிர்ந்து தீர்க்கமாகப் பார்த்தாள். "ஏதாவது நடந்துவிடக்கூடாதே என்ற கவலைதான்! பெண்ணைப் பெற்றவர்களுக்குப் பெண்ணோடு கவலையும் பிறந்துவிடும் என்பது இப்போதுதானே எனக்கும் புரிகிறது!"

"கவலை இருக்கும்போது சரிதான்! ஆனால் திடீர் என்று இப்படி வருந்தும்படியாக என்ன நடந்துவிட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை!"

"லல்லி! நீதான் வனிதாவோடு எப்போதும் இருப்பவளாயிற்றே! உனக்குத் தெரியாமல் இருக்க முடியுமா? வனிதாவைப்பற்றி அந்தக் கிழவி ஏதோ ஜாடையாகச் சொல்லி வைத்தாள்! அதுதான் இப்போதைக்கு என் கவலை எல்லாம்! அது உண்மையாக இருக்குமா... சொல்லு லல்லி...?"

லல்லிக்கு என்ன சொல்வதென்றே தெரியாமல் தவித்தாள்.

"மாமி! நீங்கள் எதைப்பற்றிச் சொல்லுகிறீர்கள்...?" —அவள் குரல் கரகரப்படைந்து விட்டது.

"வனிதா ஒரு பையனோடு நெருங்கிப் பழகுவதாகச் சொன்னாள்..."

"ஹூம்! இந்தக் கிழவிக்கு வேறு வேலையே கிடையாது! பார்த்தால் குற்றம்! பேசினால் தவறு! எதையாவது சொல்லிக்கொண்டேதான் இருப்பாள்! சரியான பட்டிக்காடு அவள்..."

"அப்படியானால் அதில் உண்மையில்லை என்கிறாயா...?" -இந்துமதி ஆவலோடு கேட்டாள்.

லல்லியால் அதை அடியோடு மறுக்கமுடியவில்லை. ஏற்கனவே நவீன் எல்லாவற்றையும் ஒன்றுக்கு இரண்டாக அவரிடம் சொல்லிவிட்டான். இனிமேல் அதை ஒரேயடியாக மறைத்துவிடமுடியாது! இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள் அவர்களுக்குத் தெரியத்தான் போகிறது.

அவள் சங்கடத்தோடு ஏறிட்டுப் பார்த்தாள்.

"மாமி! நீங்கள் படித்தவர்கள்! இதையெல்லாம் தவறாக எண்ணிக் கொள்ளமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்! கோபி என்ற என்னுடைய நண்பர் ஒருவர் வருவார். மிகவும் நல்லவர்! வனிதா அவரோடு தான் கொஞ்சம் தாராளமாகப் பழகுவாள்! அதைத்தான் அந்தக் கிழவி சொல்லியிருப்பாள்!"

"அப்படியானால் அவள் சொன்னதில் உண்மையும் இருக்கத்தான் செய்கிறது! இப்படிச் சாதாரணமாகத் தொடங்கித்தானே பெரிய விபரீதங்களில் முடிகிறது..."

இந்துமதியின் குரலில் மீண்டும் கவலையின் சாயல் தொனித்தது.

"இந்தக் காலத்தில் இதெல்லாம் மிகவும் சாதாரண விஷயம்! இதற்குப்போய் நீங்கள் கவலைப்படாதீர்கள்!"

"கவலைப்படாமல் எப்படியம்மா இருக்க முடியும்? வனிதா எங்களுக்கு இருக்கும் ஒரே பெண்! அவளுக்கு ஏதாவது ஒன்று ஏற்பட்டு விட்டால் எங்களால் தாங்கிக் கொள்ள முடியுமா...?"

"வனிதாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா மாமி? அப்படியெல்லாம் எதுவும் நடந்து விடாது! அப்படியே அவள் யாரையாவது விரும்பினாலும் கூட அவள் மனதைத் தொடக்கூடியவன் நல்ல குணமுடையவனாகத்தான் இருக்க முடியும்..."

லல்லி மெல்ல அவளைச் சமாதானப்படுத்த முயற்சி செய்தாள். இந்துமதி அவளை வியப்போடும் கவலையோடும் ஊன்றிப் பார்த்தாள்.

அவள் என்னவோ கேட்கத் தன்னைத் தயார் செய்து கொள்வது போல் லல்லிக்கு இதயத்திற்குள் ஒருவிதப் பதைபதைப்பு!

ஆனால் அதற்குள் வனிதாவின் அப்பா காரைப் படுவேகமாக ஓட்டிக்கொண்டு வந்து சரக்கென்று பிரேக் போடவே பரபரப்போடு அங்கே நோக்கினாள்.

கதவைப் படீரென அறைந்து சாத்திய விதம் ஆத்திரத்தைப் புலப்படுத்தியது!

அதைவிடப் பன் மடங்கு அதிர்ச்சியைத் தந்தது காரிலிருந்து இறங்கிய வனிதாவின் நிலை!

அழுது அழுது வீங்கிய முகமும் சிவந்த கண்களுமாய் விம்மலோடு காரின் கதவைப் பிடித்துக்கொண்டு நின்ற அவளைக் கண்டு பதறிப் போனாள் இந்துமதி!

தன் அருமை மகளுக்கு என்ன நேர்ந்ததோ என்று இதயம் துடித்தது. இரண்டே எட்டில் அருகில் சென்று அவளைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

அன்னையின் அணைப்பில் அடங்கிக் கிடந்த துயரம் பீறிட்டுவிட்டது. "என்னம்மா நடந்தது...? வனிதா கண்ணு! உனக்கு என்னம்மா...?" — பதைபதைத்துப் பரிதவிக்கும் பெற்றவளையோ, கேவிக் கேவி அழும் மகளையோ சற்றும் ஏறிட்டுப் பார்க்காத அவர், "உன் அருமை மகள் செய்த காரியத்திற்கு நீ வேறு அழுகிறாயா? போய் உடனே கிளம்ப ஆயத்தம் செய்! இவள் படித்ததுபோதும்.."! என்று வெறிகொண்ட வேங்கையைப்போல் சீறி விழுந்தார்.

28. "பழகிப் பிரிவது துயரம்..."

என்ன நடந்திருக்கும் என் பதைப் பட்டென்று புரிந்துகொண்டு விட்ட லல்லி வனிதாவிடம் சாவியை வாங்கிக் கதவைத் திறந்து விட்டாள்.

அழுது கொண்டே உள்ளே ஓடிய வனிதா கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு விம்மினாள்.

இந்துமதிக்கும் விஷயம் புரிய ஆரம்பித்திருந்தது! கணவரின் சீற்றமும் அவர் கூறிய சுடுசொற்களில் பொதிந்திருந்த அர்த்தமும் மகளின் அழுகைக்குரிய காரணத்தைத் தெளிவுபடுத்தின.

அவள் நெஞ்சில் நெருப்பைக் கொட்டியதுபோலத் துடித்துப் போய்விட்டாள். என்ன நடந்து விடக்கூடாது என்று அவர் பதறிக் கொண்டு வந்தாரோ அது நடந்தே விட்டது!

நேற்று ஒருவன் டெலிபோன் செய்த விஷயம் வனிதாவைப் பற்றியதாகவே இருந்திருக்க வேண்டும். அதனால்தான் அவர் அவ்வளவு அவசரமாகக் கிளம்பினார். தன்னையும் வனிதாவுடன தங்கிக் கொள்ளச் சொல்லி ஏற்பாடு செய்திருக்கிறார்.

என்ன பயன்?


எல்லாம் தலைக்கு மிஞ்சிய வெள்ளமாகிவிட்டதே? இந்துமதியின் உடலும் உள்ளமும் துவண்டு போய் விடுவதுபோல் வேதனையால் தகித்தன!

அவளால் பேச முடியவில்லை! மௌனமாக லல்லியை ஏறிட்டுப் பார்த்தாள்! அந்தப் பார்வையின் பொருள்....?

லல்லி தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். நிமிர்ந்து நோக்கும் துணிவு அவளுக்கு ஏது?

இந்துமதி மௌனமாகக் கண்ணீர் சிந்திக்கொண்டே பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தாள்.

முக்கியமான பொருட்களை எடுத்து ஒருவழியாகப் பயணத்திற்கு ஆயத்தமாக வைத்த பிறகே வனிதாவுக்கு அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரிய வந்தது! லல்லியைத் தவிப்போடு நோக்கினாள்.



அவளால் எதுவும் செய்ய முடியாதபடி நிலைமை கட்டுமீறிவிட்டது! தாயார் பயணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டாள். தந்தையோ காரின் கதவில் சாய்ந்து கொண்டிருந்தார்.

"விரைவில் கடிதம் போடுகிறேன்! நீயும் எழுத மறந்து விடாதே" என்று லல்லி வனிதாவின் காதில் மெள்ள கிசுகிசுத்தாள்.

வனிதா மௌனமாகத் தலையை ஆட்டிக்கொண்டாள்.

இது நீண்ட பிரிவு! நிலையான பிரிவுங்கூட என்பது அவளுக்கும் தெரிந்துவிட்டது! ஆனால்...! அதைத் தடுக்க அவளால் முடியாதே...?

என்னவோ சொல்லவேண்டும், அதுவும் நிறையச் சொல்ல வேண்டும் என்று வனிதா தவித்தாள்!

ஆனால் ஒரு வார்த்தைகூட வெளியே உதிரமுடியாமல் நெஞ்சுக்குள் ஒட்டிக் கொண்டது போல் இருந்தது அவளது நிலைமை.

பெட்டியைத் தூக்கிக்கொண்டு அவளது அன்னை முன்னே நடந்தாள். சில வினாடிகள் தயங்கி நின்ற வனிதா லல்லியை இறுக அணைத்துக்கொண்டாள். அவளால் அந்தப் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாது என்பது லல்லிக்கும் தெரியும்!

ஆனாலும் அவளால் என்ன செய்ய இயலும்...?

வனிதாவின் மலர் விழிகளிலிருந்து பெருகிய நீர்த்துளிகளின் வெம்மை அவளை உலுக்கியது.

"நான் எப்படியாவது கோபிக்கு விஷயத்தைச் சொல்லி அவருக்கும் ஆறுதல் சொல்லி வைக்கிறேன். கலங்காதே வனிதா! இப்போதைக்கு தைரியமாக இரு! அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடாதே..."

லல்லியின் குரல் தழுதழுத்தது! பெட்டியைக் காரின் பின் வைத்துவிட்டுத் திரும்பிய இந்துமதியின் காதில் லல்லி கடைசியாகக் கூறிய சில வார்த்தைகள் இலேசாக விழுந்தன.

அவளுக்குச் சுரீர் என்றது!

அவசரப்பட்டு எந்த முடிவுக்காவது வந்துவிட்டால்...? அதை எண்ணும்போதே நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது இந்துமதிக்கு.

"லல்லி! நாங்கள் போய் வருகிறோம்...! வனிதாவுக்கு ஆறுதல் சொல்லி அனுப்பி வையம்மா! அவள் குழந்தை...! உலகம் தெரியாதவள்..."— அவளால் அதற்கு மேல் பேசமுடியவில்லை!

லல்லிக்கு அவள் என்ன சொல்ல விரும்புகிறாள் என்று புரிந்தது. "மாமி! வனிதா இன்னும் குழந்தைதான்! அவள் அறிந்தோ அறியாமலோ தவறே செய்திருந்தாலும் அதைப் பெரிதுபடுத்திவிடாமல் நீங்களாவது அவளை ஆறுதல் படுத்துங்கள்! மாமாதான் கோபத்தில் இப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்! நீங்களாவது அவள் மனத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்! மேன்மேலும் புண்படுத்தாமல் இதமாக நடந்து கொண்டால் நல்லது! இல்லாவிடில் மேலும் ஏதாவது விபரீதமாக முடிந்துவிடும்! பிறகு வருந்திப் பயனில்லை! நானும் சின்னவள்தான்! ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்...! அப்புறம் உங்கள் விருப்பம்..."— லல்லி சூட்டோடு சூடாக இந்துமதியின் இதயத்திற்குள் ஆழப்பதியும்படி அன்பாகவும் அதே சமயம் எச்சரிப்பது போலவும் விஷயத்தை ஊன்றி விட்டாள்!

காருக்குள் மௌனமாக ஏறி உட்கார்ந்து கொண்ட வனிதா சன்னலின் வழியே அவள் கையைப் பற்றிக் கொண்டாள். இன்னமும் அவளால் பேச முடியவில்லை! அவ்வளவு தூரம் அவள் மனம் அதிர்ச்சியடைந்திருந்தது.

லல்லி அவளது தோளை ஆறுதலாக அழுத்தித் தட்டினாள். "நான் கவனித்துக் கொள்கிறேன், கவலைப் படாதே" என்பதுபோல் ஓர் ஆறுதல் பார்வை அவள் கண்களில் பளிச்சிட்டது.

"சரி லல்லி! நாங்கள் புறப்படுகிறோம்!"-முதன்முறையாக மீண்டும் அவர் லல்லியிடம் பேசினார்.

"மாமா! மன்னித்துக் கொள்ளுங்கள்! அறியாமல் நேர்ந்த பிழை...! ஆனால்... அதை எப்படிச் சொல்வது...? திங்கட்கிழமை பள்ளிக்குப் போனதும் எல்லோரும் வனிதாவைப் பற்றிக் கேட்பார்களே..."

லல்லியின் தயக்கம் அவருக்குப் புரிந்தது. அவள் மீது ஏற்பட்ட அனுதாபத்தால் அவரது சினமும் சற்று அடங்கியது.

"நான் பிரின்சிபாலிடம் சென்று தகுந்த காரணம் சொல்லிவிடுகிறேன்! ஆம், வனிதாவை இந்தியாவுக்கு அனுப்பப் போவதாகச் சொல்லிவிட்டால் போகிறது! நீயும் அப்படியே சொல்லிவிடு! அடுத்த வாரம் மீண்டும் வந்து அறையைக் காலிசெய்து விடுவதாகச் சொல்லிவிடு! நீ பொறுப்புள்ள பெண்! அதிகமாக உனக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன்!" அவரது வார்த்தைகளில் அழுத்தம் தொனித்தது.

கார் விர்ரென்று கிளம்பி வேகமாக ஓடி மறைந்தது. எதற்கும் கலங்காத லல்லிகூட அப்படியே இடிந்து போய் நின்றாள். இனி வனிதாவை எப்போது பார்க்கப் போகிறோமோ...?

அவள் கண்களிலிருந்து சூடான நீர்த்துளிகள் பொலபொலவென உதிர்ந்தன. நெஞ்சில் ஏதோ அடைப்பது போலிருந்தது.

"ஓ"வென அலறி அழவேண்டும் போல் அவள் இதயம் துடித்தது. எல்லாரையும் சிரிக்கச் சிரிக்க வைத்தே பழகிப் போயிருந்த லல்லி முதன்முறையாக இதயம் வெடித்துச் சிதறிவிடுவதுபோல விம்மினாள்! ஆம், லல்லி அழுதாள்!

(வளரும்)

பிள்ளைத் தமிழ் போட்டி

போட்டிக்குரிய இலக்கியப் படைப்புக்களாவன:-

(1) நபிச் சக்கரவர்த்தி நபிகள் நாயகம் (ஸல்) பிள்ளைத்தமிழ்

(2) கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிள்ளைத்தமிழ்.

ஒவ்வொரு பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கும் தனித்தனியாக முறையே மூன்று பரிசுகள் வழங்கப் பெறும். சிறந்த இலக்கியப் படைப்பெனத் தேர்வுக் குழு முடிவுசெய்யும் முதற்படைப்பிற்கு $300, இரண்டாம் படைப்பிற்கு $200, மூன்றும் படைப்பிற்கு $100 பரிசுகளாக வழங்கப்பெறும்.

போட்டிக்குரிய விதிமுறைகள்:-

(1) இப்படைப்புக்கள் "பிள்ளைத் தமிழி"ற்குரிய இலக்கண வரம்புகளுடன் இலக்கிய நாயகர்களின் பல்வேறு பண்பு நலன்கள், செயற்றிறங்கள் ஆகியவற்றைக் கருவாகக் கொண்டு எதிர்கால நற்றமிழர் வாழ்விற்கு வழிகாட்டும் வகையில் அமைதல் வேண்டும்.

(2) பாக்கள், இனிய - எளிய தமிழ்நடையில் அமைவதோடு தமிழ்ப்பாக்களின் மரபுகளைத் தழுவி அமைதல் வேண்டும். அவ்வாறு அமைந்த நூற்படிகள் நான்கினைப் போட்டிக்கு அனுப்ப வேண்டும். பெயர், முகவரிகளைத் தனித்தாளில் எழுதி இணைக்கவேண்டும்.

(3) நால்வர் கொண்ட குழு போட்டிக்குரிய படிகளை ஆராய்ந்து முடிவு செய்யும். குழுவின் முடிவே இறுதி முடிவாகும். கடிதத் தொடர்புகள் ஏற்கப்படமாட்டா.

(4) சமய வேறுபாடின்றி இரண்டு படைப்பிலக்கியங்களிலும் யாரும் கலந்துகொள்ளலாம், பாக்கள் தாளின் ஒரு பக்கத்தில் தட்டெழுத்திலோ அல்லது கையெழுத்திலோ மிகத் தெளிவாக அமைக்கப் பெறல் வேண்டும்.

(5) போட்டிகளின் முடிவுகள் செய்தித்தாள்களில் வெளியிடப் பெறும். பரிசளிக்கும் நிகழ்ச்சிக்குரிய காலம் தக்க நேரத்தில் பத்திரிகைகளிலும் உரியவர்க்கு நேரடியாகவும் அறிவிக்கப்படும்.

(6) தேர்ந்தெடுக்கப்பெற்ற நூற்படிகள் யாவும் கவிஞர் நாச்சிகுளத்தாருக்கே உரியவையாகும். அவற்றை வெளியிடும் முழு உரிமைகளும் அவரையே சாரும்.

(7) போட்டிக்குரிய படைப்புக்களை அனுப்பவேண்டிய இறுதிநாள் 1-2-1978. இதற்குப் பின்னர் வரும் படிகள் ஏற்கப்படமாட்டா. போட்டிக்குரிய படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி:

நாச்சிகுளத்தார்.
எண்: 1, ஸ்ரீ பஹாரி ரோடு.
பினாங்கு.



வெட்டிப் பேச்சு வேண்டாம்

நல்ல பெண்கள் இவர்கள் என்ற நினைப்பு பலரைக் கண்டதும் நமக்கு எழுகின்றது. அதே சமயத்தில் அவர்களிடம் நெருங்கிப் பழகினால்தான் அவர்கள் கெட்டவர்கள் என்று அறிந்து கொள்ள முடிகிறது. வசதிகள் பல வந்தவுடன் அவர்களிடம் தீய செய்கைகளும் சேர்ந்தே வந்துவிடுகின்றன.

"பெண்ணுக்குக் கூச்சம் மலருக்கு மணம்போல" என்று எங்கோ படித்த ஞாபகம் இப்பொழுது நினைவுக்கு ஓடி வருகிறது. இயற்கையிலேயே பெண்கள் மென்மையானவர்கள். சந்தர்ப்பவசத்தால் கல்நெஞ்சர்களாக அவர்கள் மாறலாம். ஆனாலும்கூட சிலரே இப்படி மாறக் காணலாம்.



"அழகான பெண் கண்களுக்கு விருந்து; குணமான பெண் மனதிற்கு விருந்து" என்று ஓர் அறிஞர் அழகாகப் பெண்களைப் பற்றிக் கூறி இருக்கின்றார். பெண்களுக்கு அடக்கம், உண்மை, கற்பு ஆகிய மூன்றும் மிகவும் அவசியம் இருக்கவேண்டியவையாகும். பெண்கள் எப்பொழுதும் அடக்கமாக இருக்கவேண்டும்.

உடலை நன்றாக மறைத்துக் கொள்ளும் அளவிற்கு ஆடை அணிந்து சென்றால்தான் எவரும் மரியாதை கொடுப்பார்கள். இதை விடுத்து, பாதி உடல் தெரிய உடுத்திச் சென்றால் நிச்சயம் அங்கு மரியாதை என்று ஒன்று இருக்க முடியாது.

"கற்புடைய பெண்கள் அமுதம் போன்றவர்கள்" என்றும் "பெண்களின் கற்பு கண்ணாடி பாத்திரம் போன்றது" என்றும் அறிஞர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றனர். ஆகவே பெண்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இல்லையேல் அவர்கள் சாக்கடைக்குச் சமமானவர்களாக மதிக்கப்படுவார்கள்.

ஒரு பெண்ணின் "ஆம், இல்லை" என்ற சொல்லின் ஊடே ஓர் ஊசிகூட புகமுடியாது என்பர். ஆனால் இந்தக் காலத்தில் பெண்கள் அப்படியிருந்தால் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். ஆகவே பெண்கள் பேச்சை அளந்து பேசவேண்டும். வெட்டிப் பேச்சுகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. அழகு, பெண்களுக்குப் பெருமையைத்தான் தருகிறது. ஆனால் அடக்கம் அளவற்ற மதிப்பைத் தருகிறது.

அடக்கம், கண்ணியம், உண்மை, கற்பு இவற்றை ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் பெற்றிருக்கவேண்டும். தமிழ்க் குலத்தை மற்ற இனத்தவர்கள் இழிவாகப் பேச வழி விடாமல் எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். மற்றவர்கள் உயர்வாகப் பேச நாம் வழிவகுக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் தமிழ்ச் சமுதாயம் முன்னுக்கு வரும்.

-வி. எஸ். ராஜா,
கோலப்பிலா

புரிந்து கொள்ள முடியாதது!

• கடிகாரம், நாளைக் கூறு போடுகிறது. நாள் நம் உயிரைக் கூறு போடுகிறது. கடிகாரம் நமது காலத்தை அளப்பதுடன் "இளமையும் செல்வமும் நிலையா" எனும் பாடத்தை நமக்குக் கற்பிக்கிறது.

• கடலின் ஆழத்தை வேண்டுமானாலும் அளந்துவிடலாம். ஆனால் பெண்களின் மனதைப் புரிந்து கொள்ள முடியாது.

• ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமமானவை.

• இழிவான ஓய்வு கூடாது. முயற்சிமிக்க வாழ்வே வளம் கொடுக்கும் செல்வமாகும்.

• மீனை விரும்பாத பூனையும் ஆணை விரும்பாத பெண்ணையும் எங்கும் காண முடியாது!

• அமைதியாகக் காத்திருப்பவர்களுக்கே எல்லாம் கிடைக்கும்.

• மற்றவர்களையும் வாழவிடு; நீயும் நன்றாக வாழ்வாய்.

• ஆணும், பெண்ணும் கற்புள்ளவர்களாக வாழவேண்டும்.

தொகுப்பு:
குமாரி ஆர். சரோஜா,
உலுயாம்பாரு, சிலாங்கூர்

சாம்பாரில் உப்பு அதிகமாகிவிட்டால்

சாம்பாரிலோ, ரசத்திலோ தவறுதலாக உப்பு அதிகமாக இருந்துவிட்டால் கவலைப்படவேண்டாம். எடுங்கள் ஒரு சுத்தமான காகிதத்தை. போடுங்கள் அதைச் சாம்பாரில், அல்லது ரசத்தில்!

அதிகப்படி உப்பு மாயமாய் மறைந்துவிடும். ஆனால் விரைவில் அந்தக் காகிதத்தை எடுத்துவிட்டு வேறொரு காகிதத்தைப் போடுங்கள். இல்லாவிட்டால் அது காகிதக் குழம்பாகவோ, காகித ரசமாகவோ மாறிவிடும்.

முதல் வேலை

நன்றாக விடிந்து விட்டிருந்தது. ஆனால் பாலனுக்கு மட்டும் இன்னும் போர்வைக்குள்ளேயே சுகங்காண வேண்டும் போல் இருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் இன்றாவது வழக்கத்துக்கு மாறாகப் படுக்கையிலேயே கிடப்போமே என்ற எண்ணம். சாதாரண நாட்களில் ஆறு மணிக்கெல்லாம் வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுவான். மூன்று மைல் தொலைவில் புதிதாக அமைந்துள்ள தொழிற்சாலைப் பகுதியில் அன்னாசிப் பழத் தொழிற்சாலைக்கு அவன் அன்றாடம் போகப் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள் ஒரு ஹோண்டா ஐம்பது சி.சி. ஜப்பானியர்கள் உற்பத்தி செய்த தொடக்ககால வண்டிகளில் அதுவும் ஒன்று. வீட்டுக்கு வெளியே சதாகாலமும் படுத்தே கிடக்கும் நாயைப் போலவே அதுவும் வெளியே கிடப்பது வழக்கம்.

"பாம்...பாம்..." என்ற மோட்டார் வண்டியின் ஹாரன் ஒலி விழுந்தது. அடுத்த கணமே பாலன் போர்வையை உதறித் தள்ளிவிட்டு எழுந்தான்.

வீட்டின் முன் வாசற் கதவு இன்னும் திறக்கப்படாமலிருப்பது கண்டு எரிச்சல் அடைந்தான்.

தாழ்ப்பாளை நீக்கியபடி, "மூதேவி மாதிரி காலையிலேயே கதவ அடச்சிப் போட்டு வச்சிக்கிறு பாரு" என்று வாய்க்குள் கூறிபபடி கதவை இழுத்தான். ஆணிகளின் அழுத்தமான பிடியிலிருந்து நெகிழ்ந்து விட்ட இரு பலகைகள் வழக்கம் போல் ஆடத்தொடங்கின.

"ஆமாம்... இந்தக் கதவ கொஞ்ச நேரம் ஆணி வச்சு அடிக்க முடியல, பேச்சு மட்டும் பெரிய பேச்சா இருக்கு" என்று முணுமுணுத்தபடி அவனுடைய மனைவி பார்வதி சமையற்கட்டிலிருந்து முறைத்தாள்.

"அதுக்கென்ன இப்ப அவசரம்" என்று கூறியபடியே சாலையில் நின்று கொண்டிருந்த காரை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றான்.

ஆம்! தலைவர் வந்துவிட்டால் அவனுக்குத் தலை கால் தெரிவதில்லை. காதலியைப் பார்க்கச் செல்லும் காதலனுக்குக்கூட அவ்வளவு அவசரம் இருக்காது.

அடுத்த சில நிமிடங்களில் திரும்பிய பாலன் அவசர அவசரமாகப் பல்துலக்கி உடைமாற்றத் தொடங்கி விட்டான்.

"இன்னைக்கித்தான் ஓய்வா இருக்கிறீங்க. நம்ப பையன கிளினிக்குக் கூட்டிக்கிட்டுப் போகணும்." என்று தன் பிரச்னைகளை அவிழ்க்கத் தொடங்கினாள் பார்வதி.

"அக... இன்னொரு நாளைக்கு வச்சுக்கக்கூடாதா?"

"அவனுக்கு வயிற்றுப்போக்கு நிக்கவேயில்லை. எனக்குக் கழுவிக் கழுவி அலுத்துப்போயிடுச்சி. அவனும் இளைச்சாப்பல வேற இருக்கிறான்"

"இப்ப எங்க காசுக்குப்போறது? ரெண்டு நாளைல சம்பளம் வந்துடும். அதுவரை பொறுத்துக்கயேன்" என்று கூறியபடி காலணிகளை அணியத் தொடங்கினான்.

அவனுக்கு இருந்த அவசரத்தில் பார்வதியின் வேண்டுகோள் சிறுத்து, இளைத்து, மறைந்திட தலைவரின் அன்புக்கு அடிமையாகி விட்ட ஓர் உணர்வுடன் சற்றுக் கம்பீரமுடனேயே எழுந்து நின்றான். நேரம், காலம் பார்க்காமல் பொதுநலமே தன்னுயிர் என்பது போல தலைவர் உழைக்கும்போது நாமும் நம்மாலியன்றதைச் செய்ய வேண்டும் என்ற அசைக்க முடியாத தீவிரமான நம்பிக்கை கொண்டவன் பாலன்.

கடந்த மாதம் சுடுகாட்டைச் சுத்தப்படுத்திச் சுற்றி வேலிபோடும் இயக்கம் வெற்றிபெற அதிகமாக உழைத்தவர்களில் பாலன் முக்கியமானவன் என்று அடிக்கடி தலைவர் கூறிய புகழுரையில் அப்படியே கிறுகிறுத்துப் போயிருந்தான்.

இப்பொழுது தலைவர் மேற்கொண்டிருக்கும் திட்டம் சாதாரண திட்டமா என்ன!

சுமார் ஐம்பது பேருக்கு வீட்டு மனை நிலம் கிடைக்கப்போகும் அரிய திட்டமல்லவா! அடுத்த திட்டமாகிய காட்டு நிலத்திட்டத்தில் பாலனுக்குச் செலவின்றி வாய்ப்புத்தருவதாக உறுதியளித்துள்ள தலைவருக்கு இந்தத் திட்டம் நிறைவேற முழுமனதோடு உழைக்க வேண்டும் என்ற சங்கற்பம் மனத்தில் விசுவரூபம் எடுக்கத் தொடங்கியிருந்தது.

"நல்ல தலைவரு வந்து வாச்சாரு" என்று பார்வதி உரக்கவே அலுத்துக்கொண்டாள். அடுத்த கணமே, "மத்தியானம் ஆக்கறத்துக்கு ரவ கூட மண்ணெண்ணெய் இல்லிங்க. அதயாவது வாங்கிக் கொடுத்துட்டுப் போங்க" என்று கூறிக்கொண்டிருக்கும்போது பாலன் காரை நெருங்கி விட்டான். மண்ணெண்ணெய் பற்றி அவள் கூறியது மட்டுமல்ல, அதை வாங்கச் சல்லிக்காசு கூட வீட்டில் கிடையாது என்பதும் அவனுக்குத் தெரியும்.

அப்படியிருந்தும் எப்படியும் சமாளித்துக் கொள்வாள் தன் தர்மபத்தினி என்ற நம்பிக்கையில் காரில்போய் அமர்ந்தான்.

கார் நேராக மாவட்ட அதிகாரியின் அலுவலகத்தின் முன் சென்று நின்றது. வெள்ளிக்கிழமை விடுமுறையை அனுபவிக்க அதிகாரிகள் மிக உற்சாகமுடன் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

பாலன் காரிலேயே அமர்ந்திருந்தான். அடுத்த சில நிமிடங்களில் மிகவும் உற்சாகமுடன் தலைவர் வந்து சேர்ந்தார்.

"பாலன்...ஒரு குட் நியூஸ்! கூடியவிரைவில் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் நிலம் பிரித்துக் கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெறப் போகுது. அதுக்கு முன்னாலே அந்தப் பதினஞ்சு ஏக்கர் நிலத்தைச் சுத்தப்படுத்தியாகணும்" என்று கூறியபடி இருக்கையில் அமர்ந்தார்.

"இப்ப முதல்ல என்னுங்க செய்யணும்?" என்று ஆர்வமுடன் கேட்டான் பாலன்.

"இதோ... அறிக்கையெல்லாம் தயார் செஞ்சுட்டேன். உனக்குத் தான் எல்லாரையும் தெரியும். அந்த ஐம்பது பேரும் புக்கிட் ரோத்தானலயும், ஆயர்பானாஸ் லையும்தான் இருக்கிறாங்க. எல்லோருக்கும் இந்த அறிக்கைய கொடுத்து ஆளுக்கு இருநூறு வெள்ளி வாங்கிடு." என்று தலைவர் பேசிக் கொண்டிருக்கையில் பாலனை தறுக்கிட்டான்.

"அதப்பத்திக் கவலைப்படாதீங்க. நிலம்னு நான் முந்தி நீ முந்தின்னு நம்ம சனங்க கொடுத்திடுவாங்க" என்ற பாலனின் வார்த்தைகளில் தலைவருக்கு நம்பிக்கையொளி புலப்பட்டது.

"இது முதல் தவணைப் பணம் தான். அடுத்த தவணையில் இன்னும் சற்று அதிகமாக வாங்க நேரிடும்" என்று தலைவர் கூறிக்கொண்டிருக்கும்போது பாலன் பெரிதாகத் தலையை ஆட்டிக்கொண்டிருந்தான்.

சற்று நேர அமைதி காரில் நிலவியது. கார் நேராக புக்கிட் ரோத்தான் தோட்ட முச்சந்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

"இந்த ஐம்பது பேரும் ஒழுங்கா கொடுத்திட்டா பத்தாயிரம் தேறும். நிலம் ஐம்பது பேருக்கும் கிடைக்கப்போவதும் உண்மைதான்."

அந்த நிலத்துக்குப் பக்கத்தில் அமையப் போகும் ஜே. கே. ஆர். ஆபிஸுக்காக நிலம் திருத்தும்போது இலவசமாக இந்த வீட்டு நிலத்தையும் சுத்தப்படுத்தித்தருவதாக மாவட்ட அதிகாரி கூறியது யாருக்குத் தெரியப்போகுது. எப்படியாவது பாலன் இன்று ஐயாயிரம் வெள்ளியையாவது திரட்டி வந்தால் நாளை நண்பர்களுடன் தொடங்கப் போகும் கம்பெனியில் ஆளுக்கு ஐயாயிரம் போடுவதாகப் போட்ட திட்டம் நிறைவேறிடும்..." என்ற எண்ண அலைகளுடன் தலைவர் வாய்

கு. கிருஷ்ணன்

திறவாமல் காரை ஓட்டிக்கொண்டிருந்தார்.

புக்கிட்ரோத்தான் முச்சந்தி வந்துவிட்டது. காரை நிறுத்திய தலைவர், "பாலன் நான் இங்கயே இறங்கிக்கிறேன். இன்னக்கி என் மூத்த மகளுக்குப் பிறந்த நாள். நான் கட்டாயம் விட்டுல இருந்தாகணும்" என்று கூறியபடி காரை விட்டிறங்கினார்.

"அப்படின்னா... நீங்க எப்படிங்க விட்டுக்குப் போவிங்க," என்று அப்பாவி போலக் கேட்கத்தான் பாலனுக்குத் தோன்றியது.

"நான் டாக்சியில் போயிடறேன்" என்று கூறி வாய் மூடுவதற்குள் மூன்று பேர்களைத் தாங்கிய டாக்சி ஒன்று வந்து நிற்க அடுத்த கணமே தலைவர் டாக்சிக்குள் புகுந்து கொண்டார்.

பாலன் காரைக் கிளப்பிக்கொண்டு புக்கிட்ரோத்தானை நோக்கிச் செலுத்தினான்.

"சே... நம்ப பையனை கிளினிக்குக்குக் கொண்டுபோக வேண்டிய கடமையைத் தள்ளிப் போட்டுக்கிட்டே போய்ட்டோமே! தலைவர் பொதுவேலைகளைச் செய்துகொண்டே மகளுடைய பிறந்த நாளையும் கொண்டாடுறாரே!" என்ற வியப்பு ஒருபுறமும் கையாலாகாத்தனம் மறுபுறமும் அவனை ஆட்கொள்ளவே செய்தன.

அடுத்த பல மணி நேரங்களை புக்கிட்ரோத்தானிலும் அயர் பானுவிலும் கழித்துவிட்டு நெடுஞ்சாலையைக் கார் அடையும்போது இரவு மணி எட்டு ஆகிவிட்டது. தலைவர் அறிக்கைகளைப் போட்டுத் தந்த அந்தப் பெரிய கவர்க்கூட்டில் சரியாக ஆறாயிரம் வெள்ளி, எல்லாம் ஐம்பது வெள்ளி நோட்டுகளாகத் திமிறிக் கொண்டிருந்தன. மீண்டும் ஒரு முறை தலைவர் வாயால் "சபாஷ்" வாங்குவதில்தான் எத்தனை ஆர்வம்!



தலைவர் வீட்டை அடையும் போது தலைவர் வெளியே மங்கிய ஒளியில் அமர்ந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்ததையும், அவருடைய மனைவி, பிள்ளைகள் அனைவரும் டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்ததையும் பாலன் கவனித்தான்.

காரை உரிய இடத்தில் நிறுத்திவிட்டு வந்த பாலனின் கையில் இருந்த உப்பிய உறையைப் பார்த்த போது தலைவர் சடாரென்று எழுந்து கொண்டார்.

அந்த வீட்டின் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையைப் பார்த்த மாத்திரத்தில் பாலன் தன் வீட்டுக்குச் செல்லும் நோக்கத்தையே கொண்டிருந்ததால் தலைவர் சாப்பிட வலியுறுத்தியும் தவிர்த்துவிட்டு அங்கிருந்து இரண்டு தெருக்கள் தள்ளி அமைந்திருந்த தன் வீட்டுக்குக் கிளம்பினான்.

வீட்டை நெருங்கியதும்படுக்கையறையில் வெளிச்சமாயிருப்பதிலிருந்து மனைவி தூங்காமல் காத்துக் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

கதவைத் தள்ளினான்; திறந்து கொண்ட கதவுகளில் இவ்வளவு காலமாக ஆணிகளின் அழுத்தமான பிடியிலிருந்து நெகிழ்ந்திருந்த அந்த இரண்டு பலகைகளையும் காணமுடியவில்லை.

நேராகப் படுக்கையறைக்குச் செல்லாமல் சமையற்கட்டிற்குச் சென்றான். அவசர அவசரமாக உணவை முடித்துக்கொள்ள மேசையில் அமர்ந்தபோது உணவு தயாராக இருப்பதை உணர்ந்தபோதுதான் மனைவி காலையில் கூறிய மண்ணெண்ணெய்ப் பிரச்னை நினைவுக்கு வந்தது.

இரண்டு கவளம் வாயில் போட்டபடியே அடுப்புப்பக்கமாகப் பார்வையைத் திருப்பினான் பாலன். மண்ணெண்ணெய் அடுப்பில் இருந்த கண்ணாடிக் குடுவையில் எண்ணெய் இல்லாத நிலையைப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து கொண்ட பாலன் அன்றைய சமையல் ஆனதை அறிய சுற்றுமுற்றும் பார்வையை ஓடவிட்டான்.

அங்கே கதவோரத்தில் பயன்படுத்தாமல் மூடிக்கிடந்த பழைய விறகு அடுப்பு மீண்டும் பயன்படுத்தப்பட்ட நிலையில் சாம்பல் மண்டிக் கிடந்தது.

அங்கே எரிந்து எஞ்சிய விறகாக அந்த வீட்டின் முன் கதவுப் பலகைகள் தாங்கள் ஆணிகளின் தளர்ந்த பிடியிலிருந்து முற்றாக விடுதலையாகிவிட்டதைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

அதற்குமேல் அவனால் அங்கு அமர்ந்து நிம்மதியாகச் சாப்பிட முடியவில்லை.

கையைக்கழுவிக்கொண்டு எழும் போது, "நாளைக்கு முதல் வேலையாக அந்தக் கதவைப் பழுது பார்க்க வேண்டும்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்ட பாலனின் நெஞ்சு குளிர்ந்திருந்தது.

என்ன பெருமையோ?

"இவர்கள்" என்ற சிறுகதையின் ஆசிரியர், ஒரு நல்ல சீர்திருத்தக் கதையினை எழுதிவிட்டதாக நினைத்துக்கொள்ளலாம். ஆனால் அது நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். கோவில்களில் பூசாரிகள் என்ற சில "பெரிய மனிதர்கள்" செய்யும் ஒழுக்கமற்ற செயல்களை எழுதுங்கள்; அல்லது பெண்களுக்கு வலை வீசப் பக்திப் போர்வையில் கோவில்களுக்கு வரும் ஒருசில இளைஞர்களைக் குறித்து எழுதுங்கள் - ஏற்றுக்கொள்கிறோம்! நாகரிகம் என்ற போர்வையில் மறைந்து கொண்டு, வழக்கமான முறைகளை மாற்ற நினைப்பதில் என்ன பெருமை?

குக்கூப் தோட்டம், ஜொகூர் — ஏ. எஸ். ரவிப்பெருமாள்

தகுந்த உரம்

"இவர்கள்" கதையை எழுதிய நண்பர் கையாண்ட முறை அனுதாபத்துக்குரியது. நம்மவர்களால் மாற்ற முடியாத காரியங்களில் தலையாய் இருப்பது வழிபாட்டு முறை. அது தானாகக் காலத்திற்கு ஏற்றவாறு மாறிவிடும். அவசரப்பட்டுவிட்டார்.

சோழனின் "விதைப்பதெல்லாம்" விருவிருப்பாக இருந்தாலும் கதையை எப்படியோ கொண்டு சென்றுவிட்டார். ஆரம்பத்தில் இருந்த சுவை முடிவில் இல்லாதது போல் இருந்தது. பொய்யைச் சொன்னாலும் பொருந்தும்படிச் சொல்லவேண்டும்.

உங்கள் "ஆவன்னா" போடும் போடு, அடேயப்பா! தமிழ்க் களஞ்சியம்தான் போங்கள்!

மது எதுவாக இருந்தாலும் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அது நஞ்சுதான் என்பதை மட்டுமல்ல, அதனின்றும் விலகிச்செல்ல 2000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் தந்த குறளைத் தீபாவளி தருணத்தில் தந்தது, புதிய சமுதாயம் உருவாக உரம் போட்டது போல் இருந்தது.

ஜெரம் — மு. இலட்சுமணன்

அக்கறை வேண்டும்

"இவர்கள்" சிறுகதை காலத்திற்கேற்ற தரமான படைப்பு. பக்தியெனும் பெயரால் நடைபெறும் பாவச் செயல்களை அப்படியே படம்பிடித்துக் காட்டியுள்ளார். சமுதாயச் சீர்திருத்தத்தில் ஒவ்வோர் எழுத்தாளரும் அக்கறை காட்டி எழுதினால் நமது சமுதாயம் முன்னேறி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க நிறைய வாய்ப்பு உண்டு.

சுபாங், சிலாங்கூர் — இல. சந்திரன்

நன்றி

என்னுடைய "இவர்கள்" சிறுகதையை வெளியிட்டு என் எழுத்துப்பணிக்கு மேலும் உரமிட்ட ஆசிரியர் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றி.

சுங்கை சிப்புட் — கு. பா. அம்பிகா கலைச்செல்வன்

குறை

கடந்த இதழில் "இலக்கிய அரங்கம்" இடம் பெறாதது ஒரு பெருங்குறை.

"கேள்வி பதில்" பகுதியின் பக்கங்களைக் கூட்டவும்.

குளுவாங் — மா. அமரவேல், மா. திராவிடதாசன்

தூண்டுகோல்

படிக்கும் ஆவலைத்தூண்டும் புதிய சமுதாயத்தைப் பாராட்டத்தான் வேண்டும். இதழில் இடம்பெறும் தொடர்கதைகள் இரண்டுமே சுவையாக உள்ளன.

கோலக்கங்சார் — வே. கமலா

பலே! பலே!

நையாண்டிமேளம் நன்று; இரசிக்க முடிந்தது. "எழுபத்து நான்காயிரம்" எனும் தலைப்பில் "ஆவன்னா" என்பார் அழகுற நையாண்டி செய்துள்ளார். முந்தியவற்றைவிட இம்முறை புரியக்கூடியதாய் இரசிக்கக் கூடியதாய் இருந்தது. பாராட்டுகிறேன்; "பலே, பலே" என்று பலகாலும் "சபாஷ்" போடுகிறேன்.

ஈப்போ — மா. பொன்னுசுவாமி

அரசியல் கதைகள்..!

டாக்டர் இரா. தண்டாயுதம்

கடந்த சில மாதங்களாக மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக்கும் திறனாய்விற்கும், அடக்கமாக அரிய பணியாற்றி வரும் சிங்கப்பூர் இலக்கியக் களம், இந்த முறை கதைகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை எனக்குத் தந்துள்ளது. என்மேல் அவர்கள் கொண்ட நம்பிக்கைக்காக நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், மற்றொன்றையும் நினைவுபடுத்துவது என் கடமை என்று நினைக்கிறேன். அடுத்துவரும் கண்ணோட்டமும் விமர்சனமும் என்னுடையவை- மற்றவர்களுடைய முடிவில் இவை எவ்வகையிலும் குறுக்கிடா. சிறுகதையைப் பற்றி நான் கொண்டிருக்கும் கொள்கைகளை அளவுகோல்களாக்கி, ஒரு நல்ல வாசகனாக நின்றே இக்கதைகளை மதிப்பீடு செய்ய முயல்கிறேன்.

இந்த இரண்டு மாதங்களில் வெளிவந்த சிறுகதைகளை நன்கு பரிசீலனை செய்து, 34 கதைகளைத் தேர்ந்தெடுத்து, இலக்கியக் களத்தினர் எனக்கு அனுப்பியிருந்தனர். முதல் வாசிப்பில் இக்கதைகளில் இருபதைத் தேர்ந்தெடுத்தேன். அடுத்த பரிசீலனையில் இவை பன்னிரண்டாகக் குறைந்தன. மறுபரிசீலனையில் மேலும் இரண்டு கதைகளைக் குறைத்துவிட்டுப் பத்துக் கதைகளை இங்கு மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொண்டுள்ளேன். கதைகளின் மதிப்பீட்டு வரிசையே, என் மனத்தில் எழுந்த தர வரிசையாகும். இறுதியில் மதிப்பிடப்படுவது இம்மாதங்களில் வெளிவந்த சிறந்த சிறுகதை. தரத்தை வரிசையிடும்போது, கதைகளில் காணப்படும் குறையைவிட நிறையையே கருத்தில் கொண்டுள்ளேன். எனவே, குறைக்காக முதலில் எடுத்துக் கொண்ட கதை இறுதி நிலையை அடையவில்லை. அதனைவிட அடுத்தடுத்த கதை நிறைவு என்பது இதன் பொருள்.

இந்தப் பத்துக் கதைகளை மதிப்பீடு செய்யத் தொடங்குமுன், தமிழ் எழுத்தாளரின் - குறிப்பாகச் சிறுகதை எழுத்தாளரின் - சிந்தனை எந்தப் போக்கில் போய்க் கொண்டுள்ளது என்பதை அறிவது இன்றியமையாதது எனக் கருதுகிறேன். இந்த 34 கதைகளின் கதைப் பொருள்களை ஆராய்வதன் மூலம் இதனை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். மலேசிய சிறுகதை எழுத்தாளர்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு மாதக் கதைகளில் அதிக இடம் பெற்ற கதைப் பொருள் அரசியல். அரசியலின் தீமையையும், அரசியல் தலைவர்களின் தன்னலத்தையும் எழுத்தாளர்கள் இக்கதைகளில் தாங்கள் உணர்ந்தவாறு காட்டியுள்ளனர். போட்டி என்று வந்தபின் வெற்றிக்குப் பாடுபடுவது; தோற்றுவிட்டால் வென்றவரைக் கவிழ்க்கப் பாடுபடுவது என்றிருக்கும் போக்கை ஒரு கதை சுட்டிக் காட்டுகிறது. யாரோ வெல்வதற்காக உணர்ச்சி வசப்பட்டுத் தன் சொத்தையும் உயிரையும் பலிகொடுக்கும் கிளைத் தலைவர் ஒருவரை மற்றொரு கதை படம் பிடித்துக் காட்டுகிறது. பத்திரிகைகளில் ஒரு தலைவரைப் பற்றி வரும் செய்திகளைப் பார்த்து அவரிடம் பெரும் ஈடுபாடு கொள்ளும் இளைஞன் ஒருவன், ஒரு சிறிய உதவிக்காக அவரை நாடும்போது அடையும் ஏமாற்றத்தை மற்றொரு கதை சித்திரிக்கிறது. தலைவர் தனி வாழ்வில் எப்படிப்பட்டவர் என்பதை மற்றொரு கதை காட்டுகிறது. சாவு வீட்டிலும் ஓட்டு வேட்டையாடப்படுவதை வேறொரு கதை கருப்பொருள் ஆக்கிக்கொண்டுள்ளது. இவ்வாறு அரசியலும், அரசியல் தலைவர்களும் இடம் பெற்றுள்ள இக்கதைகளில் ஒரே ஒரு கதை மட்டுமே மனச்சாட்சியுள்ள ஒரு தலைவரைக் காட்ட முற்பட்டுள்ளது. மற்றக் கதைகள் அனைத்தும் எதிர் நிலையிலேயே அமைந்துள்ளன. இது எதிர்மறைப் போக்கு ஆகாதா எனச் சிந்திக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். இன்று உலக நாடுகள் அனைத்திலும், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கட்சி அரசியலே நடைபெறுகின்றது. இதன் நன்மை - தீமை ஆகிய இரண்டையும் காட்டும் முறையில், இதனை எப்படிச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உடன்மறைப் போக்கில் சில சிறுகதைகள் வெளிவர வாய்ப்புள்ளதைச் சுட்டிக் காட்டுவதே இதன் நோக்கம்.

குடியுரிமை, சிவப்பு அடையாளக்கார்டு ஆகியவற்றில் உள்ள சிக்கல்கள் இரண்டு சிறுகதைகளாக உருப்பெற்றுள்ளன. கோயில் நடைமுறைகளை ஒட்டி இருகதைகள் அமைந்துள்ளன. தோட்டப்புறங்களில் பழைய தலைமுறைக்கும் புதிய தலைமுறைக்கும் இடையே எழும் போராட்டங்கள் ஒரு கதையில் இடம் பெற்றுள்ளன. சஞ்சியில் வந்த குடும்பம் ஒன்று படும் எல்லையற்ற துன்பங்களை ஒரு கதை நிகழ்ச்சிகளாக்கியுள்ளது. மலாய் மக்கள் வாழ்கின்ற தீவு ஒன்றை மையமாகக் கொண்டு ஒரு கதை எழுந்துள்ளது. சீனப் பெண்ணைக் காதலித்து மணம் செய்து கொண்ட தமிழ் இளைஞன் ஒருவனை ஒரு கதையில் சந்திக்கிறோம். உடலுழைப்புத் தொழிலாளர்களின் துன்பத்தை மற்றொரு கதை காட்டுகிறது. பிற கதைகள் ஏதோ ஒரு வகையில் குடும்பத்தை ஒட்டிய சிக்கல்களைக் கருப்பொருள்களாகக் கொண்ட கதைகள். குடி, விதியின் வலிமை, கணவனின் சந்தேகம், கணவன் - மனைவி அன்பு, இளைஞர்களின் பிரச்சினைகள் முதலிய பல தரப்பட்ட பொருள்கள் இக்கதைகளின் போராட்டத்திற்கு வித்திடும் வகையில் அமைந்துள்ளன.

சிங்கப்பூர் இலக்கியக் களத்திற்காக டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்கள் எழுதிய சிறுகதை ஆய்வுக் கட்டுரை.

தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களின் பார்வை எங்கெந்தப் பக்கம் போய்க்கொண்டுள்ளது என்பதை இதன்மூலம் ஓரளவு அறிந்து கொள்ளலாம். தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளை விட, சமுதாயம் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளை எழுத்தாளர்கள் தங்கள் கவனத்தில் வைத்துள்ளனர் என்பதை இக்கதைகள் நன்கு சுட்டிக் காட்டுகின்றன. குடும்பப் பிரச்சினை கூட ஒரு வகையில் சமுதாயப் பிரச்சினைதான் என்பதை அவர்கள் மறந்துவிடவில்லை. வேலை தேடிக் காலம் போக்குவதைவிடச் சொந்தத்தில் தொழில் செய்ய முற்படுவது, தனிப்பட்ட குடும்பப் பிரச்சினையா என்ன? கதையாசிரியர்களின் ஆர்வமும் ஈடுபாடும் சில சமயங்களில் கதையின் கலைப்பகுதியைப் பாதித்து விடுகின்றன என்பதை இக்கதைகளில் நான் கண்டேன். கலைப் படைப்பு என்பது ஒரு நாணயம் போல. உள்ளடக்கம் அதன் ஒரு பக்கம் என்றால் உருவம் அதன் மறுபக்கம். இரண்டும் சம அளவில் அமையும்போதே கலைப்படைப்பு முழுமையடைகிறது.

இறுதிச்சுற்றுக் கதைகள்

இனி, இறுதிச் சுற்றிற்கு வந்த கதைகளுக்கு வருவோம். மா. பூ. சோழனின் "எதிர்காலமா? எங்கே?" என்ற கதை ஒரு நீண்ட சரித்திரத்தைத் தன்னுள் கொண்ட கதை. "சினிக்குக் காக்கா ஓட்ட ஆள் தேவை" என்று கங்காணிகள் சொன்னதை நம்பிப் புறப்பட்டு வந்த இராமாயி-வேலப்பன் தம்பதிகள் அடுக்கடுக்காக அடைந்த துன்பங்களின் கதை இது. இவர்கள் இருவரும் குறியீடுகளாக நின்று ஒரு பெரிய சமூகத்தினரையே பிரதிநிதிக்கின்றனர். அதனால்தான் கதை

யாசிரியர் அடிக்கடி குறுக்கிட்டு உணர்ச்சிவயப்பட்டுத் தம்கருத்துக்களை கூறிச் செல்கிறார். கதையின் அமைப்பை இது வெகுவாகப் பாதிக்கிறது. "இப்படி வசதியற்ற தோட்டத்தில் வாழுகின்ற மக்கள் படுகின்ற தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல" என்பது போன்ற குறுக்கீடுகளைத் தவிர்த்திருக்கலாம். எதிர்காலம் ஒரு கேள்விக்குறியே..." என்ற முடிவு வாக்கியம் தேவைதானா? அதைச் சொல்லாமல் உணர்த்துவதுதானே கலை?

ஜொகூர் மாநிலத்தின் கிழக்குக் கரையோரத் தீவு ஒன்றில் வாழும் மீனவர்கள் மருத்துவ வசதி இல்லாமல் படும் துன்பத்தை நாணல் எழுதிய "அந்தப் பூரிப்பின் எதிரொலி" கதையாக்கிக் காட்டுகிறது. பேறு காலத்தில் டாக்டர் இல்லாமல் பெண்கள் படும் வேதனையுடன் தொடங்கும் கதை. தலைமைப் பெங்குலுவின் துணையுடன் அமீனா டாக்டருக்குப் படிப்பதையும் அவள் தன் குறிக்கோளில் வெற்றியடைவதையும் சிறப்பாகக் காட்டுகிறது. டாக்டராகி வந்தவுடன் அவள் வெற்றியைக் கொண்டாட ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்கிறார் பெங்குலு. அந்த விழாவில் தன் நன்றியைத் தெரிவித்து டாக்டர் அமீனா பேசிக்கொண்டிருக்கும்போதே பெங்குலு நிலைதடுமாறி விழுந்து உயிரை விடுகிறார். சீராகச் செல்லும் கதையை இந்த முடிவு பெரிதும் பாதித்துவிடுகிறது. வாசகரின் அனுதாபத்தைப் பெற இத்தகைய முடிவுகளை மேற்கொள்வது பழைய உத்தி. போராட்டத்தை வேறு நிலையில் காட்டியிருந்தால் இந்தக் கதை இன்னும் சிறந்திருக்கும். கதையின் முடிவு, கதையில் காட்டிய நிகழ்ச்சிகளின் நியாயமான விளைவாகவும் இயற்கையாகவும் அமையும்போதே கதை, சிறக்கிறது.

தொழிலாளர் நிலையையும் மனித இயல்பின் விசித்திரத்தையும் கலந்து பொ. சுந்தரராசு "அந்தக் கோரிக்கையை"ப் படைத்துள்ளார். கடல் வாணிக நிறுவனம் ஒன்றின் போக்குவரத்துப் பிரிவில் கதை நிகழ்கிறது. வேலை இல்லாத நாட்களில் இப்பிரிவு உள்ள கட்டிட வாயிலில் திறந்த வெளியில் உட்கார்ந்து தொழிலாளர்கள் துன்பப்படுவதைப் பார்த்து வசந்தன், ஸ்டோர் அறையைத் தொழிலாளர் ஓய்வறையாக மாற்ற முயற்சி எடுத்து வெற்றியும் அடைகிறான். ஆனால் தொழிலாளர்கள் முறையாகப் பயன்படுத்தாததால் அது மறுபடியும் ஸ்டோர் அறையாகவே மாறுகிறது. இப்பிரிவின் தலைவர் தங்கவேலு. பார்க்கும்போதெல்லாம் தொழிலாளர் தன்னை வணங்குவதை விரும்புபவர். ஓய்வறை இவ்வாசைக்குக் குறுக்கே நிற்கிறது. அவரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார். நிகழ்ச்சிகள் அளவுக்கு அதிகமான சொற்களுடன் வருணிக்கப்படுவது இக்கதையைப் பாதிக்கிறது. சிறுகதையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று சொற்சிக்கனம். சிறுகதையில் வரும் ஒவ்வொரு சொல்லும் அவசியம் கருதியே வரவேண்டும். சொல்ல வேண்டியதைச் சொல்வதற்கு வேண்டிய அளவான சொற்களுடன் சொல்லும்போது சிறுகதை முழுமை அடைகிறது. இக்கதையின் போராட்டம் ஓய்வறை. அது கிடைத்து, மறுபடியும் கைநழுவிப் போகும்போது போராட்டமும் முடிந்துவிடுகிறது. அதற்கு மேல், வீட்டில் நடக்கும் உரையாடல்களும், அலியின் மண்புழுக் கதையும் மிகையாகவே தெரிகின்றன.

பழைய தலைமுறை - புதிய தலைமுறைப் போராட்டம் ஒன்றைக் கருப்பொருளாகக் கொண்டது சோலை முனியனின் "எதிர்த்தவர் எங்கே?" கதை. பல ஆண்டுகளாகப் பாட்டாளிகளை ஏமாற்றிச் சங்கத்தின் முக்கியப் பொறுப்புக்களை வகித்து வந்த பழைய தலைமுறை, பெருமாள் தண்டலால் முறியடிக்கப்படுவது கதையின் முக்கிய நிகழ்ச்சி. இதில் வெற்றியும் கிடைக்கிறது. வெற்றி கிடைத்த பின் பெருமாள் தண்டல் தோட்டத்தை விட்டே வெளியேற்றப்படுவது வலிந்து மேற்கொண்ட முடிவாக இல்லையா? "ஆனால் தம்புசாமி அணியினரின் சதியறிந்து தோட்டம் மாற்றான் கைக்குப் போகாமல் தடுக்க இளைஞர்களைத் தேர்ந்தெடுத்த அந்தப் பெருமாள்? அன்று கூட்டத்திற்குப்பிறகு ஆலயத்தை விட்டு வெளியேறியவரைத் தான், தோட்டத்தை விட்டே வெளியேற்றிவிட்டதே ஒரு கூட்டம்!" எனக்கதை முடிகிறது. இதைக் கூறாமல் உணர்த்தியிருக்கலாம். அன்றியும் இம்முடிவு, கதையின் உச்சநிலையைப் பாதிப்பதாகவும் அமைந்துள்ளது. எடுத்துக்கொண்ட ஒரு பிரச்சினையை ஒருமைப்பாட்டுடன் முழுமையாகக் காட்டுவதுதானே சிறுகதை? இக்கதையின் பிரச்சினை இளைஞர் வெற்றியுடன் முடிந்துவிடுகிறது. எனவே பெருமாளின் வெளியேற்றம் மிகையாகத் தெரிகிறது.

வ. முனியனின் "இறைவன் அழுகிறான்" ஒரு கருத்துச் செறிவுள்ள கதை. திருவிழாக் காலங்களில் இறைச்சிந்தனையில்மனத்தைச் செலுத்துவதைவிட, அக்காலங்களில் காட்டப்படும் திரைப்படங்களிலேயே மனம் லயித்துக் கிடப்பதை இக்கதை வேதனையோடு காட்டுகிறது. எளிய, அழகான சம்பவங்கள் இயற்கையாகச் செல்கின்றன. "பொதுமக்களுக்காகப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்களான கோவில் நிர்வாகஸ்தர்களை அவனையன்றி வேறு யாரால் வழிநடத்திக் கொண்டுவர முடியும்?" என்பது போன்ற வாக்கியங்கள் கதையாசிரியரின் சிந்தனையைக் காட்டுபவை. கோவில் பொதுக் கூட்டங்களும் கலாட்டாக்களும் போன்று வரும் சினிமாப்படமும் பிரிக்க முடியாதவை என்பது

இறுதியை உணர்த்தும் பெருநாள்



வந்து போகும் "தியாக
வாழ்வு" கூறும் பெருநாள்!
நொந்து போகும் நெஞ்சில்
நெறிசு ரக்கும் பெருநாள்!

மூந்தை இப்ரா ஹீமின்
"முற்றும் பணிவு" என்ற
சிந்தைத் தெளிவின் உயர்வை
செகமு ணர்த்தும் பெருநாள்!

வெறுப்பு விருப்பு இறைவன்
விலக்கல்- ஏவல் என்றே
பொறுப்பு சாட்டும் உணர்வைப்
பெரிது செய்யும் பெருநாள்!

"இறுதிக் கடமை" என்றே
இயம்பும் மறையின் பொருளை
உறுதி! வெள்ளை யணிகள்
உணர்த்திக் காட்டும் பெருநாள்!

இறைவ னாணை ஏற்றே
எதையும் இழக்கத் துணியும்
நிறைவு நெஞ்சம் சூழ
நிற்கும் ஹஜ்ஜுப் பெருநாள்!

ஆதம்குமார்

போன்ற புதிய உவமைகள், கூர்மையாகப் பார்க்கும் திறனைக் காட்டுகின்றன. எனினும் ஒரு கருத்து, கதையாக இவை மட்டும் போதாவே! வலுவான போராட்டம் ஒன்றல்லவா கதையின் முதல் தேவை? திரைப்படங்கள் ஓடும் போது பெய்யும் மழை இறைவன் விட்ட கண்ணீராகக் காட்டுவது, அழுத்தமான ஒரு போராட்டம் அமையாததையே சுட்டிக் காட்டுகிறது. நிகழ்ச்சியமைப்பு, தெளிவான நடை, சொற்சிக்கனம் ஆகியவற்றில் சிறந்து நிற்கும் இக்கதை, வலுவான போராட்டமும் கொண்டிருந்தால் இன்னும் மிகப் பின்னே மதிப்பீட்டு வரிசைக்கு வந்திருக்கும்.

சில சிறுகதைகள்...

எம். சி. இ. படித்துத் தேறிய தமிழ் இளைஞன் ஒருவன் வேலைக்காகமனு எழுதிப் போட்டுப் போட்டுச் சோர்ந்து போய், சொந்தத்தில் சிறிய தொழில் ஒன்று செய்ய முன் வந்து முன்னேறுவதை எம். ஏ. இளஞ்செல்வனின் "டுக்காச் சித்தா" அழகாகக்கதையாக்கிக்காட்டுகிறது. தொழிலில் ஓரளவு முன்னேறத் தொடங்கும் போது, ஒரு சிறிய வேலை கிடைக்கிறது. இதுவரை தான் போட்ட மனுக்களுக்கு "டுக்காச் சித்தாவு டி மாலும்கான் ..." என்று தொடங்கும் பதில்களைப்பார்த்தவன், அதே சொற்களைப் பதிலாக்கிக் கிடைத்த வேலையை வேண்டாம் என உதறி விடுகிறான்- இந்த முரண், கதையில் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. சம்பவங்களும் இயற்கையாகச் செல்கின்றன. ஆசிரியரின் நடையும் கதைச் சிறப்பிற்குத் துணை செய்கிறது. எனினும் சமீப காலத்தில் இத்தகைய போக்கில் சில சிறுகதைகள் வெளிவந்திருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

ரெ. கார்த்திகேசுவின் "முத்து அழுகிறான்", அரசியல் வாழ்வின் அவலத்தைக் காட்டும் ஒரு நல்ல சிறுகதை யாருடைய வெற்றிக்கோ உழைக்கப் போய், செளத்தையும் இழந்து, உயிரையும் இழக்கும் ஒரு கிளைத்தலைவரின் கதை இது. ஊரில் இந்து மயானம் இல்லாக் குறையைத் தலைவரிடம் கூறி ஏதாவது செய்ய வேண்டும் என்ற பேச்சு வரும்போது. "ஆமாம்! நம்ப ஊரையே மயானமா மாத்திப் புடுவாரு" என்று முத்து கூறுவதில் நயமான கிண்டலைப் பார்க்கிறோம். தேர்தல் படிப்படியாக எப்படி ஒரு மானப் பிரச்சினை ஆகிவிடுகிறது என்பதையும் அதன் விளைவுகளையும் கதை அழகாகக் காட்டுகிறது. இயற்கையான நடை, உயிரோட்டமுள்ள கதைமாந்தர்கள் இருப்பினும், கதையமைப்பில் இன்னும் சற்று மெருகேறியிருக்கலாம் என்பதே இக்கதையைப் படிக்கும்போது மனத்தில் தோன்றும் எண்ணம்.

சிவப்பு அடையாளக் கார்டு பிரச்சினையைமற்றொருபுதியகோணத்தில் பார்க்கும் கதை இராஜகுமாரனின் "அக்கரைப்பச்சைகள்." சிவப்பு அடையாளக்கார்டினால் பல துன்பங்களை அனுபவிக்கும் சபேசன், ஒரு முடிவிற்கு வந்து ஊருக்குப் புறப்படுகிறார். அங்கே பட்டாமணியம், காவற்காரர் முதலியோர் அளவுக்கு மீறிய மரியாதை காட்டுகின்றனர். அதற்குக் காரணம், அவர் இங்கிருந்து எடுத்துச் சென்ற சில சிறிய பொருள்களைக் கொடுத்ததே! "தாமாவது சிவப்புக் கார்டினால் கூனிக் குறுக நேர்ந்துவிட்டது; ஆனால் எந்தக் கார்டும் இல்லாமல் இவர்கள் ஏன் கூனிப் போய் கிரிகிறார்கள்" என்று சபேசன் சிந்திக்கிறார். முடிவு, அங்கேயே நிரந்தரமாகத் தங்கச் சென்றவர் விரைவில் பயணம் வைத்து விடுகின்றார். இயற்கையான நடைமுறை உண்மைகள், அவற்றைக் கதையாக்கியுள்ள முறை ஆங்காங்கே தெறித்துவிழும் அழுத்தமான சொற்கள் ஆகியவை இக்கதையைச் சிறந்த கதைகளுள் ஒன்றாக்குகின்றன.

மா. இராமையாவின் "முடிவு" இவ்விரண்டு மாதக் கதைகளில் இரண்டாம் இடம் பெறுகின்றது. அமைதியான ஒரு குடும்பத்தில் அரசியல் நுழைந்தபின், அந்த அமைதி எப்படிப் பாதிக்கப்பெறுகின்றது என்பதைக் கதை இயற்கையாகச் சொல்கிறது.

"கடந்த ஒரு மாத காலமாகத்தான் கணவனிடம் என்னென்னவோ கேட்க வேண்டும் என்று நினைத்த அனைத்தையும் மனத்திற்குள் போட்டுப் புழுங்கிக் கொண்டிருந்தாள் மரகதம்" என்ற தொடக்கமே கதையின் பிரச்னைக்குள் வாசகரை அழைத்துச் சென்று விடுகின்றது. தொடர்ந்து தேர்தல் முடிந்தால் பழைய நிலை திரும்பிவிடும், கணவன் பழையபடி வீட்டில் தங்குவான் என்ற நம்பிக்கையை வளர்த்து, அவனும் அதே முடிவுடன் திரும்பி வரும் போது எதிர்பாராத மற்றொரு முடிவினைக் கதையில் பார்க்கிறோம். இதுவரை வெற்றிக்கு உழைத்தவன், எதிரி வென்றவுடன் அவனைக் கவிழ்க்க உழைக்கப் புறப்படுகிறான். முடிவு எதிர்பாராததாக இருப்பினும் இயற்கையாகவும் நம்பும்படியும் அமைந்துள்ளது. அவன் புதிய முடிவுடன் புறப்பட்டுச் செல்வதை மட்டும் காட்டியிருந்தால் கதை இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்." இதற்கு முடிவு? எங்கே இருக்கிறதோ, யார் கண்டார்கள்?" என்ற ஆசிரியர் கூற்று அதிகப்படியாகவே காணப்படுகின்றது. கதை உணர்த்துவதே இதனைத் தானே? சிலவற்றை வெளிப்படையாகச் சொல்லாமல் உணர்த்தும்போதே கலைப்படைப்பு நிறைவாகின்றது.

பரிசுக் கதை

சா. ஆ. அன்பானந்தனின் "சட்டத்திற்கு...". சிறுகதை இலக்கணங்கள் மிக அருமையாகப் பொருந்தியுள்ள ஓர் அழுத்தமான சிறுகதை. ஜப்பானியர் ஆட்சிக் காலத்தில் பிறப்புச் சான்றிதழை இழந்துவிட்ட ஒரே காரணத்தால் குடியுரிமை கிடைக்காமல் அவதிப்படும் முனுசாமியைக் கதை அப்படியே கண்முன் நிறுத்தி விடுகின்றது. அவனுடைய அவதியைப் படிப்படியாக வளர்த்து சென்று, அவனைக் குடியுரிமை அலுவலகத்திலேயே நுழையச் செய்து விடுகிறார் ஆசிரியர். அதிகாரியின் முன் எல்லா உரிமைச் சூறுகளையும் வைத்துவிட்டு ஆவேசத்துடன் நிற்கிறான் முனுசாமி. அதிகாரி 'அவை என்ன?" என்று கேட்கிறார். கேட்டதுதான் தாமதம், வெடித்து விடுகிறான் முனுசாமி. அவன் கோரிக்கை அவருக்கு விளங்குகிறது. நியாயமாகவும் படுகிறது "ஆனால் அந்தச் சட்டத்திற்கு...?" என்று கதை முடிகிறது. அழுத்தமான நடை. அளவான சம்பவங்கள், செறிவான வருணனை, உயிரோட்டமான பாத்திரப்படைப்பு. இயற்கையான முடிவு, பிரச்னையின் உணர்ச்சியைக் கதை முழுவதும் வியாபிக்க வைத்திருக்கும் நேர்த்தி ஆகியவை இந்தக் கதையை ஓர் உயர்ந்த சிறுகதையாக்குகின்றன. எனவே, இக்கதையையே இவ்விரண்டு மாதங்களில் வெளிவந்த சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கின்றேன்.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வெளிவரும் தமிழ்ப்பத்திரிகைகளில் ஜூலை—ஆகஸ்டு மாதங்களில் சுமார் 75 கதைகள் பிரசுரமாயின. அவற்றில் 34 கதைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை மதிப்பீடு செய்யுமாறு சிங்கப்பூர் இலக்கியக்களம், மலாயா பல்கலைக் கழக விரிவுரையாளர் டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்களிடம் வழங்கியது.

34 கதைகளில் டாக்டர் இரா. தண்டாயுதம் 10 கதைகளை இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுத்து அந்தப் பத்துக் கதைகளிலும் சிறந்த கதையாக-சிங்கப்பூர் இலக்கியக் களத்தின் பரிசுக்குரிய கதையாக—புதியசமுதாயம் இதழில் வெளிவந்த திரு. சா. ஆ. அன்பானந்தன் எழுதிய "சட்டத்திற்கு...!" என்ற கதையைத் தேர்வு செய்தார்

இறுதித் தேர்வுக்கு வந்த பத்துக் கதைகளில் முடிவு (மா. இராமையா), முத்து அழுகிறான் (ரெ. கார்த்திகேசு), இறைவன் அழுகிறான் (வ. முனியன்), டுக்காச் சித்தா [எம். ஏ. இளஞ்செல்வன்], சட்டத்திற்கு (சா. ஆ. அன்பானந்தன்) ஆகிய ஐந்து கதைகளும் புதிய சமுதாயத்தில் பிரசுரமானவை.

எதிர்காலமா.. எங்கே? [மா. பூ சோழன்], எதிர்த்தவர் எங்கே? [சோலை முனியன்] ஆகிய இரண்டு கதைகள் "தமிழ் நேசனி" லும் அந்தப் பூரிப்பின் எதிரொலி [நாணல்], அக்கரைப் பச்சைகள் (இராஜகுமாரன்) இரண்டும் தமிழ் மலரிலும், அந்தக் கோரிக்கை [பொ. சுந்தரராசு] தமிழ் முரசிலும் வெளிவந்தவை.

பால்மரக் காட்டினிலே

அகிலன்

17. தயக்கமே பழக்கமென்றால்...

ஞாயிற்றுக்கிழமையாதலால் அன்றைக்குத் தோட்ட வேலையும் கிடையாது; பள்ளிக்கூடமும் கிடையாது. என்றாலும் பாலன் மட்டிலும் அதிகாலையில் எழுந்துவிட்டான். முதல் வேலையாக அவனுடைய தலைமை ஆசிரியர் சண்முகத்தைச் சந்தித்து, அவரைப் பெரிய கிராணியின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும். அதற்குப்போல் சிரம்பானிலிருந்து அங்கு வருவதாகச் சொல்லியனுப்பியிருந்த கணேசனுடன் பேசவேண்டும்.

ஆசிரியர்கள் கூட்டத்தில் முன்பு உற்சாகத்தோடு கலந்துகொண்ட தலைமை ஆசிரியர், அவர் வாக்களித்தபடி இன்னும் பெரிய கிராணியைச் சந்தித்து அனுமதி பெறவில்லை. பாலன் அவருக்கு நினைவூட்டிய போதெல்லாம், "இன்றைக்கு, நாளைக்கு" என்று தட்டிக் கழித்துக்கொண்டே வந்தார். பிறகுதான் அவருடைய தயக்கத்துக்கான காரணத்தை அவனால் ஊகித்துணர முடிந்தது. நல்லதைச் செய்ய வேண்டுமென்ற நினைப்புக்கோ பேச்சுக்கோ அவரிடம் எப்போதும் பஞ்சம் இல்லை. செயலில்கூடத் தாமே பிறருக்குச் செய்யக்கூடிய உதவி என்றால் அதைத் தயங்காமல் செய்துவிடுவார். ஆனால் பெரிய கிராணியைப்போய் அவர் வீட்டில் சந்தித்துப் பேசுவது என்பது அவ்வளவு எளிய காரியமாக அவருக்குத் தோன்றவில்லை. "அவர் பெரிய பதவியிலே இருக்கிறவர்; போனா என்ன நினைச்சுக்குவாரோ? என்ன சொல்லுவாரோ?" என்ற எண்ணங்கள் அவரைக் குழப்பத் தொடங்கிவிட்டன. சமூக அந்தஸ்தில் அவர்களுக்கிடையே இருந்த ஏற்றத்தாழ்வு அவரை அப்படிப் பின்வாங்கச் செய்தது. இப்போதைக்கு அவர் லயத்து வீட்டில் வாழாவிட்டாலுங்கூட, முன்பு அங்கே பிறந்து வளர்ந்தவர். அந்தப் பழங்காலத்து எண்ணங்களின் பிடியிலிருந்து அவரால் எளிதில் விடுபட முடியவில்லை.

இதைப் புரிந்துகொண்டுவிட்ட பாலன், "நாளைக்குக் காலையிலே நானும் வர்ரேன்; நம்ப ரெண்டு பேருமே போய்ப் பேசலாம்" என்று சண்முகத்திடம் சொல்லியிருந்தான்.

ஞாயிற்றுக்கிழமை என்பதால் வீட்டில் காலைப் பலகாரமாகத் தோசை வார்த்திருந்தார்கள். சாப்பிட்டுவிட்டுக் காப்பி குடித்தான். "சிரம்பானிலேருந்து கணேசன் வருவான்; வந்தாக் காத்துக்கிட்டிருக்கச் சொல்லுங்க; தலைமை ஆசிரியரோட போய் நான் பெரிய கிராணியைப் பார்த்திட்டு வந்திடறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

செம்மண் பாதையில் சைக்கிளில் போகும்போதே அவனுடைய மனம் தலைமை ஆசிரியரைப் பற்றி எண்ணிப் பார்த்தது. அவரைக் குறை சொல்லிப் பயன் இல்லை. மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர் அவர். தோட்டத் தொழிலாளர்களில்கூட வயது முதிர்ந்தவர்கள் பலர் அவரைப்போலவே இருந்தார்கள். ஒருவகை அச்சமும் தாழ்மை உணர்ச்சியும் தன்னம்பிக்கையின்மையும் அவர்களிடம் குடிகொண்டிருந்தன. அவற்றிலிருந்து அவர்கள் மீளத் துணியவில்லை.

பாலனைக் கண்டவுடன் சண்முகம் வேறு வழியின்றி அவனோடு கிராணியின் பங்களாவுக்குப் புறப்பட்டார். பெரிய கிராணி துரைசிங்கத்திடம் பாலனுக்கு எப்போதுமே மதிப்பு உண்டு. தொழிலாளர்களிடம் இரக்கமுள்ளவர் அவர். இலங்கைத் தமிழரான அவர் நடை உடை பாவனைகளில் முற்றும் ஆங்கிலேயராக மாறிப் போயிருந்தாலும், தம் வீட்டிலிருந்துகூடத் தமிழையும் தமிழ்க்கலாசாரத்தையும் முற்றும் விரட்டியடித்திருந்தாலும், தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களிடம் அவருக்குத் தனியான பரிவு உண்டு.

துரைசிங்கத்தின் பங்களா வாயிலை நெருங்கியவுடன் தலைமை ஆசிரியர் சண்முகத்துக்கு வேர்த்துக் கொட்டியது. மேல்துண்டால் முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டார். வாசலில் நின்ற வேலையாளிடம் தாங்கள் வந்திருக்கும் செய்தியைச் சொல்லி அனுப்பினான் பாலன். உள்ளே வரச்சொல்லி அனுமதி கிடைத்தது. இருவரும் நுழைந்தார்கள்.

விசாலமான வரவேற்பறையில் இரண்டு சோபாக்களும் நாலைந்து நாற்காலிகளும் கிடந்தன. பீரோக்களில் ஆங்கிலப் புத்தகங்கள், மேசைமேல் ஆங்கிலப் பத்திரிகைகள்.

"வாங்க வாத்தியார் சார், என்ன சமாசாரம்?" என்று கேட்டுக்கொண்டே அறையிலிருந்து வெளியில் வந்தார் துரைசிங்கம். தயக்கத்தோடு நின்றுகொண்டிருந்தவர்களை நாற்காலிகளில் உட்காரச் சொன்னார். தாமும் உட்கார்ந்துகொண்டார். நரைபோடிய கிராப்புத் தலை; அரைக்கைச் சட்டை; இடுப்பில் ஒரு கைலி. ஆள் வாட்டசாட்டமாக இருந்தார்.

சண்முகத்தால் அவரிடம் தாங்கள் வந்த நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் கூற முடியவில்லை. ஏதோ சில வார்த்தைகள் தொடர்பில்லாமல் பேசி வைத்தார். கடைசியில் பாலனே அவருக்குக் கைகொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

"நாங்களும் எங்களால் முடிஞ்ச வரையிலே பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துப் பார்க்கிறோம். ஆனால் இது மட்டும் போதாது. வீட்டிலேயும் அவுங்க படிக்கறதுக்கான சூழ்நிலை ஏற்படணும். அதுக்காகப் பெற்றோர் சங்கம் ஏற்படுத்தி ஏதாவது செய்யலாமான்னு பார்க்கிறோம். அத்தோட "ரிமூவ்" வகுப்புக்குப் போகிற பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்திலேயே தனியா ஆங்கிலப் பாடம் சொல்லித் தரலாம்னு ஒரு யோசனை.."

துரைசிங்கம் மௌனமாகப் பாலனின் முகத்தை உற்றுப் பார்த்தார். தோட்டத் தொழிலாளர்களிடம் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அவன் முயன்றபோதே அவனைப் பற்றிய செய்திகள் அவருக்கு ஓரளவு கிடைத்திருந்தன. அதை அப்படியொன்றும் தவறான முயற்சி என்று அவர் எடுத்துக்கொள்ளவில்லை. "துடிப்புள்ள பிள்ளைதான்" என்று முடிவு செய்துகொண்டார்.

"நீ சொல்றதும் முக்கியமான பிரச்சனைதான்" என்றார் துரைசிங்கம்; "தோட்டத்திலே பிறக்கிற எல்லாக் குழந்தைகளுக்குமே இங்கே வேலை கொடுத்திட முடியாது. எதிர்காலத்திலே இங்கே பிழைக்கணும்னா தமிழ் மட்டும் படிச்சால் பத்தாதுதான்."

"தமிழே படிக்காமலும் இருக்கக் கூடாதுங்க! நம்மோட மொழி, கலாசாரம், சமய உணர்வு இவ்வளவும் இப்போ தோட்டப்புறங்களில்தான் அதிகமாக் காப்பாத்தப்படுதுன்னு நான் நினைக்கிறேன்" என்றான் பாலன்.

சண்முகத்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. தமிழை அறவே புறக்கணித்துவிட்டு முற்றும் ஆங்கில போகத்தில் மூழ்கியிருப்பவர் முன் நிலையிலா ஒருவன் இப்படி இங்கிதம் இல்லாமல் பேசுவது? துரைசிங்கம் என்ன சொல்லப் போகிறாரோ என்று அஞ்சினார் தலைமை ஆசிரியர்.

துரைசிங்கம் சிரித்தார். "பாலா, நீ சொல்றது நூத்துக்கு நூறு உண்மைதான். பிழைப்பைப் பார்த்தால் தமிழைப் பார்க்க முடியலே; தமிழைப் பார்த்தால் பிழைப்பைப் பார்க்க முடியலே. நாங்கள்ளாம் இங்கே ரெண்டுங்கெட்டான் வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டிருக்கோம் -

யாரையாவது நல்ல வாத்தியாரை வச்சுக் குழந்தை குட்டிகளுக்காவது இனிமேல் தமிழ் கத்துக் கொடுக்கணும்னு பார்க்கிறேன்."

"நீங்க எப்பச் சொன்னாலும் நானே வந்து சொல்லிக்கொடுக்கிறேன்" என்றார் சண்முகம்.

துரைசிங்கம் தம்முடைய பதவி, அந்தஸ்து முதலியவற்றை மறந்துவிட்டு இந்த அளவுக்கு மனந்திறந்து பேசியதால், தாங்கள் வந்த காரியத்தில் வெற்றி கிட்டும் என்ற எண்ணம் அப்போதே இருவருக்கும் ஏற்பட்டது.

அந்தச் சமயத்தில்தான் தோட்டத்தொழிலாளர்களால் "டாக்டர்" என்று அழைக்கப்படும் "டிரெஸ்ஸர்" மாதவன் அங்கு வந்து சேர்ந்தார். தோட்டத்து மருத்துவ மனையின் தலைவர் அவர். "கம்பவுண்டர்" பயிற்சியைப் போன்ற ஒரு வகைப் பயிற்சி பெற்றவர். சாதாரண நோய்களுக்கு மருந்து கொடுப்பது, நோய்வாய்ப்பட்ட தொழிலாளர்களுக்கு விடுமுறை கிடைக்கச் சான்றிதழ் அளிப்பது போன்ற வேலைகள் அவருடையவை.

"ஹலோ சார்! ஏதாச்சும் முக்கியமான பேச்சுக்கிடையிலே நான் குறுக்கிட்டேனா?" என்று கேட்டுக்கொண்டே வந்து துரைசிங்கத்தின் அருகில் உட்கார்ந்தார் மாதவன். மாநிறம்; ஒல்லியான உருவம்; நடுத்தர உயரம்; வயது நாற்பது இருக்கும் மாதவனுக்கு.

அவரை அங்கே கண்டவுடனேயே பாலனின் மனம் துணுக்குற்றது. வந்தவரும் சும்மா இருக்கவில்லை. அவர்கள் அங்கே வந்த காரணத்தைப்பற்றித் தாமாகவே துரைசிங்கத்திடம் தூண்டித் துருவிக் கேள்விகள் போடலானார். துரைசிங்கத்திடம் அவருக்கு இருந்த மருக்கும் தோட்டத்தில் எல்லோருக்கும் தெரியும்.

செய்தியைத் துரைசிங்கத்திடம் கேட்டுவிட்டு, "பாலனைப்பத்தி உங்களுக்குத் தெரியுமா? அசகாயசூரன்! பார்த்தால் சின்னப் பிள்ளைன்னு நினைச்சிடப் போறீங்க! பக்கத்துத் தோட்டத்தையே விலைக்கு வாங்கிடணும்னு திட்டம் போட்டவன்!" என்றார். பிறகு பாலனிடம் திரும்பி, "என்ன பாலா, ஒரு வாரத்திலே சங்கத்துக்காக நீ எத்தனையோ ஆயிரம் வெள்ளி சேர்த்திட்டேன்னு பேசிக்கிறாங்களே? நம்ம ஆளுங்ககிட்டே உனக்கு நல்ல செல்வாக்குத்தான்!" என்று அவனைப் பாராட்டுவது போல் பாராட்டி, அவனைப்பற்றி மறைமுகமாகத் துரைசிங்கத்திற்கு எச்சரிக்கை செய்து வைத்தார் மாதவன்.

துரைசிங்கம் ஏதுமே பேசாமல் சிறிது நேரம் யோசனை செய்தார்.

"ஏற்கனவே இங்கே ஒரு தொழிலாளி சங்கம் இருக்கு. நீ பாட்டுக்கு பெற்றோர் சங்கம்கிற ஒரு போட்டிச் சங்கம் ஏற்படுத்தினா என்ன செய்யறது?" என்று கேட்டார் மாதவன்.

"பள்ளிக்கூட ஆசிரியர்கள் என்ற முறையிலே பிள்ளைகளோட எதிர்காலத்துக்குத்தான் நாங்க கவலைப்படறோம்" என்று கூறினான் பாலன்.

"பெத்தவங்களுக்கே இல்லாத கவலை மத்தவங்களுக்கு எதுக்கு? படிக்கிறவன் படிக்கிறான்; மங்கு துடைக்கிறவன் மங்கு துடைக்கிறான். விட்டுத் தள்ளுங்க!" என்றார் மாதவன்.

அவருடைய குறுக்கீடு பெரிய கிராணியின் மனத்தை மாற்றியிருக்கவேண்டும்.

துரைசிங்கம் நாற்காலியிலிருந்து எழுந்தபடியே, "சரி, நீங்க சொன்ன விஷயத்தைப் பத்தி நான் பெரிய துரைகிட்டே பேசுறேன்; அவர் என்ன சொல்றாரோ அப்படியே செய்திடலாம்" என்று சொல்லி இருவருக்கும் விடை கொடுத்தனுப்பினார்.

நேரடியாக மறுப்பைத் தெரிவிக்க மனமில்லாமல்தான் துரைசிங்கம் இப்படி நாகரிகமாகப் பதில் அளிக்கிறார் என்பதைப் பாலன் புரிந்துகொண்டு விட்டான். வழக்கமாக நிதானம் தவறிப் பேசாத தலைமை ஆசிரியர் சண்முகத்துக்குக் கூட அப்போது கோபம் வந்துவிட்டது. வெளியே வந்த பிறகு "வெண்ணெய் திரண்டு வர்ற நேரம் பார்த்து, இந்தச் சகுனிப் பயல் மாதவன் குறுக்கே புகுந்திட்டான்; தாழியை உடைச்சிட்டான்" என்று தமக்குள் முணுமுணுத்துக்கொண்டு வந்தார்.

பெரிய கிராணியின் பங்களாவிலிருந்து சாலைக்கு வந்தவுடன் தலைமை ஆசிரியர் தம் வீட்டுக்குப் புறப்பட்டார். பாலன் சைக்கிளில் ஏறிக்கொண்டு லயத்தை நோக்கி மிதித்தான். வழியில் ஒரு மரத்தடியில் அவனுக்காகக் கணேசன் காத்துக்கொண்டிருப்பது தெரிந்தது. சைக்கிளை விட்டுக் கீழே இறங்கி நடந்தான்.

"வீட்டுக்குப் போய்த் தேடிட்டு வர்ரியா?"

"ஆமா" என்றான் கணேசன். "பெரிய கிராணிகிட்ட என்ன வேலை? இந்தத் தோட்டத்து "மன்மதன்" கூட அங்கே வந்துக்கிட்டிருந்தானே?" என்று கேட்டான்.

மாதவனுக்கு அந்தத் தோட்டத்து இளைஞர்கள் சிலர் சூட்டிய பெயர் அது. அங்கே வேலை செய்யும் அழகான பெண்களிடம் மாதவனுக்கு உள்ள சபலம் எப்படியோ வெளியில் தெரியத் தொடங்கிவிட்டது. பகிரங்கமாக யாரும் அவரைப் பகைத்துக் கொள்ள முடியாது. தங்களுக்குள்



இரகசியமாகப் பேசிக்கொள்ளும்போது இந்தப் பெயரில்தான் அவரைக் குறிப்பிடுவார்கள்.

பெரிய கிராணியின் வீட்டில் நடந்த செய்திகளைக் கூறினான் பாலன். பேசிக்கொண்டே இருவரும் நடந்து சென்றார்கள்.

எதிரில் நாலைந்துபேர் உரத்த குரலில் பேசிக்கொண்டு வருவது தெரிந்தது. வந்தவர்களில் இரண்டு மூன்று பேர் வயதில் முதியவர்களான கங்காணிகள். இரண்டு மூன்று பேர் மரம் வெட்டும் தொழிலாளர்களான இளைஞர்கள். தோட்டத் தொழிலாளர் சங்கத்தைப் பற்றி அவர்கள் தங்களுக்குள் வாதாடிக் கொண்டு வந்தார்கள்.

"இதோ, பாலன் வந்துக்கிட்டிருக்கார்; அவரையே கேட்போம்" என்றான் ஓர் இளைஞன்.

"ஆமா, கணேசும் வந்திருக்கு; சங்கத்திலே பொறுப்பான ஆளா இருந்தவர் கணேசு" என்றான் அடுத்தவன்.

அடிக்கடி அங்கே மூத்த தலைமுறைக்கும் இளம் தலைமுறைக்கும் சிறுசிறு சச்சரவுகள் ஏற்படுவது உண்டு. அப்போதெல்லாம் தங்களுக்குத் துணையாக அந்தத் தோட்டத்து இளைஞர்கள் பாலனை அழைத்துக்கொள்வார்கள்.

"மாரியம்மன் கோயில்லே உட்கார்ந்து பேசலாமே!" என்று அவர்களை அழைத்தான் பாலன்.

கோவில் மண்டபத்துக்குப் போய் எல்லாரும் உட்கார்ந்தார்கள். அவர்களுக்குள்ளே எழுந்த போராட்டத்துக்கான காரணம் தெரிந்தது. நாடு முழுவதும் பரவியிருந்த பெரிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் அவர்கள். அந்தத் தோட்டத்துக்கான கிளைச் சங்கத்தின் பொறுப்பில் இருந்தவர்கள்.

இன்னும் இரண்டு நாட்களில் நிர்வாகத்தில் உள்ளவர்களை அவர்கள் சந்தித்துப் பேசுவதாக இருந்தது. அதற்கான கோரிக்கைகள் தயாரிப்பதில் அவர்களுக்குள் ஏற்பட்ட பூசல் இது.



"என்றைக்கும் இல்லாம நேற்று நல்லா பந்தை உதைச்சியே!"

"என் பகைவியை நெனைச்சுக்கிட்டேன்!"

"நாங்க வந்து ரெண்டு முக்கியமான கோரிக்கையை இந்தக்கூட்டத்திலே வைக்கணும்னு சொல்றோம். இவங்க இதையெல்லாம் வாய்விட்டுக் கேக்கறதுக்கே நடுங்கறாங்க" என்றான் இளைஞர்களில் ஒருவன்.

"என்ன கோரிக்கை?"

"இந்தத் தோட்டத்திலே பல இடங்களுக்கு மின்சாரம் வந்திருக்கு. "லயத்து வீடுகளுக்கும் வெளிச்சம் போடுங்க; அதுக்கான கட்டணத்தை மாசம் மாசம் கழிச்சுக்குங்க"ன்னு சொல்றோம். இது ஒண்ணாவது கோரிக்கை. இன்னொண்ணு, பொதுவா எல்லோரும் சாயங்காலம் வந்து படிக்கிறப்பிலே ஒரு நூல் நிலையம் கட்டித் தாங்கன்னு கேக்கிறோம். இது ரெண்டாவது கோரிக்கை. இவ்வளவுதான் சங்கதி. கேக்க வேண்டியதைக் கேட்டால் தானே கிடைக்கும்? கேக்கறதுக்கே இப்படிப் பயந்து சாகலாமா?"

"கூலி வேலை செய்யறவங்க "எலக்டிரிக்" வெளக்குக் கேட்டா, துரைமாருங்க என்ன நினைச்சுக்குவாங்க? இளங்கன்று பயமறியாதுன்னு சொல்றப்பிலே, இந்தப் பிள்ளைங்கதான் கேக்கறாங்கன்னு. நாங்களும் இதுக்கு உடந்தையாக இருக்கலாமா?"—இது கங்காணிக் கிழவரின் கேள்வி. அவர்தாம் அந்தத் தோட்டத்துச் சங்கத்துக்கு அங்குள்ளவர்களால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கணேசனுக்கு இதைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் மத்திய சங்கம் வலிமையான சங்கந்தான். அதன் உதவியால் பல நன்மைகள் காலப்போக்கில் தொழிலாளர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனாலும் அங்கங்கே தோட்டப்புறங்களில் இருந்த அதன் கிளைகளில் அதன் முழுமையான செல்வாக்குப் படியாதபடி பார்த்துக்கொண்டது, தோட்டத்தின் நிர்வாகம். சங்கத் தேர்தல் என்று வரும்போது எப்படியோ நிர்வாகத்தின் ஆட்களான பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் சிலர் அதில் வெற்றி பெற்றுவிடுவார்கள்.

"ஐயா பெரியவரே, நான் சொல்றதைக் கொஞ்சம் தயவு செஞ்சு கேளுங்க" என்றான் கணேசன்; "உங்க காலமெல்லாந்தான் காட்டுக்குள்ளே இருட்டிலே பாம்பு, பல்லி, பூரானோட போராடியாச்சு; உங்க புள்ளை குட்டிகளாச்சும் பத்திரமா இருக்கக்கூடாதா? விளக்கடியிலே உக்காந்து நாலெழுத்துப் படிச்சு அவுங்க முன்னுக்கு வரக்கூடாதா?"

"எப்படி இதைப் போய்ப் பெரியவங்ககிட்டே நாம கேக்கிறது? கேட்டாத் தப்பா நினைச்சுக்கமாட்டாங்களா? இல்லே, கேட்டவுடனே தான் குடுத்திரப் போறாங்களா?" என்றார் கங்காணிகளில் ஒருவர்.

"நீங்க கேக்க வேண்டாம்; எங்களைப்போல் உள்ள பிள்ளைங்க கேக்கட்டும்" என்றான் பாலன்; கொடுக்கிறாங்களோ இல்லையோ, கேக்கறதுக்குக்கூட நாம பயப்படக்கூடாது."

"அவுங்க கேட்டாலும் எங்க மேலேதான் பழியைப் போடுவாங்க. நாங்க சொல்லிக் குடுத்ததா நினைச்சுக்குவாங்க."

"இதிலே அவங்களுக்கு செலவு ஒண்ணும் ஆகாது. தோட்டத்துக்கு வந்திருக்கிற மின்சாரத்தை லயத்துக்கும் சேர்த்து நாம போடச் சொல்றோம். ஆகிற செலவை நாமே மாசமாசம் கட்டப் போறோம். சாதாரணமாக நடக்கக்கூடிய காரியம் இது."

அந்தக் கங்காணிகளால் இதை எல்லாம் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இந்தக் காலத்து இளம் பிள்ளைகளின் போக்கே அவர்களுக்கு அபாயகரமாகத் தோன்றியது. "எலக்டிரிக் விளக்காம், நூல் நிலையமாம், பத்திரிகை படிக்கிறார்களாம்... எல்லாம் காலத்தின் கோளாறு."

கடைசியாக எப்படியோ அவர்களை இளைஞர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கச் செய்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்கள் பாலனும், கணேசனும். முணுமுணுத்துக்கொண்டே அவர்களும் ஒரு வழியாக ஒப்புக்கொண்டார்கள்.

"நல்ல காரியத்தைச் செய்யக்கூடத் தயங்கறது; பயப்படறது; இதுவே ஒரு வழக்கமாகப் போச்சு" என்று சலித்துக்கொண்டான் கணேசன்.

"அடிப்படைக் காரணம் அறியாமைதான். இந்த அறியாமைக்கு எதிரான போராட்டத்தை நமக்குள்ளே நாம் எல்லா முனைகளிலே இருந்தும் நடத்தணும். லயத்துக்கு விளக்கு வந்திட்டாப் படிக்கிற பிள்ளைகளுக்குக்கூட வசதியா இருக்கும். அதைக் கேட்டு வாங்கறதுக்குக்கூட இப்படிப் பயப்படறாங்க, தயங்கறாங்க. கடமையைச் செய்யத் தெரியலே; உரிமையைப் பெற்று வாழத் தெரியலே" என்று கூறிப் பெருமூச்சு விட்டான் பாலன்.

மரத்தடி நிழல் படர்ந்த சாலையில் அவர்கள் பேசிக்கொண்டே நிதானமாக நடந்தார்கள். குழந்தைகளின் படிப்பைப் பற்றிய தன்னுடைய முயற்சி அப்போதைக்குத் தோல்வி அடைந்ததால், ஒருபுறம் அந்தக் கவலை பாலனை அரித்துக்கொண்டுதான் இருந்தது. என்றாலும் கணேசனின் வரவால் ஓரளவு ஆறுதல் அவனுக்குக் கிடைக்காமல் இல்லை.

தோட்டத்தின் சூழ்நிலை என்றும்போல் இயற்கை அழகைப் பொழிந்துகொண்டிருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பசுமை உமிழும் ரப்பர் மரங்கள்; அவற்றினூடே அங்கங்கே கதிரொளி பாய்ந்த வண்ணம் இருந்தது. காற்றும் இதமான காற்று.

"நீ வரப்போற சேதியைச் செல்லத்துக்குச் சொல்லியனுப்பியிருக்கேன். எங்க வீட்டுக்கே அது வந்திடும்" என்றான் பாலன்.

கணேசனின் விழிகளில் மகிழ்ச்சி பொங்கியது. நன்றியோடு தன் நண்பனைப் பார்த்தான்.

—தொடரும்

கலையுலகு

பரிதாமணாளன் விறு-விறு

குமாரி நிர்மலா கண்ணன், செமினி

கே: சினிமாவில் நடக்கும் சில சம்பவங்கள் வாழ்க்கையிலும் நடக்கின்றனவே!

ப: "வாழ்க்கையில் நடக்கும் சில சம்பவங்களைத் தான் நாங்கள் படமாக எடுத்துக் காட்டுகிறோம்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள். எனவே படத்தில் காட்டப்படுபவை இங்கே நடப்பதிலும், இங்கே நடப்பவை படத்தில் காட்டப்படுவதிலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

எம். சாமிக்கண்ணு,
டென்னிஸ் டவுன் தோட்டம், பாரிட் புந்தார்

கே: சிவாஜியும்தான் தன் அரசியல் தீவிரத்தைப் படங்களில் காட்டினார்; ஆனால், எம். ஜி. ஆர். போல் முன்னேறவில்லையே ஏன்?

ப: அரசியல் துறையில் முன்னேறினால் தான் முன்னேற்றமா? சிவாஜி நடிப்புத் துறையில் முன்னேறியுள்ளாரே, அது உங்களுக்குத் தெரியவில்லையா?

எம். ஜி. ஆர். படங்களில் உள்ள அரசியல் வாசனை அளவு சிவாஜி படங்களிலும் உள்ளது என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது.

எம். ஜி. ஆர். நாற்பதாண்டுகளுக்கு மேல் சினிமாத் துறையில் ஈடுபட்டுள்ளார். சிவாஜி கணேசன் வந்து இருபத்தைந்து ஆண்டுகளே ஆகின்றன.

எனவே, சிவாஜியும் அரசியலில் வெற்றிக் கொடி நாட்ட வாய்ப்பில்லை என்று சொல்லிவிட முடியாது.

என். பாக்கியம், பினாங்கு

கே: "பத்ரகாளி"யின் கதாசிரியர் "மகரிஷி"யின் வேறு கதைகள் படமாகின்றனவா?

ப: "புவனா ஒரு கேள்விக்குறி" நாவல் இப்போது படமாக வந்துள்ளது. "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" நாவலை இப்போது படமாக்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

எம். கதிரேசன், ஈப்போ

கே: டி. ஏ. மதுரம் கதாநாயகியாக எந்தப் படத்திலாவது நடித்திருக்கிறாரா?

ப: "மாத்ரு பூமி" என்னும் தமிழ்ப்படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கிறார் டி. ஏ. மதுரம்.

செல்வராஜு குமரன்,
புக்கிட் ராஜா தோட்டம், கிள்ளான்

கே: சினிமாவினால் விளைவது நன்மையா தீமையா?

ப: இப்படி ஒரு தலைப்பில் பட்டி மன்றம் நடத்தினால் பல செய்திகளை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

எல். பழனிசாமி, பாரிட் புந்தார்

கே: கே. ஆர். விஜயா, சௌகார் ஜானகி இவர்களின் நடிப்பில் யாருக்கு முதலிடம் தரலாம்?

ப: கே. ஆர். விஜயா, சௌகார் ஜானகி என்று சிவாஜி கணேசன் ஒரு பத்திரிகையில் வரிசைப் படுத்தியுள்ளார்.

சா. ராஜேஸ்வரன்,
நோர்த் ஹம்மோக் தோட்டம், கிள்ளான்

கே: பண்டரிபாய் முதன்முதலாக நடித்த படம் எது?

ப: "பராசக்தி" படத்தில் முதன் முதலாக சிவாஜி கணேசனுக்கு இணையாக நடித்தார் பண்டரிபாய். சிவாஜி கணேசன். எஸ். எஸ். ராஜேந்திரன், ஸ்ரீரஞ்சனி ஆகியோரும் முதன்முதலாக நடித்த படம் "பராசக்தி" தான்.

ஏ. அம்பிகாபதி, கோலக்கெட்டில்

கே: "கல்கண்டு" ஆசிரியர் தமிழ்வாணன் இறந்து விட்டாராமே?

ப: ஆமாம். இது ஒரு பெரிய துரதிர்ஷ்டம். நல்ல சிந்தனையாளர். தன் எழுத்து வன்மையால் இளைஞர்களைக் கவர்ந்தவர். எம். ஜி. ஆருக்கு "மக்கள் திலகம்" என்னும் அடைமொழியை வழங்கியவர். "காதலிக்க வாங்க" என்னும் ஒரு படத்தையும் எடுத்ததன் மூலம் படத் தயாரிப்பாளராகவும் இருந்தவர்.

ஏ. எஸ். சிவநேசன், பாமோல் தோட்டம்

கே: மலேசியாவில் படம் தயாரிப்பதாகப் பெரிய அளவில் விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் ஒன்று கூட வெளிவரவில்லையே?

ப: பொறுங்கள், பொறுங்கள். படம் வெளிவரவில்லையே என்ற எண்ணத்தை ஒருநாள் மறந்து விடுவீர்கள்.

வி. இராமசாமி, கோலாலம்பூர்

கே: இப்போதைய பட உலகம் எப்படி இருக்கிறது?

ப: கொஞ்சம் கொஞ்சமாகத் தலைதூக்குகிறது. பல தமிழ் நாவல்கள் படமாக வரத் தொடங்கி விட்டன.

ஆர். சுலோசனா, சிரம்பான்

கே: "உயர்ந்தவர்கள்" ஒரு வெற்றிப் படமா?

ப: பல குறைபாடுகள் இருந்தன "உயர்ந்தவர்கள்" படத்தில். என்றாலும் அது இங்கு வெற்றிகரமாக ஓடியதற்குக் காரணம் மாற்றமான படத்தை மக்கள் விரும்புவதே.



காட்டுக்குள்ளே கண்டபூவு கண்ணைப்பறிக்குது -எந்தன்
கண்ணைப் பறிக்குது -அதன்
கபகபக்கும் வாசம் வந்து ஆளை மயக்குது
சும்மா ஆளை மயக்குது."

திரை: "பதினாறு வயதினிலே"
இணை: கமலஹாசன், ஸ்ரீதேவி

சிந்தனைமேடை

- கதிர்

'புலி வரும். புலி வரும் என்று எண்ணிக்கொண்டிருந்த நாம் கடைசியில் தொலைக்காட்சியில் பூனை வந்ததைத்தான் காண முடிந்தது.

ஏறத்தாழ 53 நிமிடங்கள் நடைபெற்ற "தீபாளிச் சிறப்பு நிகழ்ச்சி"யில் ஐந்து மலாய்ப் பாடல்களும், ஒரு மலாய் நடனமும், ஒரு சீனப் பாடலும், ஒரு பஞ்சாபிப் பாடலும் ஒரு தமிழ்ப்பாடலும், ஒரு வாத்திய சம்மேளனம் நிகழ்ச்சியும், இரண்டு இந்திய நடனங்களும் இடம்பெற்றிருந்தன.

மொத்தத்தில் 24 நிமிடங்கள் மலாய் நிகழ்ச்சியும், மூன்று நிமிடங்கள் சீனப் பாடலும், மற்ற 24 நிமிடங்கள் இந்திய நிகழ்ச்சியும் நடைபெற்றுள்ளன.

ஏறத்தாழ 40 விழுக்காடு இந்திய நிகழ்ச்சியும் 60 விழுக்காடு மலாய் - சீன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ள அந்த நிகழ்ச்சியை எப்படித்தான் துணிந்து தீபாவளிச் சிறப்பு நிகழ்ச்சி என்று அறிவித்தார்களோ தெரியவில்லை.

ஒரு நகைச்சுவை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது என்று பத்திரிகைகளிலெல்லாம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த நிகழ்ச்சியும் இடம்பெறாததன் மர்மம் என்னவென்று புரியவில்லை.

நிகழ்ச்சி ஏற்பாட்டின்படி தமிழ்ப்படம் இரண்டாவது ஒளி அலையில் நான்கு மணிக்குத் துவக்கப்படும். முதலாவது ஒளி அலையில் அதே நேரத்தில் தீபாவளிச் சிறப்பு நிகழ்ச்சியும் இடம்பெறும் என்றிருந்தது. அடிப்படையிலேயே தீபாவளிச் சிறப்பு நிகழ்ச்சியை எவரும் பார்க்கவேண்டாம் என்று தீர்மானித்திருந்தார்களோ என்னவோ! ஆனால் நல்லவேளையாக எந்தப் புண்ணியவான் முயற்சியாலோ அந்த நிகழ்ச்சி இரவு 11 மணிக்கு மாற்றப்பட்டிருந்தது.

தீபாவளி அன்றைக்கு இரண்டு படங்கள். ஒன்று தமிழ்ப்படம்; ஒன்று இந்திப்படம் காட்டப்பட்டன. ஆறு மணி நேரம் ஒரே தொடராக இரு படங்களைப் பார்க்க வைத்த தொலைக்காட்சியினரின் "தாராளத்தை" எப்படிப்பாராட்டுவதென்றே தெரியவில்லை. முதல் நாள் ஒரு படமும் மறுநாள் ஒரு படமுமாகப் போட்டிருக்கலாம். அந்த நேரத்தில் தீபாவளிச் சிறப்பு நிகழ்ச்சியைப் போட்டிருக்கலாம். அல்லது அந்த இந்திப் படத்தைத் தவிர்த்து ஒருமணி நேரத்திற்காவது முழுமையாக ஒரு தமிழ் நிகழ்ச்சியை நடத்தியிருக்கலாம்.

ஆண்டுக்கொருமுறையாவது ஒருமணி நேரம் தமிழ் நிகழ்ச்சிக்கு வழங்கினால் தொலைக்காட்சியின் தலையில் இடியா விழுந்துவிடும்? தேசிய ஒருமைப்பாட்டுக்கும் ருக்குநெகாரா கோட்பாடுகளுக்கும் எதிராகச் செயல்படுகின்ற இத்தகைய தொலைக்காட்சி அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் அந்த நிகழ்ச்சியில் இடம் பெற்றவர்கள் இருட்டில் திருடர் நடமாடுவது போல் தோன்றுகிற அளவுக்கு ஒளியமைப் போடு நிகழ்ச்சி படைக்கப்பட்டிருந்தது. தொலைக்காட்சி விளக்குகளும், கேமராக்களும் கூட இந்திய நிகழ்ச்சியென்றால் சரியாக இயங்க மறுக்கின்றன போலும்.

ம. இ. கா. தலைவர்கள்—முக்கியமாக ம. இ. கா. கலாசாரப் பிரிவினர்—தொலைக்காட்சியின் அந்தச் சிறப்பு நிகழ்ச்சியைப் பார்த்திரா விட்டால் குழுவாகப் போய் நிகழ்ச்சியைப் போட்டு பார்க்கவேண்டும். அதிலுள்ள புறக்கணிப்பை உணர்ந்து பிரதமருக்குப் பிரச்சினையைக் கொண்டு செல்லவேண்டும். தமிழ் நிகழ்ச்சிகளுக்கு இனியாவது ஒரு விடிவு காலத்தை உருவாக்க வேண்டும்.

இனி வரப்போகும் கிறிஸ்துமஸ், பொங்கல், தைப்பூசம், விநாயக சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி முதலிய சமயத் திருநாட்களுக்குரிய நேரங்களை உறுதிப்படுத்த வேண்டும். அப்படி இல்லாவிட்டால் "எங்களால் எதுவும் ஆகாது" என்பதையாவது பகிரங்கமாக அறிவித்து விட வேண்டும்.

புதுமை படைப்போம்

பழிபோட்டுத் தப்பித்துக் கொள்வதிலே நம்மை,
பாரினிலே வெல்லுவகைக் காணவில்லை உண்மை,
விழிப்பில்லை நம்மிடையே இதுபிறவித் தன்மை,
வீணுரையால் நாமிழந்தோம் பலகோடி நன்மை!

வெற்றுரைகள் வீண்பேச்சு எழுத்துப்போராட்டம்,
விளைவெண்ணிப் பாராமல் கைதட்டும் கூட்டம்,
எற்றுகின்ற பந்தெனவே இங்குமங்கும் ஓட்டம்,
எடுப்பார்கைப் பிள்ளையென இருப்பதிலே நாட்டம்!

அமைப்புக்குள் நமக்கேற்ப அமைப்பதுவே நோக்கம்,
அதனாலே தீர்ந்திடுமோ சமுதாய ஏக்கம்,
சுமைதாங்கி சுமையாகப் போகுமெனில் ஆக்கம்,
தோன்றிடுமோ? நீங்காதே நாம்கொண்ட தூக்கம்!

காத்திருந்தோம் காலம்வரும் கனிந்துவரும் என்று,
கனியவில்லை கைமாறிப் போனதடா இன்று.
பார்த்திருந்தோம் விழிவைத்துப் பாதையிலே நின்று.
பைங்கிளியும் நம்நிலையும் பாரினிலே ஒன்று!

நமக்குள்ளே நாம்செய்து கொண்டிருப்போம் கிளர்ச்சி,
நாளும்அதைப் பயன்படுத்திப் பிறர்அடைவார் வளர்ச்சி.
அமைக்கின்றோம் சங்கங்கள் அடைந்தோமா மலர்ச்சி?
அடிப்படையை வளர்க்கவில்லை அடைகின்றோம் தளர்ச்சி!

தேடிவந்து நமக்கெடுத்தே ஊட்டிடுவார் என்றே
தெருவோரம் நின்றுகதை பேசிடுவோம் நன்றே!
நாடிநமை வாராநம் தேவையெல்லாம் இன்றே
நாம்தேடிச் செலவேண்டும் வரும்தடையை வென்றே!

கண்முன்னே காணுகின்றோம் பிறரின்முன் னேற்றம்,
கருத்தோடு முயன்றோமா, கண்டோமா மாற்றம்?
கண்ணுண்டு கருத்துண்டு நமக்குண்டு தேற்றம்,
கரங்கோத்தால் நமக்குண்டு நல்வாழ்வின் தோற்றம்!

எதிர்காலச் சந்ததியார் நம்மைஎதிர் பார்த்தே
இருக்கின்றார் ஆகையினால் எண்ணிநலம் சேர்த்தே
புதுமையினைப் படைத்திடுவோம் புன்மைகளைத் தூர்த்தே,
பூத்துவரும் சமுதாயம் புகழ்பாடும் ஆர்த்தே!

-பொன்முடி

ஆறடிக்கு மேல் ஒடுஒடு வென்று வளர்ந்த பரஞ்சானும் நோஞ்சானுமான உடல்-

தலை முதல் காது ஈறாக மூடி மறைத்துக்கொண்டு தொங்கும் மிக மிகப் பழைய கம்பாய் தொப்பி. சொந்த அழுக்குடன் தெருப்புழுதி யும் அத்துடன் தாரும் கூட்டுறவாகி ஒரு புதுவித நிறத்துடன் சாக்காகப் போர்த்திக்கிடக்கும் தொள தொள உடைகள்-

கொதிக்கும் தார் காலில் படாமலிருக்க அரசாங்கத்தின் கருணை மேலிட்டால் "சப்ளை" செய்யப்பட்டு ஆனால் இப்போது கிஞ்சித்தும் அடையாளம் தெரியாமல் தன்னை மாற்றிக்கொண்டு உப்பி ஊதிப் போய்த் தார் அபிசேகத்துடன் காணப்பட்ட மிலிட்டரி பூட்சுகள்-

இத்யாதிகளுடன் ஓர் உருவம் தாலான் கம்பத்தில் ஆடி அசைந்து கொண்டு நடந்து வரக்காணப்பட்டால் அது நிச்சயம் தங்கையாவாகத்தானிருக்கும்.

பொதுப்பணித்துறையில் சாலை செப்பனிடும் "கேங்"கில் பணியாற்றிய தங்கையாவுக்கு சீல பாஸ் போர்ட்டுப்படி வயது முப்பதாகி யும் இன்னமும் அவன் ஒண்டிக் கட்டையாகவே இருந்தான்.

வயதில் தாராளமாகப் பத்தைக் கூட்டிக்கொண்டு முக்கால் கிழமாகப் "போஸ்" கொடுக்கும் அவனுடைய அலாதியான தோற்றம் கம்பத்தார் நெஞ்சங்களில் அட்சரசுத்தமாகப் பதிந்துபோன ஒன்று.

அதேபோல் அவனும் யார், எங்கே, எந்த மூலையில், எப்படி யென்று அந்தக் கம்பத்தைத் தெளிந்தே இருந்தான்.

இன்று நேற்ற அவன் அங்கே வருகிறான்?

முகத்தில் பூசணமாக மயிர் பூத்து பின் அது மீசையென்றும் தாடியென்றும் வரம்புகட்டி வகையாக வளர்ந்து அவனும் மனித மந்தையில் ஒருவனாகி, பின் "ஜே. கே. ஆரில்" சாலை போடும் வேலையில் சேர்ந்து...

கடந்த பத்தாண்டு காலமாக ஒவ்வொரு மாலையிலும் வேலை முடிந்த கையோடு அந்தக் கம்பத்திற்கு வந்துபோய்க் கொண்டிருக்கிறான்.

என்றாலும் மீனாட்சி குடும்பமும் தங்கையாவும் ஆழ அகலத்தோடு பரஸ்பரம் ஒருவரையொருவர் ஒருபடி அதிகமாகவே தெரிந்திருந்தார்கள் என்றே சொல்ல வேண்டும்.

மூன்று மைல்களுக்கப்பால் ஜோ கங்சார் டவுனையொட்டி "ஜே. கே ஆர்" லயத்தில் குடியிருந்த அவனுக்கு அந்தக் கம்பம்தான் பொழுது போக்கிடம்.

அதிலும் குறிப்பாகக் கம்பத்தின் கோடியில் அந்த மீனாட்சி வீடு இருக்கிறதே, அதுதான் அவன் ஓய்வு விடுதியாக இருந்தது.

வேலை முடிந்த கையோடு வரும் அவன் அதோடு இருள் கவியும்போதுதான் அங்கிருந்து புறப்படுவான்.

இந்த வீட்டுக்கு வராவிட்டால் அன்றைய பொழுது அவனுக்கு மறையாது. மறுநாளும் கூட அவனுக்கு விடிந்தும் விடியாததாகவே இருக்கும்.

ஒரு பெரும்பாரம் தலையிலும் நெஞ்சிலுமாக ஏறிக்கொண்டு அவனைத் துடிக்கச் செய்யும். பிறகோ அவனைக் கொல்லாமல் கொன்று போடும்.

மறுநாள் நிச்சயம் அங்கே அந்த மீனாட்சி வீட்டிற்குப் போனால்தான் அவன்மேல் ஏறிக் கொண்ட பாரம் இறங்கும். தெம்பு பிறக்கும்.

மீனாட்சி வீடு இருக்கிறதே-

ஆமாம், தாலானில் அந்த பேரைச் சொன்னால்தான் எல்லோருக்கும் புரியும். அதற்காக அவள் கணவர் "அவுட்" டாகி விட்டார் என்று பொருளாகாது. அவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்போல் பல்-நகம் உட்பட விழுந்த சிங்கமாகிப் போனவர்- அவ்வளவே!

அவர் விழுந்த இடத்தில் மீனாட்சி எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவர் "பென்சன்" ஆனதைச் சாக்காக வைத்துக்கொண்டு "அவருக்கென்ன, எழுபது வயதாகுது. நான் என்ன. இப்பத்தான் எனக்கு நாற்பது..." என்று நாலுக்கொன்றாகவும் சமயங்களில் பொழுதுக்கொன்றாகவும் கண்ட்ரோல் இல்லாமல் வயதை ஏற்றிக்கொண்டு போனதோடு அந்த அப்பாவிக்கணவனிடமிருந்து குடும்பப் பொறுப்போடு எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகத் தானே கபளீகரம் செய்து கொண்டாள் அநியாயமாக!

ஆனால் ஒன்று; தங்கையா இப்போதெல்லாம் நிச்சயமாக மீனாட்சிக்காக வரவில்லை. அவன் அப்படி வேலை முடிந்த கையோடு அரக்கப்பரக்க அங்கே ஓடி வருவது மீனாட்சி பெற்ற பைங்கொடியாம் மருதாயி. அவளைப் பார்க்கவே!

இதுவே சர்வ உண்மையும் கூட!

"நல்லா பொண்ணைக் காட்டி அந்த ஏமாந்தப் பயகிட்ட புடுங்கிருடி"-கம்பத்தில் தங்கையாவைப் பார்த்துவிட்டால் நேற்று பிறந்த வாண்டுகூட பேசும் சர்வ சாதாரணமான வசனமாரி இது.

இதை மீனாட்சி அண்ட் குடும்பம்கூட அறிந்தே இருந்தது.

ஆர். சண்முகம்

"அட விடுவியா! சூரியனைப் பார்த்து நாய் குலைச்சால் நாய்க்குத் தானே கேடு. நாலுபேரு நாலு விதமாத்தான் பேசுவானுங்க. மடியிலே கனமில்லாதபோது வழியிலே என்னடி பயங்கிறேன்"- இது மீனாட்சியின் ஆணித்தரமான எதிர்வாதம்.

இவ்வளவு வாதப்பிரதி வாதங்களுக்கிடையிலேயும் மீனாட்சி பாமூல்படி, இரண்டு நாட்களுக்கொருமுறை ஒன்று இரண்டாகவும் சம்பள சமயத்தில் பத்து இருபதாக ஏன் முப்பதாகவும்கூட கூசாது வாங்கிக்கொண்டுதானிருந்தாள், மகள் மருதாயியை ஏவுகணையாக்கி!

"இன்னைக்கு ஒண்ணுமில்லே மீனாக்கா" என்று அவன் இழுப்பான் அசடு வழிய!

"என்னடா தங்கையா, வச்சிக்கிட்டே குல்மால் பண்றியே! புள்ளே ஆசையோட கேக்குது! நாளைக்கு நீ தானே அவளைக் கட்டிக்கப்போறே! சும்மா கொடுப்பியா...-

மீனாட்சி இதைச் சொல்லிவிட்டு மகளைப் பார்த்துக் கண்ணைச் சொடுக்குவாள்.

மீன் குஞ்சுக்கு நீந்தவும் கற்றுத் தர வேண்டுமா என்ன?

"என்ன மாமா, வச்சிக்கிட்டே இல்லேங்கிறியே! கொடுன்னா..."- மருதாயி அவன் "பாக்கெட்"டை ஆராயத் துவங்குவாள்.

அவள் கைபட்ட கூச்சத்தால் உடல் கன்றிப்போகும் அவன், "இ இ இ..., உனக்கு இல்லாமலா..." என்றபடி இருப்பதை எடுத்து முழு மனதோடு நீட்டி விடுவான்.

மறுநாள் வேலைக்காட்டில் தம்படி இன்றி, கோப்பிக் கடையைப் பார்க்க நேரும்போதுதான் நேற்று எடுத்துத் தாராளமாக நீட்டியபணத்தின் அருமை தெரியும் அவனுக்கு!

"மருதாயிக்குத்தானே கொடுத்தேன். கிடக்குது விடுவியா..." - ஒரு வாய்த் தண்ணீரோடு வயிற்றின் வெப்பத்தை ஆற்றிக்கொள்ளுவான்.

அதற்கு முன் மீனாட்சி கூட இப்படித்தான் அவனிடம் பணம் பண்ணிக் கொண்டிருந்ததாகத் தாலானில் வதந்தி.

மகள் மருதாயி பூப்பெய்தியவுடன், தாய் வெற்றிகரமாக "ஜகா" வாங்கிக் கொண்டாளோ என்னவோ?

இப்போது குட்டி பதினாறடி-ஏன் அதற்கு மேலாகவும் பாய்ந்து கொண்டிருக்கிறது.

கதவிடுக்கில் சிக்கிய ஆத்மா

யாராவது அவனிடம் பழைய‌தை நினைவூட்டினல் கூட "மீனாட்சிக்கா கொடுத்தேன்? எல்லாம் மருதாயிக்குத்தான்" என்று சொல்லி விட்டு நமட்டுச் சிரிப்புச் சிரிப்பான்.

ஒரு முறை சம்பளத்தின்போது மருதாயியின் கையில் முப்பது வெள்ளியை வைத்து அழுத்திய அவன் தாபம் மேலிட மெதுவாகக் கேட்டான்.

"நிச்சயமா . என்னைக் கட்டிக்குவியா மருது?"— அவன் அந்த நான்கு தனி வார்த்தைகளையும் ஒன்றாக இணைத்து ஒரு முழு வாக்கியமாய் ஆக்குவதற்குள் நாவரண்டு, தொண்டை வற்றிப் படாத பாடு பட்டுப் போனான்.

"ஆசையைப்பாரு, பின்னே பொய்யா சொல்றேன்"- அவன் கன்னத்தில் செல்லமாக சீண்டிவிட்டு பணத்துடன் அவள் அறைக்குள் பாய்ந்து விட்டாள்.

ஆனல் தங்கையாவோ பல்லாண்டு காலமாய்த் தவமிருந்து அதன் பயனாக இறைவன் அவன் முன், அதுவும் மருதாயியின் ஸ்டைலில், தோன்றி அதன் காரணமாக அவன் ஜென்ம சாபல்யம் அடைந்ததுபோல் நிறைவு பெற்றுப் போனான்.

அன்றையிலிருந்து அவன் கொடுக்கும் ஒவ்வொரு சல்லியும் அழகி மருதாயிக்கு மட்டும் போகவில்லை; அவன் எதிர்கால மனைவி மருதாயிக்கும் போகிறது.

அவனுள்ளம் அப்படித்தான் நெகிழ்ந்து போகிறது இப்போதெல்லாம்.

"ஏண்டா அங்க மீனாட்சி விட்டிலேயே விழுந்து கிடக்கிறே? சம்பாதிக்கிறதையெல்லாம் அந்தச் சிறுக்கிமவளுக்கே கொட்டறியேடா, இது உனக்கே நல்லாயிருக்காடா?" — எத்தனையோ ஆயிரக் கணக்கான தடவைகள் அவனிடம் கேட்டுப் பார்த்துவிட்ட அவன் தாய் இப்போது அதையும் விட்டு விட்டாள். "எங்கேடாவது கெட்டுப் போடா சனியனே!" என்று.

சென்ற மாதத்தில் ஒரு முறை, "ஒரு கால் கட்டுப் போட்டால்தான் பய உருப்படுவான். இல்லாகாட்டி அந்த மீனாட்சி கெடுத்துப்புடுவா" என்று யாரோ சொன்னதைக் கேட்டு அதற்கும் முயன்றாள்.

ஆனல் அவனோ "அந்த வேலையெல்லாம் ஒனக்கு வேண்டாம்" என்று அடித்த வாய் துடைத்தது போலப் பெற்றவளை மேலே பேச விடாது அமுக்கிவிட்டான்.

அதன் பிறகு அவன் திருமண விஷயம் அந்த விட்டில் முற்றாகவே அடங்கிவிட்டது.

இன்று வழக்கம்போல் வேலை முடிந்து அவன் தாலான் முச்சந்தியை அடைந்தபோது —

வேலைக்காட்டில் அவனோடு தார் ஊற்றும் சோனமுத்து அவனிடம் கிசுகிசுத்ததை இப்போது அவன் நினைத்துக்கொள்கிறான்.

அந்த நினைப்பு—



அவன் உடல் ஒருமுறை குலுங்கி ஓய்கிறது "ஏண்டா தங்கம், சும்மா போய் வந்துக்கிட்டு இருக்கியே! தெரியாமல்தான் கேட்கிறேன். உனக்கு எதுவுமே புரியாதாடா?" இப்படித்தான் ஆரம்பித்தான் சோனமுத்து.

"நீ என்னடா சொல்றே?"- தங்கையா உண்மையிலேயே புரியாமல்தான் கேட்டான். 'பித்தா பித்தா" என்று விழித்தபடி!

"என்னத்தை சொரைக்காயைச் சொல்றது? அவ விட்டிற்கு ஓம் பாங் காலமா போய் வந்துக்கினு இருக்கியே, இதுவரைக்கும் அவளைத் தொட்டாவது பார்த்திருக்கியா? சும்மா அப்படி தோளு மேலே நைசா கையைப் போட்டு..."- அவன் முடிக்கவில்லை.

தங்கையா அலறினன், கொதிக்கும் தாரில் காலை விட்டதுபோல்!

"அடப்பாவி..."

"ஏண்டா பிசாசைக் கண்டவ னாட்டமா அலர்றே? நானுயிருந்தால் அவனை அப்படியே பிடிச்சு..."

சோலைமுத்து மேலும் ஏதோ சொல்லிக்கொண்டு போனான், நாக்கை உறிஞ்சியபடி!

தங்கையாவோ வாளியில் தார் மொள்ளும் சாக்கில் அவனைவிட்டுத் தூரத்தே விலகிப் போய்க்கொண்டிருந்தான்.

ஆனால் சோலைமுத்து கடைசியாகச் சொன்ன அந்த அசிங்கமான வார்த்தைகள்...

மனதால் மட்டுமே இதுவரை அவளைத் தொட்டு ஸ்பரிசித்து, ஆத்ம சுகத்தில் தன்னை மறந்து வாழ்ந்துவிட்டவனுக்கு. இப்போது நேரிலேயே கேட்டபோது அவன் உடல் அந்தப் புழுக்கத்திலும் ஜன்னி கண்டதுபோல் நடுங்கியது.

அந்த நடுக்கம் மீனாட்சி விட்டை அடையும்போது அவனுக்குள் பூரணத்துவம் பெற்றுவிடுகிறது.

அவன் முகத்தில் என்றுமில்லாத ஒரு மாற்றம்- மலர்ச்சியில்லை.

"மீனக்கா..."- தங்கையாதான் விட்டின் வாயிலில் நின்றபடி அழைக்கிறான்.

அவன் குரலிலும்கூட ஒரு புது வித ஸ்வரம் தட்டுகிறது.

"என்ன யாரையும் காணோம்?"- அவன் திறந்த கதவு வழியே உள்ளே நுழைகிறான்.

யாரோ பின் பக்கம் குளிக்கும் ஓசை- "அது அவள்- மருதாயியே தான்."

அவனுக்குள் ஏதோ ஒருவித உந்தல்-அடிமேல் அடியெடுத்து வைத்துக் குளியலறையைச் சமீபிக்கிறான்.

துடிக்கும் இதயத்தை இடது கரத்தால் தேய்த்தபடி அந்த அறையின் சாத்திய கதவிடுக்கின் வழியே உள்ளே பார்க்கிறான். அங்கே-

மேகமற்ற நிர்மல்யமான நீல வானம்போல் ஒரு சின்னம் சிறு நூலிழைகூட இல்லாமல் அவள் நின்ற காட்சி...

அவன் ரத்தமே ஒரு விநாடி பனிக்கட்டியாக உறைந்துவிடுகிறது.

நீருக்குள் பலவந்தமாக அமுக்கப்பட்டதுபோல் மூச்சுத் திணறி-

"ஆ "- உணர்ச்சி மேலிட்டால் தன்னை மறந்து வீறிட்டு விடுகிறான்.

அதே சமயம் "ஐயோ...யார்... யாரது? ஆ " குளியலறைக்குள்ளிருந்து ஒரு குரல் - அது மருதாயி குரலேதான் - அலறுகிறது.

"மருதாயி, நான்... நான்தான். பயப்படாதே!"- அவன் நடுங்கும் குரல் ஓயவில்லை.

அதற்குள் ஒரு கை அவன் சட்டையைப் பின் பக்கமாகப் பற்றி முரட்டுத்தனமாக வெளியே இழுக்கிறது.

"அடப்பாவி! உண்ட வூட்டுக்கு ரெண்டு செய்திட்டியேடா! நீ உருப்புடுவியா..."

"யாரு? மீ...மீனா அக்காவா! நான்...நான்..."

மீனாட்சியின் முரட்டுப் பிடியில் சிக்கிக்கொண்ட அவன் பேசவும் சக்தியற்றவனாகிறான்.

"ஏண்டா நாயே, இதுக்குத்தானா உன்னை விட்டிலே நுழைய விட்டேன்?"

"வந்து... நான்... நான்தானே மருதாயியைக் கட்டிக்கப்போறேன். அதுதான்..."

"மூகரையைப் பாரு! அசிங்கம் பிடிச்ச கழுதை! ரதி மாதிரி இருக்கா என் பொண்ணு! உனக்கா வேணும்? இன்னைக்குக் காத்தாலேகூட பெரிய ஆஸ்பத்திரி டாக்டரு எம் பொண்ணைக் கேட்டாண்டா!"

"நீதானே சொன்னே..."- அவன் சிறு குழந்தையைப்போல் தேம்புகிறான்.

"அட, பாவிப்பய மவன் என்ன சொல்றான் பாருங்கய்யா... சூது வாது இல்லாதவன்- கூடப் பொறந்தவளா நினைப்பான்னு வீட்டுலே சேர்த்ததுக்கு கடைசியா... உன்னை எல்லாம்..." - மீனாட்சி சாமி வந்தவளைப்போல் ஆடிக்கொண்டு வாசல் ஓரமாகக் கிடந்த விளக்குமாற்றை எடுக்க ஓடுகிறாள்.

தங்கையாவோ கூட்டத்தை விலக்கிக்கொண்டு சாலையை நோக்கி தலைதெறிக்க ஓடுகிறான்.

ஆனால் அந்தக் கதவிடுக்கில் சிக்கிக்கொண்ட அந்த அப்பாவியின் ஆத்மா-

அது ஓடவில்லை.

ஆமாம், மீனாட்சி அல்ல, அவள் குடும்பமே வந்து விரட்டினாலும் கூட இனி அது ஓடாது.

திரை


"ஈசுவரன் எங்கும் நிறைந்திருப்பவரானால் நம்மால் ஏன் அவரைப் பார்க்க முடியவில்லை? பாசியும் நாணலும் மிகுந்திருக்கும் குளத்தின் கரையில் நின்றுகொண்டால் அக்குளத்தில் தண்ணீரே இல்லையென்றுதான் நீ சொல்வாய். தண்ணீரைக் காணவேண்டுமானால் குளத்தின் மேற்பரப்பிலிருந்து பாசியை அகற்ற வேண்டும். மாயை என்ற திரையால் மூடப்பட்ட கண்களையுடைய நீ, ஈசுவரனைக் காண முடியவில்லையென்று குறை கூறுகிறாய். அவரைக் காண வேண்டுமானால் உனது கண்களினின்றும் மாயையாகிய திரையை அகற்று."

-ஸ்ரீ ராமகிருஷ்ண உபதேசம்

அனுப்பியவர்:

ச. தமிழ்ச் செல்வம்,
செலாபா தோட்டம்
தெலுக்கான்சன்

வெட்ட வெளியினிலே



ஆடி படங்கிவிட்டேன் — என்
அகந்தையை மாய்த்துவிட்டேன்,
ஓடிக் களைத்துவிட்டேன் — மன
ஓட்டம் தடுத்துவிட்டேன்!

கோட்டை துறந்துவிட்டேன் — சிறு
குடிலை மறந்துவிட்டேன்,
வேட்டை முடித்துவிட்டேன் — வெட்ட
வெளியினில் வந்துவிட்டேன்!

போட்டதைச் சேர்த்துவிட்டேன் — இரு
பொதியாகக் கட்டிவிட்டேன்,
வாட்டத்தைப் போக்கிவிட்டேன் — எது
வரினும் துணிந்துவிட்டேன்!

உறவு மறைதல்கண்டேன் — மனம்
ஓர்மையில் நிற்றல்கண்டேன்,
பிறவியின் பேச்சுகண்டேன் — நான்
பிரிவதில் மூச்சுகண்டேன்!

முடிவினில் ஒன்றுகண்டேன் — போட்ட
முடிச்சினில் வீழ்தல்கண்டேன்,
விடிவில்லா விளக்கங்கண்டேன் — பாதை
வெவ்வேறாய்ப் போதல்கண்டேன்!



கெட்டிக்கார மாணவி

பொன். சோமசுந்தரம்
ரவாங்



ஏறத்தாழ தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன், ஜெர்மன் நாடு, மிக்க பலம் பொருந்தியதாக விளங்கியது. அதன் அண்டை நாடு லோரைன் நாடு. அந்த நாட்டை ஜெர்மன் நாடு, தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தது. இன்னொரு நாட்டைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரும் நாடு, அந்நாட்டு மக்களைத் தன் அடிமைகள் என்று நினைக்கும்; அடிமையைப் போல நடத்தியும் வரும்.

அடிமைகளை விருப்பம்போல் எதுவும் செய்யலாம் அல்லவா? லோரைன் நாட்டு மக்கள், தம் தாய் மொழியைப் படிக்கக் கூடாது; அவர்கள் தம் கலை கலாச்சாரங்கள் எல்லாவற்றையும் கைவிட்டுவிட வேண்டும்"— இது, ஜெர்மன் நாட்டு மாமன்னர் "கெய்சர்" இட்ட கண்டிப்பான உத்தரவு.

இத்துடன் அவர் மன நிறைவு கொள்ளவில்லை. லோரைன் நாட்டுப் பள்ளிகளில், ஜெர்மன் மொழியை மட்டுமே கற்றுத் தரவும் வழிவகை செய்தார். இதில் அவர் பெரும் வெற்றியுங் கண்டார். தப்பித்தவறி லோரைன் மக்கள், தமது தாய் மொழியைப் பேசுவதையோ படிப்பதையோ கெய்சர் அறிந்தால், அவர்களுக்குக் கடுந் தண்டனையும் தந்து வந்தார்.

லோரைன் மக்கள், கெய்சரின் கட்டளையை, வேதனையோடும் வெறுப்போடும் ஏற்றுக்கொண்டனர். தாய் மொழியின் மேல் உயிரையே வைத்திருந்த சிலர், இரவு வேளைகளில் தமது தாய் மொழியை இரகசியமாகப் பேசியும் படித்தும் வந்தனர். இப்படியாக முப்பது ஆண்டுகள் உருண்டோடி மறைந்து விட்டன.

கெய்சரின் அன்பு மனைவி கெய்சரினி. இவர் தம் தாய் மொழியை உயிரினும் மேலானதாக மதித்துவந்தார்.

கெய்சரினி, அடிக்கடி லோரைன் நாட்டுப் பள்ளிகளுக்கு வருகை தருவார். பள்ளிகளில், ஜெர்மன் மொழி எப்படிக் கற்றுத் தரப்படுகிறது என்பதைத் தாமே நேரில் கண்டறிவார். சில வேளைகளில், வகுப்பு வகுப்பாகச் சென்று, சோதனை செய்தும் பார்ப்பார்.

ஒரு நாள், வகுப்பொன்றில் சோதனை செய்யச் சென்றார். ஒரு மாணவியிடம் ஜெர்மன் மொழியில் கேள்விகள் பல கேட்டார். அம் மாணவி, அறிவிற் சிறந்த மாணவி. பேராசிரியரின் கேள்விகளுக்குத் தகுந்த முறையில், ஜெர்மன் மொழியில் பதில் அளித்தாள். கெய்சரினி ஆச்சரியப்பட்டார்.

உடனே கெய்சரினி அம்மாணவியைப் பார்த்து, "குழந்தாய்! நீ என் தாய்மொழியை இவ்வளவு சிறப்பும் செம்மையும் உறக் கற்றுள்ளதைக்காண, என் நெஞ்சம் நெக்குருகி நிற்கிறது. மெத்த மகிழ்ச்சி! நீ மேற்கொண்டு இன்னும் திறமையாகக் கற்றுத்தேறுவாய். அதற்கு ஆண்டவன் சகல வல்லமையும் தர வேண்டுகிறேன். உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள். நான் தருகிறேன்" என்றார்.

உடனே அம்மாணவி, பேராசியரை வணங்கி, "பெருமைக்கும் பெருமதிப்புக்கும் உரிய பேராசிரியார் அவர்களே! நான் கேட்கப் போவதைத் தாங்கள் நிச்சயமாகத் தர முடியுமா?" என்று பணிவோடு கேட்டாள்.

இதைக் கேட்டதும், கெய்சரினிக்கு, அடங்காக் கோபம் வந்துவிட்டது. "குறும்புக்காரச் சிறுமியே, நீ யாருடன் உரையாடுகிறாய் என்று உனக்குத் தெரியவில்லையா? உனக்கு என்ன வேண்டுமோ, அதை நான் நிச்சயமாகத் தருவேன்" என்று உரத்த குரலில் கோபாவேசத்தோடு கூறினார்.

உடனே அம்மாணவி, முழந்தாளிட்டு உட்கார்ந்தாள். கெய்சரினியின் கால்களைக் கட்டிப் பிடித்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் முத்துமுத்தாக உதிர்ந்தது. "பேராசிரியார் அவர்களே! நாங்கள், எங்கள் தாய்மொழியாகிய லோரைன் மொழியைப் பேசவும், படித்துத் தேறவும் வழிவகை செய்து தாருங்கள்" என்று கண்ணீர் மல்கக் கேட்டாள்.


கெய்சரினி அம்மாணவியின் மதிநுட்பத்தையும், தாய்மொழியின் பால் அவள் வைத்திருந்த வற்றாத ஆழ்ந்த பற்றுதலையுங்கண்டு, வியந்தார்; திகைத்தார்.

"குழந்தாய்! உன் விருப்பத்தின் படியே ஆவன செய்கிறேன்" என்று உறுதி கூறி விடை பெற்றார்.

கெய்சரினி, ஜெர்மன் நாடு திரும்பியதும், லோரைன் நாட்டுப் பள்ளியில் நடந்தவற்றையெல்லாம் கெய்சரிடம் நயந்து உரைத்தார். கெய்சரும் தமது மனைவியின் வேண்டுதலை அட்டியின்றி ஏற்றார். ஆவன செய்வதாக உறுதியும் கூறினார். உத்தரவும் இட்டார்.

அன்றையிலிருந்து லோரைன் நாட்டுமக்கள் தம் உயிரினும் மேலாக மதித்து வந்த தாய்மொழியைப் பேசவும் படிக்கவும் தொடங்கினர். களிப்பும் செழிப்புமாக வாழ்ந்து வரலாயினர்.

தாய் மொழி



தஞ்சைக்கிழார்
தஞ்சோங்மாலிம்

அறிவுமொழி கூறும் -நல்ல
அன்புமொழி பேசு!
பரிவுதன்னைக் காட்டு -எதிலும்
பகுத்தறிவை ஊட்டு!

பாசமொழி பேசு -நல்ல
பண்புகளைக் கூறு!
தேசமொழி பேசு -அதனைத்
தெளிவுபெறப் பேசு!

பொறுமைமொழி பேசு -தீய
பொய்யுரைக்கக் கூசு!
வறுமைமொழி நீக்கு -உள்ளம்
வளம்பெறவே ஊக்கு!

தாய்மொழியைப் பேசு -தாய்
தந்தமொழி பேசு!
வாய்மொழியும் ஓங்க -நம்
வளமொழியைப் பேசு!

தந்தையின் வழியில்



திரு. லிங்கத்தேவர்



திரு. கோடிவேல்

"புதுத்தொழில் ஒன்றை உருவாக்கி நடத்துவதைவிட, தந்தையார் விட்டுச்சென்ற தொழிலை ஏற்று வெற்றிகரமாகத் தொடர்ந்து நடத்துவது மிகவும் சிரமமான பணி. பலரின் கூர்மையான பார்வை நம்மேல் இருக்கும். நடத்த இயலாது விட்டுவிட நேரிட்டால், அது ஒரு தொழில் பிரச்சினையாக மட்டும் அல்லாமல் ஒரு தலைமுறையின் கௌரவப் பிரச்சினையாகவும் மாறிவிட வாய்ப்புண்டு"-சுருட்டு, வாய்ப் புகையிலை தயாரிக்கும் தலைநகர் ஸ்ரீ அம்பாள் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. கோடிவேல் இப்படிக் கூறியபோது, அந்தச் சிரமமான பணியில் அவர் வெற்றிபெற்றுவிட்டார் என்பது தெளிவாகப் புலப்பட்டது. பசுவை வணிகச்சின்னமாகக்கொண்ட ஸ்ரீ அம்பாள் நிறுவனத்-தை நிறுவி தொழிலைப் பெருக்கிய திரு வி.பி லிங்கத்தேவர் 1964-ஆம் ஆண்டில் காலமானதிலிருந்து, அவர் விட்டுச்சென்ற தொழிலைத் "தந்தையார் துவக்கிய தொழில்" எனும் கடமையுணர்ச்சியோடு முழுப் பொறுப்பேற்றுக் கவனித்து வருகிறார் கோடிவேல்.

1919-ஆம் ஆண்டில் பாகான் செராயில் பிறந்த லிங்கத்தேவர், காவல்துறையில் உளவுப்பிரிவில் பணியாற்றியவர். அந்த வேலையில் இருக்கும்போதே தொழில் நாட்டத்தால் அவ்வப்போது சிறு சிறு தொழில்களையும் நடத்தத் துவங்கினார். ஆனால் எதுவும் சிறப்பாக நிலைபெறவில்லை. அவரின் துணைவியார் அப்போது தோசை சுட்டு விற்று வருவதை அன்றாடம் மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் அவர் சேமித்துக் கொடுத்த சிறு தொகையையும், நண்பர் ஒருவர் கொடுத்த ஐநூறு வெள்ளியையும் முதலாகக் கொண்ட தேவர், நிலையான ஒரு தொழிலை மேற்கொள்ள எண்ணினார். அதன் விளைவாக 1947-ஆம் ஆண்டு ஸ்ரீ அம்பாள் நிறுவனத்துக்கு உரிமையாளரானார்.

அந்தக் காலத்தில் மூன்று,நான்கு பேர்தாம் வேலைசெய்தனர். அவர்களோடு சேர்ந்து தேவரும் அவர் துணைவியாரும் அதிகாலை இரண்டு மணிவரை வேலை செய்வார்கள். விடிந்ததும் சுருட்டுகளைச் சைக்கிளில் கட்டிக்கொண்டு வாடிக்கையாளர்களுக்கு வினியோகிப்பார். பிறகு தேவரின் தம்பியும் தொழிலில் சேர்ந்துகொள்ளவே, வினியோகிக்கும்பொறுப்பு அவரிடம் போய்ச் சேர்ந்தது.

இப்படி அயராமல் உழைத்த உழைப்பு நிறுவனத்தை வளர்த்தது. நிறுவனத்தை வளர்ப்பதைமட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் தொழிலாளர் நலன், சமுதாயச் சேவை போன்றவற்றிலும் கருத்தைச் செலுத்தினார் லிங்கத்தேவர். சிலாங்கூர் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கி, தொழிலாளர்களிடையே கட்டுக்கோப்பையும் அவர்களின் தொழில் பாதுகாப்பையும் நிலைபெறச் செய்தார். இன்று நாடளாவி இருக்கும் தேசிய புகையிலைத் தொழிலாளர் சங்கத்தின் தாய்ச்சங்கமே தேவர் உருவாக்கிய சங்கம்தான் அவரின் சமுதாய உணர்வும் தொண்டுள்ளமும் இன்றும் பலரின் நினைவில் அகலாது நிலைபெற்றுள்ளன.

லிங்கத்தேவரின் ஒன்பது பிள்ளைகளில் இரண்டாமவரான கோடிவேல், ஸ்ரீ அம்பாள் நிறுவனத்துக்கும் அதில் பணிபுரியும் சுமார் 100 குடும்பங்களுக்கும் இன்று பொறுப்பேற்று நிற்கிறார். உள்நாட்டில் மட்டுமன்றி, அமெரிக்கா, பெல்ஜியம் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் சுருட்டுகள் கோரிக்கைகள் வரும் அளவுக்கு நிறுவனம் இன்று வளர்ந்துள்ளது.

"தேவை இருக்கும் அளவுக்கு உற்பத்தி செய்ய இயலவில்லை. தொழிலாளர் பற்றாக்குறையே இதற்குக் காரணம். நன்கு தேர்ச்சிபெற்ற பிறகு மிகவும் பொறுமையோடு இருந்து செய்யவேண்டிய தொழில் என்பதாலோ என்னவோ, தொழிலாளர்கள் இத்துறையில் ஈடுபடத் தயங்குகின்றனர். உழைப்புக்கேற்ற ஊதியம் தரக்கூடிய தொழில் இது. ஆர்வம் உள்ளவர்கள் தொழில் கற்றுக் கொண்டு, நிரந்தரமான வேலையும் பெற ஸ்ரீ அம்பாள் நிறுவனத்தில் வாய்ப்புண்டு. பகுதிநேர வேலையாகச் செய்ய விரும்புவோருக்கும்-ஆண்களுக்கும்பெண்களுக்கும்-நல்ல ஊதியம் பெற வாய்ப்புண்டு. ஈடுபாடு உள்ளவர்கள் முன்வரவேண்டும்" என்றார் கோடிவேல். வேலையில்லாமல் இருப்போரும் உதிரி வருமானம் பெற விரும்புவோரும் இதைத் தமக்கு விட்ட அழைப்பாகக் கொள்ளலாம்.

தற்போது கோலாலம்பூரிலும், கோலாலம்பூரின் ஒரு பகுதியான சிகாம்புட்டிலும், தெலுக்கான்சனிலும் ஸ்ரீ அம்பாள் நிறுவனத்தின் சுருட்டுகள் உற்பத்தியாகின்றன.

புகையிலைத் தொழிலில் தம் தந்தையாரின் கனவுகளை நிறைவேற்றியுள்ள கோடிவேல், தந்தையாரின் பிற எண்ணங்களுக்கும் வடிவம் கொடுத்துள்ளார். கோலாலம்பூரில் ஒரு மளிகைக் கடையும், மாவுமில்லும் இவரின் பொறுப்பில் நடைபெற்று வருகின்றன. அழகுப் பொருட்களின் தயாரிப்பும் உண்டு.

மூன்று குழந்தைகளுக்குத் தந்தையான கோடிவேல், கோலாலம்பூர் சரோஜினி தமிழ்ப்பள்ளியிலும், தம்புசாமி தமிழ்ப்பள்ளியிலும் ஆரம்பக் கல்வி கற்றபின்னர் தமிழகத்தில் உயர்கல்வி கற்றவர்.

தொழில் ஈடுபாடு மிகுந்தவராயினும் சமுதாய நாட்டம் மிகுதியும்

உள்ளவர். தம்புசாமித் தமிழ்ப் பள்ளியின் நிர்வாகசபை, அப்பள்ளியின் பழைய மாணவர் சங்கம், சங்கீத அபிவிருத்தி சபா, செந்தூல் இந்திய வாலிபர் சங்கம் போன்ற பல இயக்கங்களிலும், நிர்வாகங்களிலும் செயலவை உறுப்பினராக இருக்கிறார். முத்தமிழ்ப் படிப்பகம் போன்ற பொது அமைப்புக்களின் ஆலோசகராகவும் இருக்கிறார்.

ஓசைப்படாமலும், ஓசைப் படுத்தாமலும் தொண்டாற்றுவதில் கோடிவேல் முன்நிற்பவர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு: தம்புசாமித் தமிழ்ப்பள்ளியின் மாணவ மாணவியருக்குக் கடந்த நான்கு ஆண்டுகளாக இவர் அன்றாடம் சத்துணவு வழங்கி வருவதும், அதை வழங்குபவர் யார் என்பது இன்னும் பலருக்குத் தெரியாமல் இருப்பதும் ஆகும்.

தொழிலின் மூலமாகப் பொது மக்களிடமிருந்து வரும் பணத்தில் ஒரு பகுதியைப் பொதுமக்களின் நன்மையை உத்தேசித்து அவர்களுக்கே திருப்பி வழங்குவதைக் கடமையாகக் கொண்டவர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு: தலைநகரில் இன்று கம்பீரமாக எழுந்து நிற்கும் ம.இ.கா தலைமையகக் கட்டிடத்தைக் கட்ட, அக்காலத்தில் ஸ்ரீ அம்பாள் நிறுவனத்தின் சார்பில் $5001.00 வழங்கி கட்டிட நிதியைத் துவக்கிவைத்தவர் இவர்.

புதிய சமுதாயம் சந்தா விவரம்

உள்நாட்டுச் சந்தா: (அஞ்சல் செலவு உட்பட)		சிங்கப்பூர், இந்தியா உட்பட வெளிநாட்டுச் சந்தா (அஞ்சல் செலவு உட்பட)	
12 இதழ்	$6.00	12 இதழ்	$9.00
26 இதழ்	$12.00	26 இதழ்	$18.00
52 இதழ்	$23.00	52 இதழ்	$35.00

புதிய சமுதாயம்
131, JALAN TUANKU ABDUL RAHMAN,
P.O. BOX: 2066
KUALA LUMPUR -01-08


புதிதாகத் தொழில் துவங்க நினைப்பவர்களுக்கு இவர் என்ன சொல்கிறார்?

"தொழிலில் ஆர்வமும், விடா முயற்சியும் உழைப்பும் வேண்டும். தம்மைத் தொழிலதிபர் என்றெண்ணிக் கொள்ளாமல் ஒரு தொழிலாளியாகவே எண்ணி அயராமல் உழைக்கவேண்டும். படித்து தெரிந்து கொள்வதைவிட, கேட்டுத் தெரிந்து கொள்வதைவிட, சொந்த அனுபவத்தில் தெரிந்து கொள்ளக்கூடிய தொழில் நுணுக்கங்களே அதிகம். முதலீடு சிறியதா, பெரியதா என்று எண்ணிக் கொண்டிருக்கத் தேவையில்லை. சிறிய முதலீடு எனினும் உழைப்பு இருக்குமெனில் உயரலாம். கடுமையான உழைப்புத்தான் உண்மையான மூலதனம். இத்தகைய ஈடுபாடு இருக்குமானால், தொழிலைப் பெருக்கப் பொருளகங்களிலும், பிற நிறுவனங்களிலும் கடன் பெற்றுக்கொள்ளலாம்."

—கடைச்சித்தன்

'நாடகப் பேராழி' வாழ்க!

தலைநகர் கண்ணகி கைத்தொழில் நிலைய ஏற்பாட்டில் மதுரை தேவர் நாடக மன்றத் தலைவர் இசைநாடகத் திலகம் இரா. வெ. உடையப்பா தேவர் அவர்களை கௌரவப்படுத்த 6-11-77-இல், சிலாங்கூர் கூட்டரசுப் பிரதேச முக்குலத்தோர் சங்கத் தலைவர் திரு. வ. தங்கவேலு அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. அவ்விழாவில் திரு. சுப. நாராயணசாமி அவர்களால் "நாடகப் பேராழி" எனும் பட்டம் வழங்கப்பட்டு பெருங் கௌரவம் பெற்ற உடையப்பா தேவர் அவர்களுக்கும் அன்னாரின் குழுவினர்களுக்கும் எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்.




படவிளக்கம்: திருமதி உடையப்பா தேவருக்குச் செல்வி பா. கண்ணகி மலர்மாலை அணிவிக்கின்றார். அருகில் கலைஞர் பா. செல்விமணாளன், "நாடகப் பேராழி" இரா. வெ. உடையப்பா தேவர்.

காலம் கருதி, கடமையுணர்ந்து, கண்ணியமான முறையில் எந்தக் காரியத்தையும் சிறப்பாகச் செய்யும் கண்ணகி கைத்தொழில் நிலைய இயக்குநர் கலைஞர் பா. செல்விமணாளன் அவர்களுக்கும் எங்களது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க "நாடகப் பேராழி"! வளர்க கலைஞரின் தொண்டு!!

இன்னணம்,

சி. சுந்தரராஜ தேவர்,
எம். எம். முத்து,
பினாங்கு.

எஸ். மாணிக்கம்,
மா. வெள்ளைச்சாமி தேவர்,
ஈப்போ.



முன்னோட்டம்

தொலைக்காட்சி



பி.சுசீலா

27-11-77 தமிழ்ப்படம் "பிள்ளைக்கனி அமுது" எஸ். எஸ். ராஜேந்திரன், எம். என். ராஜம், பி. எஸ். வீரப்பா நடித்துள்ள சமூகப் படமான இதில்; பி. சுசீலாவின் குரலில் பல இனிமையான பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்படத்தின் தயாரிப்பாளர் பி. எஸ். வீரப்பா என்பது குறிப்பிடத்தக்கது.

1-12-77 தமிழ்ப் படம் "உல்லாசப் பயணம்" எஸ். எஸ். ஆர்-விஜயகுமாரி இணைந்து நடித்துள்ள குடும்பப் படமான இதில் நகைச்சுவைக் காட்சிகள் நிறைய உள்ளன.

8-12-77 இந்திப்படம் "Chamak".

இதர நிகழ்ச்சிகள்

செவ்வாய்க்கிழமைதோறும் இரவு மணி 10.46க்கு "த குவெஸ்ட்" - குவட்டின், மோர்கன் ஆகிய இரண்டு சகோதரர்களும் சிறு வயதில் செவ்விந்தியர்களால் கடத்திச் செல்லப்பட்ட தங்களின் உடன் பிறந்த தங்கையைத் தேடி அலைகிறார்கள். இப்படிச் செல்லும் வழியில் அவர்கள் சந்திக்கும் இன்னல்களை விறுவிறுப்பாக இப்படக் கதை எடுத்துக் காட்டுகிறது.

வெள்ளிக்கிழமைதோறும் இரவு 9.04க்குத் தனியார் துப்பறி



வாளராக வில்லியம் கோன்ரேட் நடிக்கும் "கேனன்" என்னும் ஆங்கிலப் படம்.

சனிக்கிழமைதோறும் இரவு 7.20க்கு "சிக்ஸ் மில்லியன் டாலர் மேன்"

ஞாயிறுதோறும் இரவு 7.20க்கு போர்க்காட்சிகள் நிறைந்த "கோம்பெட்" எனும் ஆங்கிலப் படம்.

கண்ணோட்டம்

அறுவை!

சில வேளைகளில் நம் மலேசியத் தொலைக்காட்சியில் திரையிடப்படும் சில தமிழ்ப் படங்கள் ஆரம்பமும் இல்லாமல் முடிவும் இல்லாமல் காட்டப்படுகின்றன. சில நேரங்களில் அளவுக்கு அதிகமாகவே படம் வெட்டப்படுகிறது.

இப்படி அறுவை செய்து தமிழ் ரசிகர்களுக்கு ஏன் வெறுப்பை ஊட்டவேண்டும்?

—எம். ராஜ்குமார்,
சிம்பாங் பெங்கோ,
மலாக்கா

வயிற்றெரிச்சல்

மலேசியத் தொலைக்காட்சியில் திரையிடப்படும் தமிழ்ப்படங்கள் ரசிகர்களுக்குப் பெரும்பாலும் மன நிறைவுக்குப் பதிலாக அதிருப்தியையே கொடுத்துவருகிறது.

கடந்த 30-10-77இல் ஒளியேறிய "உங்க வீட்டுக் கல்யாணம்" படத்தில் ஒரே ஒரு பாடல் இடம் பெறும் காட்சியை மட்டும் காட்டி விட்டு மீதமுள்ள மூன்று பாடல் காட்சிகளையும் ஏப்பமிட்டு விட்டார்கள்!

தொலைக்காட்சியில் திரைப் படங்கள் மக்களை களிப்புறச் செய்வதற்காகவே இடம் பெறுகின்றன. ஆனால் இப்படிப் படத்தை வெட்டி சுருக்கி ஏன்தான் ரசிகர்களின் வயிற்றெரிச்சலுக்கு ஆளாகிறார்களோ தெரியவில்லை? அதோடு பழைய காலத்துப் படங்களையே தான் தேடிப்பிடித்துப் போட வேண்டுமா? தமிழ் ரசிகர்களின் உணர்ச்சிகளை எத்தனையோ வழிகளில் வெளிப்படுத்தியும் இன்னும் தொலைக்காட்சியினர் மதிக்காமல் இருப்பது வேதனைக்குரியதே ஆகும்.

-ந. சமுத்திரப்பா,
பீக்கம் தோட்டம்,
சுங்கை, பேராக்.

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

4-12-77 "திருப்பம்" எழுத்து: தலைநகர் பதவியன்

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

3-12-77 தலைநகர் பதவியன் எழுதிய மினி பஸ் காதல்.

10-12-77 பூங்காவனம் பெருமாள் எழுதிய மயங்குகிறாள் ஒரு மாப்பிள்ளை.

வானொலி நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

3-12-77 "இறைவன் வகுத்த வழி" தலைநகர் பதவியன் எழுதியது.

10-12-77 நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று சுங்கை ஜாவி பூங்காவனம் பெருமாள் எழுதியது.

தொடர் நாடகம்

(திங்கட்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

இதயவாசல் உனக்காக எம். ஜெயலெட்சுமி எழுதும் தொடர் நாடகம் 5-12-77-இல் பகுதி 7 12-12-77-இல் பகுதி 8.

இதர நிகழ்ச்சிகள்

(ஞாயிறுதோறும் காலை 9 மணிக்கு இளைஞர் உலகம், காலை 10 மணிக்குப் பூச்சரம், பிற்பகல் 3 மணிக்கு நாடகம் பிறக்கிறது.

திரை மலர்

புதிய திரைப்படக் காட்சிகள், நேயர்கள் பங்கு பெறும் பரிசு அங்கமான "திரைப்புதிர்" ஆகிய சுவையான அம்சங்களைக் கொண்ட "திரைமலர்" நிகழ்ச்சி, சனிக்கிழமைதோறும் மாலை 6-31க்கு ஒலியேறுகிறது. தயாரிப்பு எல். ராமன்.

(சோழர் காலத்தில் பூம்புகாரிலிருந்து வெளியிடப்பட்ட "தின ஓலை" என்ற நாளிதழிலிருந்து எடுக்கப்பட்டவை)

அரங்கேற்ற அழைப்பிதழ்

அன்புடையீர்,

எதிர்வரும் நள ஆண்டு வைகாசித் திங்கள் 3-ஆம் நாள் (ஆங்கிலம் 11-5-171) வெள்ளிக்கிழமை மாலை மணி 6.30க்குச் சோழப் பேரரசர் முன்னிலையில், தலையரங்கில் என் புதல்வி செல்வி மாதவியின் நடன அரங்கேற்றம் நடைபெறவுள்ளது. அனைவரும் வருகை தருமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் நல்வரவை நாடும்

6-5-171 சித்திராபதி
பூம்புகார்

வரவேற்பு விழா

பேரன்புடையீர்,

பூம்புகார் கண்டெடுத்த புதுமைச் செல்வி, நடனமணி குமாரி மாதவிக்குப் பூம்புகார் கலைவளர் மன்றத்தின் சார்பில் எலும்பூர் சதையனார் அவர்கள் தலைமையில் வரவேற்பு விழா நடைபெறும். அவ்வமயம் சதையூர் எலும்பனார் அவர்கள் குமாரி மாதவி-க்கு "நடனப்பேரொளி" எனும் பட்டம் வழங்கி. சிறப்பிப்பார்கள்.

அனைவரும் திரண்டு வருக!

நாள்: 14-5-171- திங்கட்கிழமை

நேரம்: மாலை மணி 5.30

இடம்: பாவை மண்டபம், பூம்புகார்

இங்ஙனம்
ஆ. இளநாகன்,
செயலாளர்,
பூம்புகார் கலைவளர் மன்றம்

மலேசிய ரசிகர்களுக்கு மாபெரும் கலைவிருந்து

சோழநாட்டின் தலைசிறந்த நாட்டிய நட்சத்திரமும், "நடனப்பேரொளி", "நடனச் சீரொளி" எனப் பட்டங்கள் பல பெற்றவருமான

நடனச் செல்வி குமாரி மாதவி

பதினறு பேர் கொண்ட தம் கலைக்குழுவோடு மலேசியாவுக்கு வருகைதரவிருக்கிறார்.



நடனம்: குமாரி மாதவி குழுவினர்
மெல்லிசை: "கானல்வரி" புகழ் பி. எம். கோவலன்
இசை: பட்டினப்பாக்கம் இடிமுழக்கம் இசைக்குழு
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: சீத்தலைச் சாத்தனார்

கோலாலம்பூரில் முதல் நிகழ்ச்சியை விரைவில் எதிர்பாருங்கள்!

நாள்: 10-6-171 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை மணி 7.00
இடம்: நெகாரா அரங்கம்
கட்டணம்: $20.00, $15.00, $10.00

பிற இடங்களில் நிகழ்ச்சியை நடத்த விரும்புவோர் உடன் தொடர்பு கொள்க:

கலைமயம் புரடக்ஷன்ஸ்,
6789, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான்,
கோலாலம்பூர் தொலைபேசி: 00001

(கோலாலம்பூரிலிருந்து 1806 ஆண்டுகளுக்கு முன்பு பிரசுரமான "தமிழ்க்குரல்" நாளேட்டிலிருந்து எடுக்கப்பட்டவை)

பாராட்டு விருந்து

பெருந்தகையீர்,

தமிழ்க்கலைக்குப் புத்துயிரூட்டவும் கலைப்பணியாற்றவும் மலேசியநாடு வந்திருக்கும் குமாரி மாதவிக்கு எதிர்வரும் 16.5.171 புதன்கிழமை மாலை மணி 6.00க்குக் கோலாலம்பூர் ஒருசுவை உணவகத்தில் மலேசிய வளர்கலை மன்றத்தின் சார்பில் "பல்கலைக்காவலர் படிதாண்டாசாமி" அவர்கள் தலைமையில் பாராட்டு விருந்தும், "நடனச்சீரொளி" எனும் விருதளிப்பு விழாவும் சிறப்புற நடைபெறும்.

அனைவரும் வாரீர்!

இன்னணம்
சு. பெருவளத்தான்,
செயலாளர்,
மலேசிய வளர்கலை மன்றம்

